RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER
FREE
PAPER - 07 ♦ ISSUE - 145 ♦ 13 FRIDAY MAY 2011

Multitop Accountants
HSMP TIER 1
• Income certification
• Accounts
போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள உடனே நாடுங்கள்
Call Naren on
02089021271/07828396651

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




ASTA SKILLS COLLEGE
ESOL Skills For Life with Citizenship
Asta CITIZENSHIP TEST
ILR and Nationality Citizenship applications
சனி மற்றும் ஞாயிறுகளிலும் Esol வகுப்புகள் உண்டு.
Esol Citizenshipக்குத் தேவையான தகுதிகள் கற்றுத் தரப்படும்.
Knowledge of language and life in Uk
Nationality citizenship, ILR(PR)
Accredited courses
Home office Recognised courses
ASTA : Trident Business Centre, 89 Bickersteth Road, Tooting, London, SW17 9SH
Tel; 020 8355 3453 Mob; 07958 178321

AKILAN ENTERPRISES
உங்களுக்குத் வைபவங்களுக்குத் தேவையான
• திருமண மாலை
• ஆண்டாள் மாலை
• மல்லிகைப்பூ சரம்
உங்கள் அனைத்து விசேஷங்களுக்கும் Video & Photo Digital முறையில் சிறந்த முறையில் எடுத்து தரப்படும்.
போன்றவற்றை பெற்றுக்கொள்ள உடன் அழையுங்கள்...
274 High Street North, Manor Park, London E12 6SA
Tel : 020 8548 0033 / Mob: 079 5765 3005

» June 2011 ஆண்டுடன் வதிவிடம் (Legacy) தொடர்பான திட்டம் முடிவுக்கு வருகிறது.
» ஆகவே March 2007க்கு முன் அகதி அந்தஸ்து கோரி, நிராகரிக்கப்பட்டோருக்கு இலவச ஆலோசனை விண்ணப்பம் செய்து நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும்.
1) 4 Passport size photos
2) Proof of Address 3) Home office Details with Family details ஆகிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
Opening Days : Monday to Saturday
11-13, South Road, Southall UB1 1SU
07870 763 570 / 020 8574 0666
VINCENT SOLICITORS

Sarasas Restarurant
(Sri Lankan & South Indian)
Specialist in Dosa
தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டிநாட், தந்தூரி மற்றும் சைனீஸ் உணவு வகைகளை சுவையுடன் உண்டு மகிழ வாருங்கள்.
Lunch Offer Starts From £3.25
(Monday – Thursday 12.00 – 15.30)
We do out door Catering for wedding & other parties South Indian, North Indian, Srilankan, Tandoori, Chettinad, Chinese
Tel: 020 8561 8188
630- 634 Uxbridge Rd, Hayes, Middlesex UB4 0RY, UK
web:www.sarasasrestaurant.com

இனியும் குழந்தைப் பாக்கியம் இல்லை என்ற கவலையை விடுங்கள்!
20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களுடன் தொடர்புகொண்டு உங்கள் கவலைகளை இன்றே தீர்த்திடுங்கள்
HSFC
HARLEY STREET FERTILITY CLINIC
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

ADORA & ASSOCIATES
Accountants & Business Advisors
Providing professional services since 1996
உங்கள் சேவையில் 15 வருட காலத்துக்கு மேலாக....
மிகக்குறைந்த கட்டணம் - மனம் நிறைந்த சேவை
FREE COMPANY FORMATION & FREE INITIAL START UP ADVICE
புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க எண்ணுகிறீர்களா? அல்லது ஏற்கனவே உங்களுக்கு இருக்கும் வியாபாரம் கணக்காளரை (Accountant) மாற்ற ஆலோசிக்கிறீர்களா? கவலை வேண்டாம்! சட்டரீதியான வரிக்குறைப்பு மூலம் உங்கள் பணத்தை மீதப்படுத்துவோம். இன்றே அழையுங்கள்!
We will save you money not only by charging low fees but also by advising you on legitimate tax cuts.
மற்றும் உங்கள் மோட்கேஜ் ஒழுங்குகள் (Mortgages), மற்றும் காப்புறுதி (Insurance) போன்ற சேவைகளையும் ஒழுங்கமைத்து தர காத்திருக்கிறோம்.
Contact: Mr P E Anantharaj B.com(Hons),FFA,FFTA,CeMAP
Our Services:
• VAT
• Book- keeping
• Payroll
• Company
• Tax Returns
• Business Plans
• Bank Account
• Personal Tax Returns
• CIS Vouchers
• Year End Accounts
• Company Formation
FREE PHONE: 080 0085 2908 | Mobile: 07916177513 | Email: adorafinancial@aol.com
AA Accountancy & IMS LTD, ADORA HOUSE, 4 SCARSDALE ROAD, HARROW,MIDDLESEX,HA2 8LW

RAM SALES LETTINGS MANAGEMENT MORTGAGES
!! LANDLORDS!!
ARE YOU LOOKING FOR A PROFESSIONAL AGENT WHO WOULD BE ABLE TO ASSIST YOU TO SELL OR RENT YOUR PROPERTY?
GIVE US A TRY...
LET US MAKE YOU FEEL COMPLETELY RELAXED...
"WE'RE LOOKING FOR ALL SORTS OR PROPERTIES FOR OUR WAITING PROFESSIONAL TENANTS"
Give us a call today on...
020 8550 8788



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**



- Maths & English Classes for 4- 16 years
- Challenging Individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports

LEARNA

• Individualised • Interactive • Inspiring

Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

Learnies

0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU



airfare direct

www.airfare-di
Call us on
020 8090

JET AIRWAYS
KUWAIT AIRWAYS
GULF AIR

Other Airline's Special Fares to Colombo

Oman Air £210 Jet Airways £190
Gulf Air £190 Kuwait Airways £190

Special package for Umra & Colombo on Saudi Airlines

SriLankan Srila Air

Colombo....
Chennai.....
Kochi.........
Trivandrum
Bombay.....
Delhi..........



M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

IMMIGRATION
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

PERSONAL INJURY
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

CONVEYANCING
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

FAMILY LAW
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration



SPICELAND ன்

ELLALAN SUPER MARKET எல்லாளன்

மிக விரைவில்........

SPICELAND
FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY



Off Licence
மீன் வகைகள்
பலசரக்கு வகைகள்
இறைச்சி வகைகள்
இலங்கை, இந்திய
மளிகைப் பொருட்கள்

Tel: 020 6381 7485

Group of Spice Land
234- 236, London Road,
Croydon CR0 2TF



RND
JEWELLERS



தனிப்பட்ட தகவல்கள் இரகசியமாக காக்கப்படும்.
தரமும், உத்தரவாதமும் மிகக் குறைந்த கட்டணத்தில்

Pawnbrokers and Cheques cashed

**Private and Confidential Services**

HIGHEST CASH LOANS ON GOLD JEWELLERY,
LOWEST INTEREST CHARGES

- Cheques Cashed - Wages, Housing Benefit, Inland Revenue
- International Money Transfer & Foreign Exchange
- Professional Jewellery & Watch Repairs / Engraving

குறைந்த வட்டியில் தங்க நகைகள் மீது உடனடி பண உதவி
- சம்பளம் வீட்டு வாடகை நல உதவி, வருமான வரி
- வெளிநாடுகளுக்கு பணம் அனுப்பும் சேவை மற்றும் வெளிநாட்டு பணமாற்று சேவை
- நகைகள் மற்றும் கடிகார திருத்த வேலைகள், பெயர்கள் பதித்தல்.



315 Northolt Road, South Harrow,
Middlesex HA2 8JA
020 8869 0644



ESOL PBS SPOUSE TIER 1&2 FROM £200 PAY Once

மீண்டும் பிரித்தானியாவில்
எம்மை ஒன்று சேர்த்த
Training Connectக்கு
நன்றிகள்!!

- Natasha Patel



As part of Adult Learners week Training Connect is open weekends of 14th and 15th May and 21st and 22nd May so book your spaces before they're gone!

• ESOL with Citizenship • Points Based Test • Spouse Visa Test • Multilingual Staff
• You pay only once & we train you until you pass • Successfully trained over 28,000 students
• Courses from £200 • Certificates within 20 days • Online numeracy & literacy courses

TrainingConnect
www.trainingconnect.co.uk
• UK • India • China • Dubai • Russia •

National Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon.

Head Office: Vista Centre, 9th flr, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ To enrol or enquire about your nearest centre, call our team on 020 8538 0248



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கா



## வாழ்த்துக்கள்

ஒரு பேப்பர் ருக்காக சுகி எழுதிய 'ஆறடி நீளம்' மனதை ஆழமாக பாதித்து விட்டது. உணர்ச்சி பூர்வமான அருமையான வெளிப்பாடு. மனச்சாட்சியே இல்லாமல், கல்லறைகளை கூட காட்டுமிராண்டிதனமாக அழித்த ஒரு இனத்துவேச அரசிடமிருந்துகண்ணியமான தீர்வை எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்த்தனம்.

*- உமா மகாலிங்கம்.*

## மேடைக்கு அலையும்?

விளம்பரம் (பணம்) தருகிறேன் என்னைப் பேசவிடுங்கள் என தமிழ் ரேடியோக்கள், ரீவிகளை தொந்தரவு செய்கிறாராம் லண்டனில் வாழும் இரண்டெழுத்து தமிழ் ஜீ.பி. சமூகத்தில் தன்னுடைய செல்வாக்கை காட்டாவிட்டால் தங்கடை சப்போர்ட்டை நிப்பாட்டிப் போடுவம் என்று சிறிலங்கா தூதரகம் வற்புறுத்துகிறதோ? அல்லது சிறப்பு கைதியின் வேண்டுகோளோ என்னவோ தெரியாது, ஆட்களை கவர இரத்த தானம் செய்யவும் ரெடியாயிருக்கிறாராம் அவர். இந்தாளின்ரை இரத்தம் மற்றாக்களுக்குள் போனால் அதுகளின்ரை நிலை என்னவாகும்?

*- சிவசம்பு*

## ஏன் இந்த வேலை?

தாங்களும் தங்கடை பாடும் என்று இருக்கிற ஆட்களின்ரை படங்களை அட்டையிலை போட்டு அவர்களை ஏன் அவமதிக்கிறீர்கள். உங்களுடைய கமராக்காரரை பொது நிகழ்ச்சிகளுக்கு வரவிடாமல் தடை செய்ய வேண்டும். தயவு செய்து இதனை நிறுத்துங்கள்.

*- மாணிக்கம்*

## ஒற்றுமையாக ஒன்றும் செய்யமாட்டார்களா?

முள்ளிவாய்க்காலில் கூட்டாக இனப்படுகொலைக்கு ஆளாகிய மக்களை நினைவு கொள்வதிலும் எங்களுடைய அமைப்புகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வதை என்னவென்று சொல்வது? ஒரு அமைப்பு போர்க்குற்ற நாள் என்று சொல்ல, மற்றயது துக்க நாள் என்று சொல்கிறது. ஒன்று ட்ரபல்ஸ்கர் ஸ்குயர் வா என்கிறது மற்றது ஜெனிவாவுக்கு வா என்கிறது. இன்னொண்டு 19ம் திகதிதான் நினைவு கூரவேண்டும் என்று சொல்கிறது. இதிலும் ஏன் குழப்புகிறார்கள்?

*- இரவீந்திரன்*

## பாபாவுக்கு ஒரு அஞ்சலி!

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு கைக்கடிகாரம், கணையாழி, பொற் சங்கிலி போன்றவற்றை வருவித்துக் கொடுத்த, எண்ணற்ற மக்களின் நோய் நொடிகளை மாற்றிய பகவான் சிறி சத்தியபாபாவுக்கு எனது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறேன். பாபா போன்ற ஒரு அவதாரத்தை நான் என் வாழ்நாளில் காணவில்லை.

*- சிவரமணி (சாயினி)*

## எங்களது எம்.பி. எங்கே?

லண்டன் வடக்கு - கிழக்கு பகுதியில் நாடுகடந்த அரசாங்கத்தின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஆர்த்தி ஆறுமுகம் என்பவரை ஒரு பொது நிகழ்விலும் காண முடிவதில்லை. ஊடகங்களிலும் அவர் பற்றி ஒன்றும் வருவதில்லை. அவர் இப்போதும் எம்.பி. ஆக இருக்கிறாரா? அல்லது இல்லையா? கனடா பாராளுமன்றத்திற்கு தெரிவான ராதிகா போல் இவர்களால் செயற்பட முடியாதா?

*- வெறுப்பில் இருக்கும் சேந்தன்*

## தீபம் ரீவியில் அஞ்சாம் படை

லண்டனிலை இருக்கிற ஒட்டுப் படையள் ஒட்டாத படையள் எல்லாம் தீபம் ரீவியிலை மூஞ்சியை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். அதுவும் ஒரு வழிக்கு நல்லதுதான் இந்த மூஞ்சிகளும் மக்களுக்கு தெரிஞ்சிருக்க வேண்டும். சீட்டுப்போட்டு இலட்சக்கணக்கிலை ஆட்களை ஏமாத்தின சிவலிங்கம் மாதிரியான ஆட்கள் ரிவியிலை வந்தால்தான் மக்களால் இவையளை இனங்காண முடியும். இவங்களும் மக்களை லேசிலை சுத்த முடியாது.

*- உருத்திரா*

## அரசியல் தஞ்சம்

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பல விடுதலைப் புலி முக்கியஸ்தர்கள், திடீரென்று புலம்பெயர் நாடுகளில் தோன்றி தேசியம் பேசுவது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது. 'நான் வன்னியில் தலைவருடன் நின்றனான்..'- என்று கூறிக்கொண்டு நிறையப் பேர் ஐரோப்பாவில் தற்பொழுது அரசியல் செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.தலைவருடன் நின்ற நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்? ஏன் தலைவரை விட்டுவிட்டு இங்கு வந்தீர்கள்? இது போன்ற கேள்விகளை நாங்களும் கேட்பதில்லை. அதற்கான பதிலை அவர்களும் சொல்வதில்லை.

*- நிராஜ் டேவிட்*

## பகவான் நினைவு மண்டபம்

பகவான் சத்திய சாய்பாபாவுக்கு ஒரு நினைவு மண்டபத்தை நிறுவ லண்டனில் உள்ள அவர்களது பக்தர்கள் முன்வரவேண்டும். இவ்விடயத்தை எமது கவுன்சிலர் லண்டன் பாபா அவர்கள் கவனத்தில் எடுத்து செயற்படுவார் என நம்புகிறேன். அவரது தொடர்பு விபரங்களைத் தந்துதவவும்.

*- நற்குணம்*

## உரிமை கேட்கும் நம் இனம்

ஒரு உரிமை கேட்கும் இனத்திற்கு ஆயுத போராட்டத்தை விட, அரசியல் போராட்டம் கடினமானது. ஆனால், நாம் அதை செய்தே ஆகவேண்டிய நிலையில் உள்ளோம். அந்த வகையில் எமது அரசியல் அமைப்பான நா.க.அ. பல சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளது, ஆனால் மக்களாகிய நாங்கள் அவர்களுடன் இணைந்து, தேவையான இடத்தில் கேள்வி கேட்டு, அந்த சிறுபிள்ளையை வளர்க்கவேண்டிய தேவை உள்ளது. இந்த உள்வீட்டு பிரச்சனைகளை நா.க.அ. சுமுகமாக தீர்த்து ஒரு முன்னேற்ற வழியில் செல்லும் என நம்புவோம்.

*- அசூதா*

## ஊரின் மயக்கம்

சென்ற இதழில் "பனங்கள்ளு" பற்றி திரு பா.வை. ஜெயபாலன் வாய் சொட்ட சொட்ட எழுதிய ஊரின் வாசம் படிக்கப் படிக்க மயக்கம் தானாகவே தலைக்கேறியது. ஜெயபாலன் மட்டுமல்ல அதன் ருசியை அனுபவிப்பதற்காக 10 மைல்கள் சைக்கிளில் நண்பர்களுடன் சென்ற ஞாபகம் வருகிறதே. சமீபத்தில் திரு. ஜெயபாலன் அவர்களை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது கள்ளைக் குடித்த அந்த மூஞ்சி அப்படியே இருப்பது எப்படி? (மன்னிக்கவும் - நகைச்சுவைக்காக கூறும் இந்த நளின அறிமுகத்தை திரு. ஜெயபாலன் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார் என நம்புகிறேன்).

*- உமாமகாலிங்கம்*

## இந்தியா ஆட்சி

இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? தமிழ் மக்களுக்கு நல்லது நடந்தால்சரி.கண்ணாடியை விட நல்லவரா? பூசணிக்காய் பாப்பம்.

*- குட்டி*

# சர்வதேசமும் கத்தரிக்காயும்.....

## பாகம் - இரண்டு

**நெடுக்கால போவான்** *(யாழில்)*

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் நல்ல வழியில் சென்று கொண்டிருந்த போது.. அமெரிக்கா குறுக்கே இழுத்து நியோர்க்கில் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தைக் கூட்டியது. ஜப்பானிலும் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை தட்டிக் கழித்துக் கொண்டு ஒரு கூட்டத்தைக் கூட்டியது.

சர்வதேசத்திற்கு எமது பிரச்சனையை எமது விருப்புக்குரிய முறையில் தீர்க்க விடுதலைப்புலிகள் பல சந்தர்ப்பங்களை அளித்தனர். சர்வதேச அரசியல் அமைப்புக்களோடு கலந்தாலோசித்து ஒரு இடைக்கால நிர்வாக அலகு தொடர்பிலும் விடுதலைப்புலிகள் ஒரு தீர்வை முன் வைத்தனர். எல்லாம் தட்டிக்கழிக்கப்பட்டு விட்டன.

இப்போ.. பேரழிவுகளுக்குள் ஒரு இனத்தை தள்ளிவிட்டு அதற்கு மருந்து பூசுகிறோம்.. என்று மீண்டும் எம்மை அடக்குமுறை ஆட்சிக்கு அடிபணியக் கேட்டால் சர்வதேசம் கேட்கிறது அடிபணிந்து தான் ஆக வேண்டும் என்று பரிந்துரைக்க முடியாது. நாம் மாற்று இராஜதந்திர வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

சர்வதேசம் என்ற அமெரிக்க சார்பு மேற்கு நாடுகளை முழுமையாக நம்புவதும் நமக்கு ஆபத்தானது. ஏனெனில் இவர்களுக்கும் எமக்கு பேரிடர்களை ஏற்படுத்தியதில் பங்குண்டு.

13ம் திருத்தச் சட்டத்துக்குள் எமக்கு தீர்வு அமைய முடியாது. சர்வதேசம் அதைச் செய்தால் அதனை தமிழர்கள் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை.

சர்வதேசம் எமக்கு உண்மையில் உதவ முன் வந்தால்...

- முதலில் ஐநா சபையின் போர் குற்ற விசாரணையை முன்னெடுக்க வேண்டும். அதற்காக தீர்மானங்களை ஐநாவில் இயற்றி அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- அரசியல் தீர்வு பற்றி தமிழர் தரப்புக்களோடு ஒரு முழுமையான பேச்சை ஆரம்பிக்க வேண்டும். சிறீலங்கா அரசையும் அதற்கு வற்புறுத்த வேண்டும். இணைத் தலைமை நாடுகளின் கூட்டமைப்பை மீண்டும் புதுப்பிக்கலாம்... அவற்றைக் கொண்டு பேச்சுக்கள் விடுபட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால நிர்வாக அமைப்பு மற்றும் நிரந்தர அரசியல் தீர்வுக்கான யோசனைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் அக்கறை செய்வதோடு.. தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியை தாங்கள் தீர்மானிக்க கூடிய வகையில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இருந்து படை விலக்கல் செய்வதோடு ஐநா கண்காணிப்பில் தேர்தல் நடத்தி மக்கள் விருப்பை அறிய வேண்டும்.
- போரில் சரணடைந்த மற்றும் அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்ய சர்வதேசமும் ஐநாவும் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்.
- சிறீலங்கா அரச ஆதரவு ஆயுதக்குழுக்கள் ஆயுத ஒப்படைப்பை செய்ய ஐநா ஏற்பாடு செய்வதோடு.. அதனை கண்காணிக்கவும் வேண்டும்.
- முறையான ஜனநாயகம் வழிமுறைகள் தமிழர் பிரதேசங்களில் அமைய வகை செய்ய வேண்டும்.
- போரால் அழிந்து போன கட்டுமானங்களை நிர்வாக மையங்களை பொதுமக்களின் சொத்துக்களை மீளப் புனரமைக்க சர்வதேச சமூகம் அதன் நேரடிக் கண்காணிப்பின் கீழ் உதவிகளை திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதனை இணைத்தலைமை நாடுகள் பொறுப்பேற்று செய்ய வேண்டும்.
- போரில் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவியோடு ஐந்து ஆண்டு கால மீட்சித் திட்டம் கொண்டு வரப்பட்டு அவர்கள் சமூக.. மற்றும் பொருளியல் ரீதியில் மற்றவர்களுக்கு ஈடாக வாழவும் தமது அரசியல் உரிமை பற்றி தீர்மானிக்கக் கூடிய வகையிலும் அவர்களை சாதாரண வாழ்க்கை முறைக்கு கொண்டு வர உதவ வேண்டும்.

*(தொடர்ச்சி 11ம் பக்கம்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, MAY 13, 2011, ISSUE 145

## செயற்பட வேண்டிய தருணம்!

முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர்களின் விடுதலைப்போர் முடக்கப்பட்டபோது, யாருமற்ற அநாதைகள் போன்ற உணர்வு உலகங்கெங்கும் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டது. வரலாற்றில் என்றுமே சந்தித்திராத அழிவினைச் சந்தித்தவர்களுக்கு வழி காட்டவென ஒரு வலுவான தலைமை இருக்கவில்லை. அதுவரை உறுதியாக இருந்தவர்களில் பலர் குழப்பத்திற்கு உள்ளானார்கள். முரண்பாடுகள் தலை தூக்க ஆரம்பித்தன. நாடுகள், சர்வதேச அமைப்புகள், சட்டவிதிகள் எல்லாமே பயனற்றவையாகத் தென்பட்டன. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிங்களப் பேரினவாதத்திற்கு அடிபணியும் அரசியலை நியாயப்படுத்தும் முயற்சிகளில் உள்நோக்கம் கொண்ட பல்வேறு சக்திகள் முனைப்புடன் செயற்பட்டன.

இத்தகைய பின்னணியில், சிறிலங்கா அரசு என்பது யாராலும் அசைக்க முடியாத வல்லாதிக்க சக்தி போன்ற விம்பத்தை உருவாக்கி, தமிழ் மக்களை அவர்களது விருப்புடனேயே இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்குவதற்கு சிங்கள ஆட்சி மையமும் அதனை அண்டிப் பிழைக்கும் தமிழர்களும் முற்பட்டனர். புனர்வாழ்வு, பொருண்மிய மேம்பாடு என்ற போர்வையில் ஈழத்தமிழர்களது அரசியல் அபிலாசைகளை நிரந்தரமாகவே புதைத்துவிடும் எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கைத் தீவில், சர்வ அதிகாரம் கொண்ட அரச தலைவரும், அரசியல் மயப்படுத்தப்பட்ட நீதி நிறுவனங்களும், இராணுவ நெருக்குவாரங்களைக் கொண்டு ஆட்சியை தொடர்ந்தாலும், சர்வதேச மட்டத்தில் சிறிலங்காவின் கோர முகம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. சர்வதேச மனிதவுரிமை நிறுவனங்கள், ஊடகங்கள், விக்கிலீக்ஸ் என்பன இறுதியுத்தம் பற்றிய அறியப்படாத தகவல்களை வெளியிட்டு வருகின்றன. இத்தகவல்களை உறுதிப்படுத்துவதாக ஐ.நா. நிபுணர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை அமைந்துள்ளது.

இப்போது நீதி விசாரணையை வேண்டி நிற்கும் மேற்கத்தைய நாடுகள், சிறிலங்கா அரசாங்கத்தின் போருக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வந்தன. போரை நிறுத்தி மக்களை அழிவுகளிலிருந்து காப்பாற்றுவதற்கு, அவை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. அவர்களது அரசியல் மூலோபாய நகர்வுகளின் தொடர்ச்சியாகவே தற்போதைய நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. இருப்பினும் இந்நகர்வுகள் நாகரிக உலகம் போற்று மனிதவுரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு உட்பட்டது என்பதனை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இப்புதிய சூழலை அனுகூலமாக ஏற்றுக்கொண்டு எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

## ஒரு பேப்பர்

வணக்கம்!

முள்ளிவாய்க்கால் பேரழிவுகளை மனதிற்கொள்வதற்காகவும், அங்கு அழிக்கப்பட்டவர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காகவும் இந்த பேப்பரை அதற்காக அர்ப்பணித்துள்ளோம். ஆக்கங்களை அனுப்பியவர்களுக்கு மிக்க நன்றி.

போன பேப்பரிலை போடப்பட்ட அட்டைப்படம் கொஞ்சம் சர்ச்சை கிழப்பியிட்டுது. விசயம் ஒண்டும் பெரிதாக இல்லை. பொது நிகழ்வொன்றில் எடுக்கப்பட்ட படத்திலுள்ளவர்கள் எங்களது ஆசிரியர் குழுவில் உள்ளவர்களுக்கு தெரிந்த ஆக்கள். ஆனால் படம் எடுத்தவருக்கோ அல்லது அட்டைப்பட வடிவமைப்புச் செய்யிறவைக்கு அவையளை தெரியாது. ஆகவே இது ஏதேச்சையாக தெரிவு செய்த படம். வேறை எந்த உள்நோக்கமும் இல்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களும் அது மனவருத்தத்தை தந்திருந்தால் அதுக்காக எங்களை மன வருத்தத்தை தெரிவிக்கிறம்.

***ஒரு பேப்பர்*** ஆரம்பித்த நாளிலிருந்து, எமது வாழ்க்கை முறை, சமூக நிகழ்வுகளை காட்டுகிற மாதிரியான படங்களையை அட்டையில் பிரசுரித்துக் கொண்டு வாறம் எண்டது எங்கடை நீண்ட கால வாசகர்களுக்குத் தெரியும். சினிமா நடிகைகள், புகழ் பெற்றவர்கள் அல்லது எங்களுக்கு விளம்பரம் தரக்கூடிய ?ட்கள் போன்றவர்களின் படங்களை நாங்கள் அட்டையில் பிரசுரிக்கிறதில்லை.

நாங்கள் பிரசுரிக்கிற கட்டுரையள் சிலதுகளிலை பாவிக்கிற மொழி சரியில்லை. ஆட்களை கடுமையாய் சாடுகிறதாய் இருக்குது எண்டு சிலர் குறைப்படியினம். ஆனால் இன்னும் சிலர் இப்பிடி எழுதினால்தான் உறைக்கும், இலக்கியமாய் சொல்லமால் இதமாய் பதமாய் சொல்லுங்கோ எண்டு சிலர் சொல்கிறார்கள். இதிலை எது சரி எண்டு தெரியேல்லை. ஆனால் மொழி நடையை கவனித்து எழுதிற கட்டுரையளை கனக்க பேர் கவனிக்கிறதில்லை எண்டது நாங்கள் அனுபவத்திலை கண்ட உண்மை. இது பிழை எண்டால் சொல்லுங்கோ!

முந்தின மாதிரி சிறுகதையளை ஏன் பிரசுரிக்கிறதில்லை எண்டு சிலர் கேட்டபடியால் சொல்லிறம். பக்கங்கள் போதாமையாலைதான் சிறுகதையள் பிரசுரிக்கிறதில்லை. முந்தி நாப்பதெட்டு பக்கங்களிலை வரேக்கை பிரசுரிச்சனாங்கள். இப்ப முப்பதிரெண்டாக குறைச்சபடியாலைதான இந்தச் சிக்கல். இருந்தாலும் அவ்வப்பபோது சிறுகதையளையும் பிரசுரிக்க முயற்சி எடுக்கிறம்.

***ஒரு பேப்பர்*** ரின் வடிவமைப்பை மாற்றலாம் என யோசிக்கிறம். உங்களுக்கு ஏதேனும் ஐடியா தென்பட்டால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கோ.

வேறை என்ன? புதன்கிழமை *Trafalgar Square* க்கு வருவியள்தானே

சந்திப்பம்.

***ஒரு பேப்பர்*** காரன்கள்+காரிகள்

## UN Should Do More on Sri Lanka



By Dr. Karunyan Arulanantham

An independent report on the conduct of the final months of the war in Sri Lanka that so many people have long asked for has finally been released by the United Nations.

It is an even-handed and devastating account of how Tamil people were brutalized by Sri Lanka's government and its military on the one hand, and the Tamil Tigers who claimed to be protecting them on the other.

But the Sri Lankan government began downplaying the U.N. report as inaccurate and biased weeks before it became public — and therein lies a fundamental problem to bringing lasting peace to the island: Colombo sees the search for truth and accountability as an exercise in spin control and denial, since so much blame lies at its doorstep.

Sri Lanka's national heritage party the Jathika Hela Urumaya (JHU) activists and Buddhist monks staged a peaceful sit in protest in Colombo, May 3, 2011 against the U.N. Secretary General Ban Ki Moon's advisory panel report against Sri Lanka.

The report called for the setting up of an independent investigation to inquire into alleged war crimes.

The U.N. report highlighted "credible allegations" that both the Sri Lankan army and Tamil Tiger rebels had been involved in violations that could amount to war crimes or crimes against humanity.

This fact underscores the need for a more formal and in-depth, international probe of Sri Lanka's 26-year war, and the need for the U.N. Security Council to play a more robust role in demanding that probe.

It is essential that the United States uses its leadership to push for an investigation to air the truth, and that other members of the Security Council do so as well.

The new U.N. report — an authoritative, 196-page look at the final months of the conflict, commissioned by U.N. Secretary General Ban Ki-moon — demonstrates why a fuller account is necessary.

The report confirmed what many in the international community had suspected.

In the closing days of the war, Sri Lankan government forces shelled hospitals and food distribution centers and gathered ethnic Tamil civilians in "no fire zones" and shelled those locations, all the while claiming a policy of "zero civilian casualties."

The report also condemns the Liberation Tiger Tamils of Eelam (LTTE) for grave transgressions, including the point-blank shooting of civilians attempting to flee the combat zone where they were used as human shields, and for forcefully enlisting child soldiers on a war that they were poised to lose.

This grim catalogue of atrocities is just the first step in the search for truth, and it shows why a deeper investigation is needed.In the war's final stages and its aftermath, tens of thousands of Tamil civilians were slaughtered. Survivors long for closure.

They search for a sense of justice, security and normalcy in a country whose Orwellian government continues to minimize the extent of damage and wrongdoing, dismissing dissenters as terrorists.

Although the U.N. report is a powerful indictment, the panel that wrote it serves only in an advisory role to Secretary General Ban.

Three well-respected international human rights attorneys wrote the U.N. report: Marzuki Darusman, the former attorney general of Indonesia and a member of the National Commission of Human Rights in Indonesia; Yasmin Sooka, who served as a commissioner for South Africa's Truth and Reconciliation Commission, which successfully paved the way for sustained peace in South Africa following the end of apartheid; and Steven Ratner, an international law expert, human rights attorney and University of Michigan law professor.

To launch a full-blown, international investigation of the war, Ban has said the Sri Lankan government must agree — which is unlikely — or the probe must be ordered by an inter-government body, such as the U.N. Security Council or the U.N. Human Rights Council.

Sri Lanka argues that it has set up its own Lesson's Learned and Reconciliation Commission (LLRC) to investigate the war, but no previous government-appointed panel has ever held anyone accountable, and the LLRC is widely regarded as a charade.

In fact, the new U.N. report says that the LLRC has no mandate for accountability.

The United States, which has stood on the sidelines of this conflict for too long and supports the LLRC process, should accept that judgment, demand justice for all Sri Lankans, and call for an impartial, international investigation.

And if the Sri Lankan government feels it has nothing to hide, it should welcome the expertise of the U.N. and its proven track record for ameliorating ethnic conflicts. An LLRC white-wash will not help achieve reconciliation. It will only fuel more division.

Thousands of innocent men, women and children were killed in the final months of the war. And 300,000 survivors, all Tamils, were subjected to internment, deprivations, sexual abuse and disappearances, all amounting to ethnic cleansing. These people and their families deserve to know who was responsible, and to have them held accountable.

As the most recent report recommended, the U.N. should investigate its own conduct in failing to protect the Tamil population. The United States must show the world it will not tolerate war crimes and crimes against humanity going uninvestigated and unpunished.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு கேடு வருமா? காங்கிரசுக்கு கேடு வருமா?

இந்தியா பல பொய்களைச் சொல்லிக் கொண்டு இலங்கைக்கு இனக்கொலைக்கான எல்லா உதவிகளையும் செய்தது.

### தமிழர் பிரச்சனைக்கு என்ன தீர்வு என்பது பற்றி இந்தியாவின் பொய்.

இலங்கைப் பிரச்சனைக்கு படைத்துறைத் தீர்வு இல்லை என்று அடிக்கடி வெளியில் பொய் சொல்லிக் கொண்டு இலங்கையில் ஒரு படைத்துறைத் தீர்வுக்கான எல்லா உதவிகளையும் இந்தியா செய்து வந்தது. இலங்கை போரிலிருந்து அமைதிக்கு என்ற புத்தகம் ஒன்றை நிதின் கோகலே என்பவர் எழுதியுள்ளார். அதில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில், இலங்கைக்கு இந்தியா எப்படியெல்லாம் இரகசியமாக உதவியது என்பது விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியக் கடற்படை அளித்த முக்கியமான புலனாய்வு தகவல் காரணமாகவே புலிகளின் ஆயுதக் கப்பல்கள் நிற்கும் இடம் பற்றிய தகவல்கள் இலங்கைக் கடற்படைக்குத் தெரிய வந்தது என்றும், பன்னிரண்டுக்கும் அதிகமான ஆயுதக் கப்பல்கள் அழிக்கப் பட்டதாகவும் நிதின் அதில் கூறியுள்ளார்.

### இலங்கைக்கு ஆயுத உதவி இல்லை என்ற இந்தியாவின் பொய்

இலங்கைக்கு தான் ஆயுத உதவி வழங்கவில்லை என்று சொல்லிக்கொண்டே இலங்கைக்கு ஆயுத உதவிகளையும் இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளையும் இந்தியா வழங்கி வந்தது. கிழக்கு இலங்கையில் உள்ள கருணா குழுவின் பயிற்சி முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த போது அதில் ஒரு இந்தியப் படைத்துறையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டார்.

### இலங்கையில் சமாதானம் வேண்டும் என்ற பொய்

இலங்கையில் சமாதானம் வேண்டும் என்று அடிக்கடி கூறிவந்த இந்தியா போரின் போது தனது படைகளை இரகசியமாக இலங்கைக்கு அனுப்பி போரில் நேரடியாக ஈடுபடவைத்தது. சார்க் மாநாட்டுக்கு இலங்கை சென்ற இந்தியப் பிரதமருக்கு பாதுகாப்பு வழங்க 3,000 மேற்பட்ட இந்தியப் படைகள் இலங்கை சென்றனர். அவர்கள் சென்றதன் நோக்கம் வேறு. போரின் போது ஈழத்துக்குள் பின்கதவால் நுழைந்த கொலை வெறி நாய்களின் தொகை 20,000 இற்கு மேல்.

### போர் நிறுத்தக் கோரிக்கைப் பொய்

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்துக் கொண்டு இந்தியா இலங்கைக்கு போருக்கான எல்லா உதவிகளையும் செய்தது. 2009 மே மாதத்திற்கு முன்னர் போரை முடிக்கக்கூடிய வகையில் போரைத் தீவிரப்படுத்தும்படி திரை மறைவில் இந்தியா இலங்கையை வலியுறுத்தி வந்தது. சிவ் சங்கர் மேனன், எம் கே நாராயணன், பிரணாப் முகர்ஜி போன்றோர் போரை தீவிரப்படுத்தி விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பை விரைவில் முடிப்பது எப்படி என்பவை பற்றி இலங்கைக்கு ஆலோசனை வழங்கவே தமிழர்களுக்கு எதிரான போர் நடந்த வேளை அடிக்கடி இலங்கை சென்று வந்தனர். காங்கிரசு ஆட்சியின் நோக்கம் 2009 மே மாதத்திற்கு முன்னர் இலங்கைப் போரை முடிக்க வேண்டும் என்பதே. இறுதிப்போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவி உயிர்கள் அநியாயமாகப் பலியாகப் போகின்றன என்று அறிந்து அமெரிக்கா தனது ஏழாவது கடற்படையை இலங்கை நோக்கி நகர்த்த ராஜபக்ச போர் நிறுத்தத்திற்கு சம்மதித்துவிட்டார் என்று பொய் சொன்னது யார்.

### இனக்கொலைப் பொய்

1983-ம் ஆண்டு இலங்கையில் நடந்த கலவரத்தை அப்போதைய பாரதப் பிரதம மந்திரி இந்திரா காந்தி ஒரு இனக்கொலை எனக் கூறினார். இந்தியச் சட்டவாளர்கள் அவையும் (Indian Bar Association) அதை ஒரு இனக் கொலை என்றே கூறியது. அன்று கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 10,000. ஆனால் இலங்கையில் இறுதிப் போரில் 300,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்திய பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினர் திரு ராஜா அவர்கள் மாநிலங்கள் அவையில் உரையாற்றும் போது இலங்கையில் நடந்தது இனக் கொலை எனக் கூறினார். அவர் பாவித்த இனக் கொலை என்னும் பதத்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிட்டார் அவைத் தலைவர். மாநிலங்கள் அவையில் பெரிய பூசணிக்காய் ஏன் சோற்றில் மறைக்கப் பட்டது?

### மனித உரிமைக் கழகத்தில் இந்தியாவின் பொய்.

இலங்கையில் நடந்த இறுதிப் போரில் மனித உரிமை மீறப்பட்டது என்பதால் இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் ஐரோப்பிய நாடுகளால் கொண்டுவரப்பட்டபோது அதை இலங்கைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமாக இந்தியா மாற்றியது. அங்கு உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி இலங்கை பயங்கரவாதத்தை ஒழித்தமையைப் பாராட்டிப் பொய் பேசினார். அவர் கூறியது பொய் என்பதை இலங்கைப் போரில் நடந்தவை தொடர்பாக பான் கீ மூன் நியமித்த மூவர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கை தெளிவு படுத்துகிறது. அது மட்டுமல்ல ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப் பேச்சாளர் கோர்டன் வெயிஸ் அவர்கள் இலங்கைப் போரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்திய உளவாளிகள் இருந்தமையால் இந்தியாவிற்கு அங்கு நடந்த போர்க் குற்றம் பற்றி நன்கு தெரியும் என்றார்.

இத்தனை பொய்களையும் சொல்லி 300,000 இற்கு மேற்பட்ட அப்பாவிகளின் கொலைக்கு காரணமாகியது இந்தியா.பொய் சொல்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றி ஒளவையார் இப்படிக் கூறுகிறார்:

“வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே  
பாதாள மூலி படருமே – மூதேவி  
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே  
மன்றோரம் சொன்னார் மனை”

ஒளவையார் சொன்ன இத்தனை கெடுதலும் இந்தியாவை ஆளும் காங்கிரசுக்கு வருமா? அல்லது அநியாய ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழாத இந்திய மக்களிற்கு வருமா?

*- வேல்தர்மா*

முள்ளி

வாய்க்காலுடன்

முற்றுப் பெற்று

விட்டதல்ல போர்!

வெள்ளி

முளைத்து

விடியல் வரும்

இருந்து பார்!

ஒரு பேப்பர

ORU PAPER

## National Reconciliation Efforts Another Cruel Exercise!

**By Periasamy Kanthavel**

As reported, the EU reiterates its view that an independent process to address these extremely serious allegations should contribute to strengthening the process of reconciliation and ensuring lasting peace and security in Sri Lanka. As the report says, the issue of accountability should be seen as an essential part of the process of national reconciliation. What a joke!

### A mask on Tamils

On 30th May 2006, the EU banned LTTE. Then there were 25 members in the EU; plus USA, UK, Australia, Canada, India and Malaysia, led to a total of 31 countries. This unexpected unfair move by the EU countries where most of the members had no knowledge of the Tamils struggle for their rights. This move gave the murderous Sri Lanka government the much needed propaganda stuff that, “ The LTTE is banned in 31 countries”. Obviously the government of UK was behind the move, instigated by the Indian Government. By banning LTTE as Terrorists the Imperialist Forces did put a mask on Tamils depriving them telling their point of view. This only led to the genocide of Tamils in Vanni.

By encouraging the most militarist elements in Colombo, the EU ban then, made the conflict more likely. While the LTTE was unfairly, universally painted in the international media as the aggressor, a shadowy coalition of anti-LTTE militia, sections of the military and various Sinhala extremist groups have been engaged in one provocation after another to undermine any peace talks. Expatriate Tamils in the UK have a sacred obligation to always remember that the UK government on 28th February, 2001 put the Liberation Tigers of Tamil Eelam (LTTE) on its list of terrorist organisations and this nasty act was hailed as a “diplomatic triumph” by the government of Sri Lanka. Further, the former Sri Lanka Monitoring Mission (SLMM) head, retired Brigadier General Ulf Henricsson, said that the EU ban on LTTE meant the Sri Lankan government thought it had "carte blanche" to take on the LTTE. He added, "I would say it's a mistake, it was a wrong decision"

In another recent press release, Mr Hague has said, “ This is a vital subject and it is crucial for the long-term health of Sri Lanka that these problems are addressed as a part of reconciliation for the long-term future and in bringing different communities together in Sri Lanka. Our Government strongly supported the commissioning of the report by the Secretary-General. We are considering that report carefully, but in the meantime we look to the Government of Sri Lanka to respond to it in detail and make it clear how they intend to proceed”

Mr. Hague should know that his statement is an desperate mere attempt to camouflage and an attempt to wash off the Tamil blood. There can never be a national reconciliation in Sri Lanka. No one wants it also. What is happening there is uninterrupted genocide, accelerated ethnic cleansing, and all other possible atrocities. Tamils live there in fear and hopelessness under the Sinhalese army in Occupation.

### Responsibility to Protect (R2P)

Barack Obama, who was favored by almost all national polls to be the president of the United States, saw the war in Sri Lanka when he expressed his sentiments at a Google Forum. Backed by the powerful and influential LTTE lobby in the West, which Sri Lanka was still struggling to combat, a psychology was being built to create a conducive atmosphere to apply the theory of Responsibility to Protect (R2P), full or in part, in Sri Lanka having laid a somewhat solid groundwork that the Sri Lankan administration was a blatant violator of human rights, practitioner of genocide on the Tamil minority. This was on Nov. 2nd 2008. Obama by this statement didn't damage his stand but increased. The, then Tony Blair's Labour government should have ignored India and supported R2P. Did they?

During the same campaign Hillary Clinton told a leading British newspaper that she would like a more 'nuanced' approach to armed non-state actors who were routinely dubbed as terrorists in the current war on terror. Some of these groups needed to be viewed differently, she said, and mentioned the Tamil Tigers as one group that deserved such consideration. In spite of all that the International community did go by the false propaganda of the Sri Lank government. and watched the fury of the genocide that took place and waited till the last Tamil in the fighting area of Vanni was killed.

The Sri Lankan government's war on the Tamils, which it has been waging openly for over three decades in order to crush their national aspirations, has witnessed every imaginable and unimaginable atrocity being committed - with the all too common argument of "war on terror". An accountability for the laws of war and violations and the history of the struggle will lead to separation. Tamils fouught for their motherland, self- rule and dignity. The international independant commission trial will naturally lead to separation and the birth of the Eelam nation and that is the just justice for Tamils, the victims of the genocidal war.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சாரதா

விளம்பரம்
சோபனா - தனா

அச்சு
தர்சினி (கனடா) - பானு

வடிவமைப்பு
மயூரன் - சுரேகா

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
பானு

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# நீங்கள் நடவுங்கள்

*'நீங்கள் இப்போது*
*நடந்துகொண்டிருக்கும் வீதியில் தான்*
*குழந்தை ஒன்று*
*பின்னந்தலையும் தாயும் இல்லாமல்*
*அழுதே இறந்தது*
*நீங்கள் நடவுங்கள்'*

இப்படிஒருகவிதை விஷ்ணுபுரம் சரவணன் என்பவர் ஆனந்தவிகடனில் எழுதியிருந்தார்.

அடுத்தவரிகள் இவ்வாறு சொல்கின்றன.

*'நீங்கள் இப்போது பார்க்கும்*
*வீட்டில் தான் போராளி ஒருத்தியை*
*நான்கைந்து பேர்*
*மொழிக்கலப்பற்றுப் புணந்தார்கள் ·*
*நீங்கள் நடவுங்கள்'*

இக்கவிதைமேலும் 31 வரிகள் நீட்டிற்று நிறைவுபடுகிறது. ஆனால் அதுநிறைவு அல்ல ஈழத்தமிழர் வாழ்வின் இரு கூறானவெட்டு, ஆற முடியாத தழும்பு, மறக்க கூடாத கொடூரம்,மன்னிக்க முடியாத அட்டூழியம்.

இதே ஆனந்தவிகடனில் யோ.கர்ணன் எழுதிய 'கடைசிச் சடலம்' என்ற சிறுகதை முள்ளிவாய்க்கால் அவலத்தையே சொன்னது நெஞ்சை மிக அலைக்கழித்த கதை அது. அக் கதை இவ்வாறு முடிகிறது.

'....நீரேரியைக் கடப்பதென்பது தோல்வியின் அடையாளமாகவே இருந்தது கைவிடப்ட்ட உணர்வாகவே என்னுள் எஞ்சியிருந்நதது 350,0000 க்கும்அதிகமான இலங்கைத்தமிழர் இருந்தும், ஆறரைக் கோடிக்கதிகமான இந்தியத்தமிழர் இருந்தும், 400 மில்லியனுக்கும் அதிகமாக இந்தஉலகத்தில் மனிதர்கள் இருந்தும்... மிகச் சரியாக இன்றிலிருந்து இரண்டு வருடங்களின் முன்புஓர் அனாதைபோலஉணர்ந்தேன்'.

அதே ஆனந்தவிகடனில் பா.திருமாவேலன் எழுதிய'முள்வேலி' என்ற கட்டுரை இவ்வாறே முடிகிறது.

'...இளம் பெண்கள் மட்டுமே இன்று அவர்கள் விரும்பும் பண்டமாக இருக்கிறது சிங்களக் கரு தாங்கிய தமிழ் தாய் மடிகளாய் அவை மாறி ஈழக் கனவை இப்படியும் சிதைக்கலாம் என்று காட்டப் போகிறார்களாம்.. இனியாருக்குவேண்டும் நாடும் நாடு கடந்தும்? '

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

கவிதை,கட்டுரை,கதை என்ற மூன்று வடிவங்களிலும் ஈழத்தமிழர் அவலத்தைஆனந்தவிகடன் பிரசுரித்துள்ளது. இது இன்று நேற்றல்ல எப்பொழுமே ஆனந்தவிகடன் அதைச் செய்ததுண்டு.

ஆனந்தவிகடனுக்கு விளம்பரத்தை நான் செய்கிறேனோ என்றுயாரும் எண்ணலாம் அவர்களுக்கு என்னிடம் பதிலில்லைஆனால் சொல்ல ஒன்று உண்டு வெகுசனமட்டத்தில் ஈழத்தமிழர் அவலத்தைஅது தெடர்ந்து நேர்மையுடன் பேசிவருகிறது. மேலும் வரட்டுத்தனமானஉணர்ச்சி பொங்கும் படியான வார்த்தைகளும் அதனிடம் இல்லை. கண்ணீரையும் செந்நீரையும் கலந்த ஈரப்பற்றுள்ள எழுத்துஅது.

என்னசெய்கிறோம் நாம் திரும்ப திரும்ப எழுதுவது சலிப்புத்தட்டுகிறதுஎன்றாலும் சொல்வேன்.

சகல குழப்பங்களிலிருந்தும் நாம் விடுபட வேண்டும் வளமான பார்வையை வெளிப்படுத்த வேண்டும் மேலாக அரசியலாக அனைத்தையும் சிந்திக்கவேண்டும் இனி இப்போதைக்குஆயுதப்போர் தொடங்குமென்றோ அடுத்தகட்டஈழப்போர் வெடிக்கும் என்றோ சூளுரைப்பது முட்டாள் தனம். அதுயாரோயாரையோபேய்க்காட்ட சொல்லப்படுகிற ஒன்று. அந்த துர்க்கனவில் இருந்து விடுபட்டே ஆக வேண்டும்

இவை ஒருபுறம் இருக்க முள்ளிவாய்க்கால் அனர்த்தத்தின் இரண்டாம் ஆண்டுவரப்போகிறது. நாம் என்னசெய்யப் போகிறோம் பாராளுமன்றஉறுப்பினர்களை தூதரக அதிகாரிகளை வேறு நிறுவனத்தலைவர்களைஅழைப்போம் அவர்கள்ஆங்கிலத்தில் செற்பொழிவாற்றுவதைபாதியளவில் விளங்கி மீதியளவில் முழுசி எல்லோரும் கை தட்டக் கைதட்டி ஒப்பேற்றி மகிழ்வோம். வேண்டுமென்றால் ஒரு மலரஞ்சலி.

ஆனால் அப்படி நாங்கள் செய்வதிலும் பார்க்க ஆனந்த விகடன் செய்தது ஈரப்பற்றுள்ளதாக இருந்ததா இல்லையா?

ஜனவரி 14-கிட்டுநினைவுநாள் மே 18-முள்ளிவாய்க்கால் துக்கநாள் செப்ரெம்பர் 26-திலீபன் நினைவு நாள் நவம்பர் 27- மாவீரர் நாள். அவ்வாறு கொண்டாடியவுடன்எங்கள் கடமை முடிந்து விடுகிறது பின்பக்கத்து மண்ணைத் தட்டிவிட்டு எழுந்து போய்விடுவோம். தான்.

ஆனால் அவை தொற்றவைக்கப் படவேண்டிய நினைவுக் குறிப்புக்கள் என்ற அறிவு கிஞ்சித்தும் கிடையாது. தமிழர் மத்தியில் என்னஉணர்வை மேலெழச்செய்யப்போகிறோம், சர்வதேச சமூகத்துக்கு என்ன சொல்லப் போகிறோம், போராட்ட உணர்வை, தேசிய உணர்வை எப்படித் தக்க வைக்கப்போகிறோம், அரசியலாக இவற்றை எவ்வாறு அணுகப்போகிறோம்,என்பவற்றை யெல்லாம் நாம் யோசித்தது கிடையாது.

என்பணிபத்திஎழுதுவது இந்நிகழ்வுகளை நடத்துவோர் பணி அதனைத் திறம்பட நடாத்துவது.

*'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன் கண் விடல்'*

என்று ஒரு குறள் உண்டு 'இதனை இவன் தான் செய்வான் என்றால் அதனை அவனிடமே விடு' என்பது அதன் பொருள். எல்லா விடயங்களுக்கும் அது பொருந்தும் புரிகிறதா நண்பர்களே?

எது எப்படியோ போகட்டும் உங்கள் பாட்டில் நீங்கள் நடவுங்கள்.

# அன்றும் இன்றும் ஆறு தவறுகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு ரோமாபுரியில் வாழ்ந்த மார்கஸ் டுல்லியஸ் சிசரோ (Marcus Tullius Cicero) (கி.மு106-43) ஒரு மிகச் சிறந்த பேச்சாளர், வக்கீல், அரசியலறிஞர், எழுத்தாளர், கவிஞர், தத்துவஞானி மற்றும் விமரிசகர். அவர் அன்றைய மனிதர்களின் ஆறு தவறுகளை முட்டாள்தனமானவை என்று கூறியிருக்கிறார். கால ஓட்டத்தில் எத்தனையோ மாற்றங்கள் வந்து விட்ட போதும் மனிதனிடத்தில் இருந்து இந்த தவறுகள் அகற்றப்படவில்லை. இன்றும் இன்றைய மனிதர்களிடத்திலும் நாம் அந்த தவறுகளைப் பார்க்க முடிகிறது என்பது வருத்தத்திற்குரியது தான்.

சிசரோ அவருடைய கூர்மையான அறிவால் அன்று கண்டுணர்ந்து இன்றும் நம்மிடையே இருக்கின்ற அந்த தவறுகள் இவை தான்:

*1) அடுத்தவர்களை பின்னுக்குத் தள்ளியோ, அழித்தோ தான் சொந்த நலனைப் பெற முடியும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருப்பது:*

இது குறுகிய காலத்திற்குப் பலன் தருவது போலத்தோன்றினாலும் நீண்ட காலத்திற்கு சிறிதும் உதவாத ஒரு வழியாகும். இயல்பாக நியாயமான வழிகளில் நாம் முன்னேறும் போது மற்றவர்களை முந்திக் கொண்டு செல்வது நேர்வழி மட்டுமல்ல நம் வளர்ச்சியும் இந்த வழியில் நிச்சயமானதாக இருக்கிறது. மேலும் அணைவரையும் பின்னுக்குத் தள்ளுவதோ, முன்னேற விடாது தடுப்பதோ நீண்ட காலத்திற்கு முடிகிற விஷயம் அல்ல. எந்தத் துறையிலும், வாழ்க்கையிலும் வெற்றி பெற விரும்புவோர் இந்தத் தவறான கருத்தை விட்டு விடுவது புத்திசாலித்தனம்.

*2) மாற்றவோ, சரிசெய்யவோ முடியாத விஷயங்களுக்காகக் கவலைப்படுவது:*

ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையிலும் மாற்றவோ, சரி செய்யவோ முடியாத விஷயங்கள் கண்டிப்பாக இருக்கவே செய்கின்றன. அதற்கெல்லாம் கவலைப்படுவதும், கண்ணீர் விடுவதும் எந்த விதத்திலும் நமக்கு உதவப்போவதில்லை. நமக்காகப் பரிதாபப்பட்டு எதுவும் மாறி விடப் போவதில்லை. மாற்ற முடியாத விஷயங்களை ஏற்றுக் கொள்ளும் அளவு மனம் இல்லா விட்டாலும் அவற்றை சகித்துக் கொள்ளும் அளவாவது பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*3) நம்மால் செய்ய முடியாத செயல்களை யாராலும் செய்ய முடியாது என்று நினைப்பது:*

நம் அறிவுக்கும் சக்திக்கும் எட்டாத விஷயங்கள் ஏராளமாகவே இருக்கின்றன. இன்று இருக்கும் எத்தனையோ அறிவியல் அற்புதங்கள் ஒரு காலத்தில் மனிதனால் கற்பனையாலும் கூட நினைத்துப் பார்க்க முடியாததாகவே இருந்திருக்கின்றன. சிசரோவின் காலத்தில் ரேடியோ, தொலைபேசி, விமானம், மோட்டார் வாகனங்கள், கம்ப்யூட்டர்கள் போன்றவை மனிதர்களுக்கு விந்தையிலும் விந்தையாக இருந்திருக்கும். அதுபோல இக்காலத்தில் நினைத்துப் பார்க்கவும் முடியாத எத்தனையோ அற்புதங்கள் எதிர்காலத்தில் சாதாரண சமாச்சாரங்கள் ஆகி விட முடியும். அப்படி இருக்கையில் தனி மனிதர்களான நாம் நம்மால் முடியாதது எவராலும் முடியாது என்று நினைப்பது கற்பனையான கர்வமாகவும், அறிவின் குறைபாடாகவே தான் இருக்கும்.

*4) உப்பு சப்பில்லாத சொந்த விருப்பு வெறுப்புகளையும், அபிப்பிராயங்களையும் தள்ளி வைக்க முடியாதது:*

மனித வாழ்க்கையின் நிலைமை அந்த அளவு நிச்சயமற்றதாக இருக்கையில் நான் சொன்னது போல்அவன் நடக்கவில்லை, இவன் என்னை மதிக்கவில்லை, என்னிடம் விலை உயர்ந்த கார் இல்லை, என்னை அனாவசியமாக சிலர் விமரிசிக்கிறார்கள், சொன்ன நேரத்தில் வேலை நடக்கவில்லை என்ற சில்லறை விஷயங்களில் மனம் கொதிக்கிற அல்லது வெம்புகிற மனோபாவம் நகைக்கப்பட வேண்டியதே அல்லவா? நான் பெரியவன், அதை எல்லாரும் அங்கீகரிக்க வேண்டும், என்னைக் கவனிக்க வேண்டும், என் விருப்பப்படி அனைத்தும் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணங்களை ஒதுக்கி வைக்க முடியாதது குறுகிய மனங்களின் சாபக்கேடு. எந்தப் பெரிய பிரச்னைகள் இல்லா விட்டாலும் இந்த மனோபாவம் இருந்து விட்டால் அது போதும் சுகவாழ்வையும் நரகமாக மாற்றுவதற்கு.

*5) மனதைப் பண்படுத்தவும், பக்குவப்படுத்திக் கொள்ளவும் தவறுவது மற்றும் நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதது:*

வாழ்க்கையில் சௌகரியங்களையும் செல்வத்தையும் அதிகரித்துக் கொள்ள மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைக்கிறான். ஏனென்றால் அதை அளக்க முடிகிறது. மற்றவர்கள் அதை வைத்துத் தான் மதிக்கிறார்கள் என்ற சிந்தனையையும் பொதுவாக எல்லோரிடமும் பார்க்க முடிகிறது. ஆனால் மனம் அந்த அளவு வெளிப்படையாகத் தெரிவதில்லை என்பதால் அதைப் பண்படுத்திக் கொள்ளவோ பக்குவப்படுத்திக் கொள்ளவோ பெரும்பாலான மனிதர்கள் பெரிதாக முயற்சி மேற்கொள்வதில்லை. நல்ல தரமான நூல்களை படித்து அறிவையும், பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளும் பழக்கம் குறைவா மக்களிடத்திலேயே இன்றும் உள்ளது. சிசரோ அன்று ரோமானியர்களிடம் கண்ட இந்தக்குறைரோமாபுரியின் வீழ்ச்சிக்கா காரணங்களில் ஒன்றாக இருந்தது என்பதை வரலாறு சொல்கிறது. எனவே வீழ்ச்சியை விரும்பாத மனிதன் எல்லா விதங்களிலும் மனதைப் பண்படுத்திக் கொள்வது மிக முக்கியம்.

*6) நம்மைப் போலவே நினைக்கவும் வாழவும் அடுத்தவர்களைக் கட்டாயப்படுத்துவது:*

'நான் நினைப்பது தான் சரி, என்னுடைய வழிமுறைகள் தான் சிறந்தவை' என்று நினைப்பது மிகப்பெரிய தவறு. அப்படி நினைப்பதோடு நின்று விடாமல் அடுத்தவர்களையும் அப்படியே நினைக்கவும், நடந்து கொள்ளவும் எதிர்பார்ப்பதும் கட்டாயப்படுத்துவதும் மிகப்பெரிய குற்றம். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை நிறைய மனிதர்களிடம் இந்தக் குற்றமுள்ள போக்கை நாம் காண முடிகிறது. நம் வாழ்வின் போக்கைத் தீர்மானிக்கும் சுதந்திரம் நமக்கு உள்ளது. ஆனால் அடுத்தவர்கள் எண்ணங்களும், கொள்கைகளும், வாழ்க்கை முறைகளும் நம்முடையதைப் போலவே இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது கிட்டத்தட்ட அவர்களை அடிமைப்படுத்த நினைக்கும் முனைப்பே. நம் வழி உண்மையாகவே சிறந்ததாகவே உள்ளது என்று வைத்துக் கொண்டாலும் அதை அடுத்தவரிடம் பலவந்தமாகத் திணிக்க முடியாது. அப்படித் திணிப்பது வெற்றியையும் தராது. நம்முடைய நகலாக உலகம் இருக்க முடியாது, இருக்கவும் தேவையில்லை என்று உணர்வது மிக முக்கியம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்தும் தாக்குப்பிடித்து வந்துள்ள இந்தத் தவறுகள் நம்மிடம் இருக்கிறதா என்று நேர்மையுடன் சோதித்துப் பார்ப்பது நல்லது. இருந்தால் அவற்றை நம்மிடம் இருந்து நீக்கிப் பயனடைந்து மற்றவர்களும் அப்படி நீக்கிக் கொள்ள விரும்பும்படி நல்ல முன் உதாரணமாக வாழ்ந்தால் அது வாழ்க்கையின் மிகப்பெரிய வெற்றியாக இருக்கும்.

*- என்.கணேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இனப் படுகொலை' தவிர்க்க வேண்டிய வார்த்தையா?



கோபி
*ஒரு பேப்பர்*

முள்ளிவாய்க்கால் அவலங்களின் ஈராண்டு நினைவு நாள் நெருங்கிக் கொண்டிருக்கையில் சிறிலங்கா அரசின் இனப்படுகொலையிலிருந்து மீள்வதுபற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. முதலில் நாம் இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகிறோம் என்பதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான முயற்சியே எம் முன்னால் இருக்கிற அவசரமான பணியாக அமைகிறது. மே பதினெட்டாம் திகதியை ஒரு அடையாள நாளாக ஏற்றுக் கொண்டு, பல்வேறு கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவதற்கு அலைந்துழல்வுத் தமிழர்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் வேளையில் இப்பணிபற்றி சிந்திப்பதும் அதற்கேற்ப செயலாற்றுவதும் அவசியமானது.

முள்ளிவாய்க்காலிலும் அதற்கு முன்னரும் நமக்கு நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிப்பதில் அரசியல் ரீதியான சிக்கல்கள் காணப்படுகிறது. அவ்வாறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் எடுக்கப்படவேண்டிய காப்பு நடவடிக்கைகளை கவனத்திற்கொண்டே மேற்குலகம் இதுவிடயத்தை மறுதலித்து வருகிறது. இன்னொரு வகையில் குறிப்பிடுவதானால் காப்பு நடவடிக்கை தவிர்க்கமுடியாதது என்கிற நிலை வரும்போது, இனப்படுகொலை விடயத்தை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு தயக்கமிருக்காது. அவ்வாறான நிலையில் இனவழிப்புக்கு உள்ளாகும் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பினை இனவழிப்பில் ஈடுபடும் தரப்பினரிடம் (சிறிலங்கா அரசிடம்) விட்டுவிடமுடியாது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இலகுவான தர்க்க நியாயமாக இருக்கும்.

தமிழ்ப்பரப்பில் இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு, போர்க்குற்றம், மனிதவுரிமை மீறல்கள், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என்பவை ஏறத்தாள ஒன்றுக்கு மாற்றீடாக பாவிக்கப்படுமளவுக்கு வேறுபாடுகள் அற்றதாகவே அணுகப்படுகிறது. ஆனால் சர்வதேச அரசியலில் ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவிலான கனதி கொண்டவையாகக் கணிக்கப்படுகின்றன. இவற்றுள் இனப்படுகொலை என்பது கனதியான, பாரதூரமான விடயமாக இருப்பதால் அச்சொல்லை உச்சரிப்பதில் மிகுந்த அவதானம் பேணப்படுகிறது. ஆதலால் ஈழத்தமிழர்கள் எதிர்கொள்வது இனப்படுகொலை என்பதனை நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன. ஈழத்தமிழர்களில் சிலர் குறிப்பாக தம்மை மாற்றுக் கருத்தாளர்கள் என அழைக்க விரும்பும், ஆனால் சிறிலங்கா அரசின் காலில் மண்டியிட்டுக் கொள்வோர் இனப்படுகொலை விடயத்தை மறுத்து வருகிறார்கள். அதற்கு தமக்குத் தெரிந்த சித்தாந்த ரீதியில் விளக்கம் கொடுக்க முனைகிறார்கள். இந்த அற்ப பதர்களையிட்டு கவனம் செலுத்துவதனை தவிர்த்து, சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களின் அடிப்படையில் இதனை அணுகுவதே பயனுடையதாக அமையும்.

ஈழத்தமிழ் மக்கள் மீது மனிதவுரிமை மீறல்கள் நடாத்தப்படுகின்றன என்பது ஏற்கனவே மனிதவுரிமை அமைப்புகளாலும், அரசுகள் மட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இந்நிலையிலிருந்து விலகி ஈழத்தமிழர்கள் மீது மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் (crimes against humanity) மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியிடப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் இனப்படுகொலை பற்றி குறிப்பிடாவிட்டாலும், அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளக்கூடிய கூறுகளை கொண்டுள்ளதாக இனப்படுகொலைக்கான தமிழரமைப்பைச் (Tamila Against Genocide) சேர்ந்த ஆய்வாளர் ஜனனி ஜனநாயகம் தெரிவித்திருக்கிறார்.

ஆங்கிலத்தில் the "G" word எனப் பூடகமாக அழைக்கப்படும் Genocide (இனப்படுகொலை) என்ற வார்த்தை 1930 இல் போலந்தைச் சேர்நத ராபேல் லெம்கின் (Rafael Lemkin) என்ற சட்டவாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. மக்களையும் அவர்களது கலாச்சாரத்தையும் அழிக்கும் மிலேச்சத்தனத்தை தடுப்பதற்கு தேவையான சட்டங்களை இயற்றுமாறு ஐ.நா. சபைக்கு முன்னோடியாகவிருந்த League of Nations இனை அவர் வேண்டிக்கொண்டார்.

வரலாறு நெடுகிலும் இனப்படுகொலை தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளபோதிலும், அவற்றை இனப்படுகொலை என அடையாளப்படுத்துவதில் அரசியல் ரீதியான, நாடுகளின் நலன் சார்ந்த சிக்கல்கள் இருந்து வருகின்றன.

இனப்படுகொலை நடவடிக்கை என்பதனை அடையாளப்படுத்துவதற்காக மானிடத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஐந்து குற்றச்செயல்களை லெம்கின் அடையாளம் கண்டுள்ளார்:

1) ஒரு இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்களை அவர்களது இனத்தை காரணங்காட்டி படுகொலை செய்வது

2) ஒரு இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்களுக்கு உடல் ரீதியாக அல்லது உளரீதியாக பாதிப்பினை ஏற்படுத்துதல்

3) ஒரு இனக்குழுமத்தைச் சேரந்தவர்களுக்கு முழுமையான அல்லது பகுதியான அழிவினை ஏற்படுத்தும் நிலைக்கு அவர்களை தள்ளிவிடுதல்

4) ஒரு இனக்குழுமத்தில் பிறப்பு ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

5) ஒரு இனக்குழுமத்தைச் சேர்ந்த சிறுவர்களை இன்னொரு இனக்குழுமத்திடம் கையளித்தல்

இவ்விடயங்களை அண்மைக்காலத்தில் நடைபெற்ற இனவழிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பு படுத்திப்பார்த்தால், சூடானின் டார்பூர் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் மீது வட சூடான் அரசபடைகள் நடாத்திய தாக்குதல்கள் முதல் மூன்று நடவடிக்கைகளை கொண்டிருந்தன. சேர்பனிக்காவில் பொஸ்னியர்கள் மீது சேர்பியப் படைகளால் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் முதல் நான்கு நடவடிக்கைகளையும் கொண்டிருந்தன.

1958ம் ஆண்டிலிருந்து சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழினப்படுகொலையானபது இதில் எல்லா நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், போரின் இறுதிகட்டத்தில், முல்லைத்தீவில் சிறிலங்காப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை "சேர்பனீக்கா தருணம்" (Srebrenica Moment) என சிறிலங்காவுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிதிதி கோர்டன் வைஸ் குறிப்பிட்டுள்ளார். 1995ம் ஆண்டு எண்ணாயிரம் பொஸ்னியர்கள் சேர்பியப் படையினரால் சேர்பனிக்கா என்ற இடத்தில் இனப்படுகொலை செய்யப்பட்டமையை முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் ஒப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் "The Cage" என்ற தலைப்பிலான நூல் இம்மாதம் 19ம் திகதி வெளியிடப்படுகிறது.

தீவிரமடைந்த 2008 ம் ஆண்டு இறுதிப்பகுதியில் முல்லைத்தீவு இன்னொரு சேர்பனிக்காவாக மாறும் அபாயம் உள்ளதாக இனப்படுகொலைகக் எதிரான தமிழரமைப்பு கருத்து வெளியிட்டிருந்தது. அனைத்துலக ஊடகங்களில் இக்கருத்தினையே தெரிவித்து வந்த போதிலும், அப்போது அதனை சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள்கூட ஏற்றுக்கொள்ள மறுத்து வந்தன என்பதனை இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. 2009 ஆண்டின் முற்பகுதியில், ஜனனி ஜனநாயகம் பி.பி.சி ரேடியோ 4 க்கு வழங்கிய செவ்வியில் சிறிலங்காப் படைகள் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். இனப்படுகொலைகள் நடைபெறும்போது அதனை கவனிக்கத் தவறும் உலகம் நடந்து முடிந்த பின்னரே அதையிட்டு கவலைப்படுகிறது எனவும் அவர் அச்செவ்வியில் தெரிவித்திருந்தார்.

முதலாம் உலகமகாயுத்த காலத்தில் (1911-1918) துருக்கியில் ஒட்டமான் பேரரசினால் ஆர்மேனிய மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையாகட்டும், தொணணூறுகளில் நடைபெற்ற ருவண்டா, பொஸ்னியா படுகொலைகளாகட்டும் அவை நடந்து முடிந்து பல வருடங்களுக்கு பின்னரே அவை இனப்படுகொலைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான பரிகார நடவடிக்கைகள் பற்றி சிந்திக்கப்பட்டன.

1983ம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தினையடுத்து இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் இலங்கைத் தீவில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாவதாகத் தெரிவித்திருந்தார். அவரது கட்சியின் தலைமையிலான இன்றைய இந்திய அரசாங்கம் இவ்வினப்படுகொலையின் பங்குதாரராக மாறியது வரலாற்றுச் சோகம். இருப்பினும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு சுயாதீனமான சர்வதேச விசாரணைக்குழுவினை அமைக்கும் விடயத்திற்கு இந்தியா தனது ஆதரவினை வழங்கவேண்டிய தார்மீக நியாயத்தை அது மறுதலிக்க முடியாது. அதற்கான அழுத்தங்களை இந்தியாவில் உள்ள எமது தோழமைச் சக்திகள் மாத்திரமல்லாது, மானிட நேயம் கொண்ட அனைவரினதும் ஆதரவினை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் ஒத்த கருத்தினைக்கொண்ட உலகத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள், இணைந்து பணிபுரிய முன்வருவது காலத்தின் தேவையாக உள்ளது.

(உசாத்துணை: "The United Nations in the Age of Genocide" Adam Lebor, 2006)

வாய் விட்டு
அழுது நாம்
வலிகளைக்
கொட்டியே
வலிமை
கொண்டு
எழுவோம்!

ஒரு பேப்பர்
ORU PAPER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vithu.com

# VITHU TRUST FUND




- Vithu Trust is a charity organisation dedicated to improve and safeguard the lives of Children inSri Lanka and raises voice for the needy.
- There are thousands of children who go through the day without a single nourishing meal. They include victims of war, which has thrown the bread - winners of these families out of work and the future of our youngsters into darkness.
- Your contribution as a donor, no matter how big or small, will make a huge difference in the lives of these children.
- With your donation we help children in need o food, shelter, education, Counselling & medical.







**விதியை மதியால் வெல்லலாம்!**
**Vithu Trustஆல் பலரின் விதியை மாற்றலாம்!!**

Contact : **Vithu Trust Fund**

**T : +44 208 407 5767 - M : +44 796 144 1237**

Registered charity since 2004 in England & Wales - 1107418
W : www.vithu.com - E : charity@vithu.com



Bank Details

**VITHU TRUST FUND**
Account No : 92205262 - Sort Code : 40-18-41
HSBC, Croydon Branch 9 Wellesley Road, Croydon, CR9 2AA. UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் உறைந்த தேசம்



மே. 18, தமிழின அழிப்பினை குறிக்கும் நாள். போர்க்குற்றங்களை உலகிற்கு உணர்த்தும் நாள்.கொண்ட இலட்சியத்தை மறுபரிசீலனைக்கு உட்படாமல், இறுதி வரைக்கும் போராடிய மண்ணின் மைந்தர்களை நினைவு கூரும் நாள்.

தமது விருப்பத்தின் வழியே அவர்கள் பயணித்திருக்கிறார்கள் இறுதிக்கணத்திலும், அசாத்தியமான மனவுறுதியோடு நின்று ' நீ அழக்கூடாது' என்று ஆறுதல் வார்த்தை கூறிச் சென்றிருக்கிறார்கள்.

இறப்பின் வலி புரிந்து மனவிரிவுள்ள ஆளுமையின் சொந்தக்காரர்கள் அவர்கள்.

விழுப்புண் அடைந்த போராளிகளையும், பொதுமக்களையும் காப்பாற்ற, அனைத்துலக மன்னிப்புச் சபைகள் வருமென்று காத்திருந்தார்கள்.

வரவில்லை, சிங்களப் பேரினவாதம் அவர்களை வரவிடவில்லை. விக்கிலீக்ஸ் புட்டு வைக்கிறது.

முள்ளிவாய்க்கால், தமிழின அடையாளமா? குறியீடா?..

அறம் சார்ந்த பொறுப்புக் குறித்து வார்த்தைகளை அள்ளி வீசும் மானுடர்கள், தலை குனியும் ஒருஇடம் தான் முள்ளவாய்க்கால்.

சொந்தமண்ணில், வேற்று மனிதரால் கொல்லப்படுதல், மனித உரிமை மீறலாம். அது ஒரு இனப்படுகொலை என்று கூறுவதற்கு இந்த ஜனநாயகக் காவலர்களுக்குத் தயக்கம்.

இழந்த இறையாண்மையை மீட்க அரசியல் வாழ்வுரிமைப் போராட்டம் நடாத்துவோரை, பயங்கரவாதிகள் என்று விளிப்பதில் இவர்களுக்கு ஒரு மகிழ்வு.

போருக்குக் கூட தர்மங்கள், நியதிகள் நியாயங்களை வகுத்துவிட்டது இப்பூமி.

இரண்டு அரசுகளுக்கிடையிலோ அல்லது அரசிற்கும் அரசு சாரா அமைப்புக்குமிடையிலோ யுத்தம் நிகழும் போது சிறிதளவு மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ளலாம் என்பது உலக யுத்த தர்மம்.

பெருமளவு மக்கள் கொல்லப்படுகையில் இத்தர்மங்கள் மீறப்பட்டதாகக் கூறும் உலகம் அதனைமறந்து நல்லிணக்கத்தை உருவாக்கப் பாடுபடுங்களென்று அறிவுரை கூறுவது அபத்தமானது.

இவ்வரசு வல்லூறுகளின் துணையோடு, வஞ்சகப் போர் புரிந்த சிங்கள தேசம், முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது மனிதாபிமானப் போரென்று நியாயப்படுத்துகிறது.

பாதுகாப்பு வலயங்கள் கொலைக்களமாக மாறியுள்ளதென, உலகப் பொதுச் சபையின் அறிக்கை கூறினாலும் பெருந்தேசிய இனவாதம் அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

வன்மத்தின் ஊற்றுக்கண், மகாவம்ச மயக்கத்திலிருந்து தோன்றுகிறது.

அதிகார ஆசையைத் துறந்த பௌத்தம் அதிகாரத்தைத் தக்க வைக்கும் கருவியாக கையாளப்படுவதே கொடுமை.

போர்க்குற்றச் சான்றுகளை மறைத்தால் பறிக்கப்பட்ட நிலங்களைத் திருப்பித் தரப்படுமென பேரம் பேசுகிறார் பசில் இராஜபக்சே.

போர் முடிந்து விட்டது, இனி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடு தேவையற்றதென மே 17இல் உலகிற்கு பொய்யுரைத்தார் கோத்தாபாயா.

இன்று மாவிட்டபுரத்தில் நின்றவாறு, தமது குற்றங்களை மறைப்பதற்கு, தமது குற்றங்களை மறைப்பதற்கு, அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பேரம்பேசும் பொருளாக மாற்றியுள்ளார் மகிந்தரின் தம்பி பசில்.

அதிகார மிகையுணர்ச்சி கொண்ட சிங்கள தேசத்தின், இனஅழிப்பு வேட்டைக் காடாக மாறிய முள்ளிவாய்க்காலில் பூர்வீகக்குடிகள் புதையுண்டு கிடக்கிறார்கள்.

ஆதலால் பிணம் தின்னும் தேசத்தின் இரண்டாம் பாகத்தை எழுதி முடிக்க, புதிய அப்துல்லாக்கள் எழுந்து வரவேண்டும்.

சிரிய அதிபர்கள், அமெரிக்க எதிர்ப்பாளர் என்பதால், டாங்கிகளை ஏவி மக்களைக் கொன்று குவிக்கும் கொடுங்கோல் ஆட்சியாளர்களை நியாயப்படுத்தும் மயக்கப் பார்வைகளை இறக்கி வைக்க வேண்டும்

யூதர்களை, ஜேர்மனிய நாசிக்கள் இனப்படுகொலை செய்யும் போது ஏற்பட்ட அதே ஆத்மாவேசம் , பாலஸ்தீனர்களை யூதர்கள் அழிக்கும் போதும் ஏற்பட வேண்டும்.

அரசியலில் மட்டுமல்ல கவிதைகளிலும் இரட்டைவேடங்கள்.

மே 18 2009 அன்று சிங்களத்தின் ரூபவாஹினி வெற்றி முரசு கொட்டுகிறது.

கருகிய நிலையில் பல போராளிகளின் உடல்கள் வரிசை வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. வெடித்துச் சிதறிய எறிகணைகளில் இரசாயன மருந்துகளும் கலந்திருந்தன.

எரிந்த உடலங்கள், சிங்கள பேரினவாதத்தின் நயவஞ்சகபோரை அதன் ஆற்றாமையைவெளிப்படுத்தியது.

இன விடுதலைக்காகப் போராடும் மக்களை எதிர்கொள்ள புதிய யுத்த தர்மமொன்றினை வகுத்துக்கொண்டது சிங்கள தேசம்.

வரிப்புலிச் சீருடை தரித்தோர் மத்தியில் சிவில் உடையுடன் வீழ்த்தப்பட்டுக் கிடந்தார் ஒருபெண். அவர்தான வான்படை உருவாக்கிய கேணல் சங்கரின் துணைவி குகா அக்கா.

பசிக்கு உணவளித்த அந்தக் கரங்களின் சொந்தக்காரர் யாரென்பதை சிங்களத்திடம் சொன்னான்முன்னாள் தளபதி.

தன்னோடு களமாடிய தோழர்களின் வித்துடலை தாங்கி நின்ற பல துயிலுமில்லங்களை, இனவெறியர்கள் சிதைக்கும் போது மௌனத்தின் ஊடாக அங்கீகாரம் வழங்கிய அந்த மனிதனின் செயலை எவரும் மன்னிக்க மாட்டார்கள்.

அண்ணனும் மண்ணும் தனதிரு விழிகளென இறுதிவரை உறுதியாகக்கூறிய அந்த மாவீரப் பெண்ணின் முன்னால் இந்த முன்னாள்கள் எல்லாம் வெறும் தூசுக்குச் சமானம்.

வீழ்ந்தவர்கள் விரும்பியதோ, எதிர்காலத்தின் மீதான தாயகக் கனவு நிஜமாக வேண்டும் என்பதே.

பூசி மெழுகப்பட்ட முரண்கள், அவர்களின் ஆளுமையில் துளியளவும் இல்லை.

ஈழத்தின் திசையில் போராடிச் செல்லும் மனவுறுதி கொண்ட கவிஞன் போல வாழ்வியல் நெருக்கடிகள் கடுமையாக முடக்கினாலும் இருப்பிற்காய் போராடும் விளிம்புநிலை மனிதர்கள் போல, விடுதலை வேட்கையோடு தலை வணங்கா வன்னிமண்ணில் இறுதி வரை போராடினார்கள் அம் மா மனிதர்கள்.

தொடரும் வாழ்க்கைப் பயணம் முடியும் போதுதொடங்கும் என்கிற எதார்த்த நிலையை முள்ளிவாய்க்கால் முடிவல்ல என்பது உணர்த்துகிறது.

நிபுணர் குழுவின் அறிக்கை, உலகின் வாசல்களை திறந்திருக்கிறது.

தட்டியபோது மூடியிருந்த கதவுகள், நிரந்தரமாக மூடப்பட்டு விடுமென்று சோர்வுற்ற மக்கள், விளிப்படையும் காலம் இது தான்.

*- இதயச்சந்திரன்*

## பேரவலங்கள்....



முல்லையிலே சிங்களவன் எம்மவரை
அழித்தான் கொல்லு கொல்லு என்று அள்ளி
இந்தியனும் கொடுத்தான்...

பள்ளிகளை வீடுகளை குண்டுவீசி
அழித்தான் படுத்துறங்க வழியின்றி
எம்மக்கள் தவித்தார் பாதுகாப்பு
வலையமென சூழ்ச்சிவலை விரித்தான்
அப்பாவி மக்களுமே அதைநம்பி சென்றார்

இதுதான் தருனமென்று .இனவெறியன்
சிரித்தான் திக்கெட்டும் சூழ்ந்திருந்து
குண்டுமழை பொழிந்தான்
ஓட ஒதுங்கவும் முடியாமல் காடையரின்
கடும்பசிக்கு இரையாகிப் போனார்

எத்தனை தான் வந்தாலும் வென்றார்
தலைவர் கடைசிவரை போராடி
களத்தினிலே நின்றார் - இதுவல்ல
தருனமென எம்மக்கள் கூற சரியென்று
தலையசைத்து தயக்கத்துடன் நின்றார்

மக்களுக்காய் தன் மகனை களத்தினிலே
விட்டு காலம்வரும் எனச்சொல்லி
கவலையுடன் சென்றார் - வீழ்வது தாமாகி
தமிழினத்தை காக்க குண்டுகளை
கட்டிகொண்டு கரும்புலிகள் சாக
தளபதிகள் ஒன்றாகி கடைசியுத்தம் செய்ய
முள்ளிவாய்கல் பேரவலம் முற்றுத்தான்
பெற்றது.

புலம்பெயர்ந்த எம்இனமோ
வீறுகொண்டெழுந்து ஊர் அறிந்த
அவலத்தை உலகறியச் செய்தார் எச்சில்
இலைக்கு ஆசைப்பட்டு எட்டப்பனாய்
மாறி சிலர் தன் தாயை எதிரிகளுக்கு
விருந்தாக்கி மகிழ்ந்தார்

ஆங்கொருவர் ஐ.நா வில் அறிக்கை மட்டும்
விடுவார் அதைக்கேட்டு மற்றவர்கள்
கண்ணீர் வடிப்பார் பேச்சுவார்த்தைக்கென்று
சொல்லி ஒருசிலரும் சென்றார்.

மகிந்தவுடன் சேர்ந்திருந்து மதுவிருந்து
செய்து வந்து சாவதற்கு விஷமும் தந்து
தலைவலிக்கு தைலம் தேய்தார்.

எல்லோரும் பெறுத்திருங்கள் எம்தலைவன்
வருவான். விட்டுச்சென்ற சுதந்திரத்தை
மீட்டெமக்கு தருவான். சிங்களவன்
நடுநடுங்கும் காலம் ஒன்று பிறக்கும்
சிலவருடம் பொறு தமிழா தமிழீழம்
மலரும்....!

- மகா

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BBK PARTNERSHIP
www.bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

BARNET 020 8216 2520 | CROYDON 020 8150 9950 | CITY OF LONDON 020 7 183 2696 | CAMBS 01354 707 911

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதிகாவின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றியா?




**சுகி**
**(ஒரு பேப்பருக்காக)**

மாறி, மாறி அடித்த தொலைபேசி அழைப்புக்கள் முதல் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தீமிழ் இணையத்தளங்கள் வரை எல்லாவற்றிலும் ஒரு விடயதானமாக இருந்த ராதிகா சிற்சபேசனின் அரசியல் வெற்றி பரவலாக ஒட்டு மொத்த தமிழ்மக்களின் வெற்றியாகவே கருதப்படுகின்றது.

29 வயதான ராதிகா, தாயகத்தில் பிறந்து, 5 வயதில் கனடாவுக்கு சென்றிருந்தாலும், மிக அழகாக தமிழ் பேசுவதோடு "மையநீரோட்டத்தில் கலந்து" என அவர் உபயோகிக்கும் சொல்லாடல்கள் எம்மை வியப்பிலாழ்த்துகிறது. "வாழும் நாடே தாயகம்" என்று இருந்து விடாத அவரின் தாய், தந்தையரும் இதற்கு ஒரு காரணம். இவருக்கு சிறுவயதாக இருக்கும் போது, வேலையிடத்தில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக இவரின் தந்தையார் நிரந்தர வலுக்குற்றியோர் ஆகிவிட்டார். இதன் காரணமாக தாதி பயிற்சிக் கல்வியை மேற்கொண்டு தொடரமுடியாத தாயார் ஒரு கிட்டங்கி பணியாளாராக வேலை எற்றுக்கொண்டார். இப்படியிருந்தும் இவரின் தந்தையாரின் முயற்சியாலும், இவரின் உந்துதலாலும் மிசுசாகவில் (Missi ssaaga) வில் முதலாவது தமிழ்பாடசாலை, இவருக்கு ஏழுவயதாக இருக்கும் போது, 1990 இல், கத்தோலிக்க கல்வித் திணைக்களத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஏழுவயதில் இருந்து இன்று வரையான தனது சமூக ஈடுபாட்டுக்கும், சேவை மனப்பாங்குக்கும் காரணம் தனது தந்தையே என்றும், அதே நேரம் தனது தைரியத்திற்கும், துணிவிற்கும் காரணம் தனது தாயர் என்றும் சொல்லும் ராதிகா, ஆங்கிலத்திலும் புலமையுடையவர்.

இவர் டொராண்டோ பல் கலைக் கழகத்தில் தனது இரண்டு வருட வர்த்தக இளமானி படிப்பைத் தொடரும் போது அங்குள்ள தமிழ் மாணவர் சங்கத்திற்கு உதவித்தலைவராக இருந்தார். பிறகு கால்டன் பல்கலை கழகத்திற்கு மாற்றம் பெற்று அங்கு தனது இளமானி படிப்பை நிறைவு செய்து கொண்டர். அங்கு பல்கலை கழக மாணவர் ஒன்றிய உபதலைவராகவும், அதே நேரம் தனது Rideau River பகுதியின் குடியிருப்பாளர் சங்கத்தலைவராகவும் பணியாற்றினர். இதைத்தொடர்ந்து தனது முதுமாணிப்பட்டத்தை வர்தகத்தொடர்பாடல் சம்பந்தமாக குயின்ஸ் பல்கலைக்கழத்தில் பெற்றுக் கொண்டர். அங்கு இவர் தனது ஆய்வை, வேலைசெய்யும் தொழிலாளருக்கான சர்வ தேச சங்கத்துடன், இணைந்து மேற்கொண்ட போது அவர்களின் "Justice 4 Janitors" என்ற பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இது பாராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு போன்ற அடிமட்டத்தில்வேலைசெய்யும்தொழிலாளருக்கான ஊதியத்தையும், மருத்துவ வசதியையும், வேலை இட அடிப்படை வசதிக்குமாக, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 34 நகரங்களில் அவர்களுக்காக குரல் கொடுக்கும், 225.000 தொழிலாளர்களை அங்கத்துவராக கொண்ட சமூக நிறுவனம். இங்கிலாந்திலும் இதை ஒத்த நிறுவனம் "Justice for Cleaners" என்ற பெயரில் இயங்குகிறது.

மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற உத்வேகம் தனக்கு வந்ததற்கு தனது தொகுதி மக்களே, குறிப்பாக தமிழ் மக்களே காரணம் என்கிறார் ராதிகா. உலகளாவிய ரீதியில், சரியான நீதி கிடைக்காமல், தமிழ்மக்கள் தவிப்பதும், கனடாவில் கூட அது தொடர்வதும் தான் தனது அரசியல் ஆரம்பத்திற்கான காரணி எனச் சொல்லும் ராதிகா. தனது சமூகத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் கதவை தட்டவேண்டும், அதற்கு அதில் பங்கேற்க வேண்டியது அவசியம், ஆகவே எனது பாராளுமன்றப்பதவியை அதற்குரிய ஒரு வாகனமாக பாவித்து, அதன் மூலம் தனது சமூகம் சார்ந்த மக்களின் முன்னேற்றத்திற்கும், மாறுதலுக்கும், பாடுபடப்போவதாகச் சொல்கிறார்.

இவர் 2004 இல் புதிய சனநாயகக் கட்சயில் இணைந்து எட்புரோட்பெண்ட்டுக்கு ஆதரவான பிரச்சாரங்களிலும், செயல்பாடுகளிலிலும் ஈடுபட்டார். ரொரோண்டோ பெரும்பாகத்தில் மே மாதம் இரண்டாம் திகதி, இடம்பெற்ற நடுவண் அரசுத் தேர்தலில் ஸ்காபரோ ரூச் ரிவர் தொகுதியில் முதற்தடவையாக புதிய சனநாயகக் கட்சியில் போட்டியிட்டு, 18,856 வாக்குக்களைப்பெற்று, 5000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றர். 2008 இல் இக்கட்சி 4.900 வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்ததும், 15.000 தமிழ் வாக்காளர் இவரது தொகுதியில் இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுப்பதற்கு இவ் புதிய சனநாயகக் கட்சியால் முடியும் என்பதற்கு 20, 30 வருடங்களாக தொடர்ந்து எமக்கு சார்பாக இருப்பதும், முக்கியமாக மே 2009 எமது மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டி தெருவில் இறங்கி, நின்ற போது எமக்காக பேச முன் வந்தும், எம்மோடு சேர்ந்து தெருவில் இறங்கி நின்று குரல் கொடுத்த ஒரே ஒரு கட்சி இது என்கிறர். அத்தோடு தேசிய அளவிலும் எமது மக்கள் ஒட்டாவா பாராளுமன்ற குன்றை அடைந்தபோது அவர்களை வரவேற்றது, இக்கட்சியின் தலைவரான Jack Layton தான். பாராளுமன்றத்திலும் சீறீலங்காவில் போர்குற்றம் சம்பந்தமான சுயேச்சையான விசாரணையை நடந்த வேண்டும் என்பதை முன் மொழிந்ததும் இக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான பீற்றர் யூலியன் தான் என்கிறார். அத்தோடு இக்கட்சித் தலைவர் ஒருவர்தான் தமிழர் பிரச்சனையை, ஒரு பிரத்தியேக விடயமாக எடுத்து அதற்கென ஒரு அறிவுரையாளரை, தன்னை, நியமித்தது. வேறு ஒரு கட்சியும் தமிழரின் விடயத்திற்கு இத்தகைய முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்கிறார்.

தனது முக்கிமான நோக்காக ஏழ்மை நிலையை குறைத்தல், கட்டுப்படியாகக்கூடிய வகையில் வீட்டு வசதி, எல்லோருக்குமான கல்வி வாய்ப்பு, தொழில் வாய்ப்பு, அத்தோடு தமிழ்மொழியையும், பண்பாட்டையும் பாதுகாத்தல் என்பவற்றை கொண்டிருக்கும்ராதிகா அதில் உறுதியாக இருப்பதை தனது சமூக, அரசியல் நடவடிக்கைகள் மூலமும் வெளிப்படுத்துகிறார். பாராளுமன்ற உறுப்பினராக வந்தவுடன் பிபிசிக்கு அளித்த பேட்டியில் இங்கிலாந்தில் இருப்பது போல All Party Parliamentary Committee (APPC) ஒன்றை கனடாவில் நிறுவி இலங்கையில் இறுதி கட்ட போரில் நடந்த குற்றங்களை விசாரிப்புதை தனது முதல் பணியாக எடுக்க இருப்பதாகக் கூறியுள்ளர்.

முந்நூறாயிரம் தமிழர்களுக்கு மேல் வசிக்கும் கனடாவில், ஒப்பீட்டு ரீதியில் பொதுவாக பெண்கள் குறைவாக பங்களிக்கும் அரசியல் துறையில், முதல்தடவையாக ஒரு தமிழ் பெண் பாராளுமன்ற உறுப்பினராக வந்ததையிட்டு, உலகெங்கும் பரந்து வாழும் மக்களும், பெரு மகிழ்ச்சி கொள்வதில் வியப்பேதும் இல்லை. அதுவும் தமிழ் சமூகத்தின் பிரச்சனைகளையும், இளையோர்களின் தலைமுறை இடைவெளியையும், தாயகமக்களின் துன்பங்களையும் நன்கு புரிந்து கொண்டிருக்கும் ராதிகாவின் வெற்றி, நிச்சயமாக தமிழ் மக்களின் வெற்றி.




**Prime Citizenship Test**

**முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்**

**நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்**

**உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு**

**புதுவருட சலுகையாக £ 165 .00 மட்டுமே**

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்

நாங்கள் வார இறுதி வகுப்புக்களும் நடாத்துகின்றோம்



**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

**You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days**

**New Branches opened in** Hounslow, Wembley, and Birmingham

Call us on
Tel: **020 8150 9953**
Mob: **075 3893 3261**
www.prime citizenshiptest.co.uk

**Head Office**
14 Lombard Business Park,
2 Purely Way,
Croydon CR0 3JP

**North London Branch**
104 Millennium Business Centre Humber Road
Staple Corner NW2 6DW



**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
கண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கமலன்' ஒரு ஆசிரியப் போராளி

வ.கணேஸ்
(ஒருபேப்பருக்காக)

'கமலன்',இவரது இயற்பெயர் கமலேஸ்வரன். இயக்கப் பெயரை யாரும் உச்சரித்தது கூட இல்லை. வவுனியாவில் பழம்பாசி என்னும் கிராமத்தில் பிறந்த இவர், நெடுங்கேணி மகாவித்தியாலத்தில் கல்வி பயிலும் போதே, 1983 இன ஒழிப்பு கலவரம் நடந்தேறிய பின் புலிகள் அமைப்புடன் இணைந்தவர்.

இவரிடம் சண்டையில் கொஞ்சம் வீரம் குறைவு. ஆனால் விடுதலைப்பாதையில் மக்களை அரவணைத்து, அன்பு காட்டி விடுதலைக்கான தேவையை விளங்க வைத்து, விடுதலைப்புலிகளோடும், விடுதலைப்பாதையிலும் மக்களை இறுதிவரை இழுத்து வந்ததில் இவர் ஒரு மகாவீரன். அறிவுரை ஆசானும் கூட.

சிறியவரோ பெரியவரோ நீங்கள் நாங்களென்று அன்பாக சிரித்த முகத்துடனேயே பேசும் இவர் இயக்க பணத்தில் இரண்டு சதம் கூட செலவு செய்ததாக நான் அறியவில்லை. தாகத்துக்குக் கூட கடை வாசலில் வைக்கப் பட்டிருக்கும் தண்ணீர் எடுத்து குடித்துவிட்டு போவாரே தவிர, ஒரு சோடா வாங்கி குடிக்க மாட்டார். இவரது சொத்துக்கள் ஒரு சோடி உடுப்பும், ஒரு துவாயும், ஒரு பழைய சைக்கிளும்தான்.

நான் பல இயக்கங்களிலுமுள்ள பல போராளிகளோடு பழகியிருக்கிறேன். ஆனால் ஒரு ஆசிரிய போராளியாகவும், சுயநலம் துறந்த கண்ணியமான போராளியாக எல்லோராலும் மதிக்கப்பெற்றவர் இந்த கமலன் என்ற என்னுடைய கமலண்ணைதான்.

இவர் முல்லைத்தீவில் வற்றாப்பளை, கேட்டாபுலவு கிராமங்களுக்கு அரசியல் துறை பொறுப்பாளராகவும் இருந்தவர். இவர் சகபோராளிகளோடு மட்டுமின்றி, சகலஇயக்க போராளிகளொடும் அன்பாக பழகியவர். ஒரு E.P.R.L.F போராளி இந்தியாவிலிருந்து வந்தவுடன் முக்கிய ஐந்து இயக்கங்களின் முறுகல் நிலையை கண்டு, வெறுப்படைந்து, புலிகளின் தலைமை பீடத்துக்கும் E.P.R.L.F தலைமைக்குமாக இரண்டு கடிதங்கள் எழுதி கமலண்ணையிடம் கொடுத்துவிட்டு நாட்டைவிட்டு புறப்பட்டு விட்டார்.

இந்த கடிதத்தில் எழுதிய இரண்டு வரிகள் இன்றும் என் நெஞ்சில் இருக்கின்றது. வேலிகளே பயிர்களை மேய்கின்றன என்றும், தான் போராட வந்தது தமிழரின் விடிவுக்காகவே தவிர மற்றைய இயக்க சகோதரர்களொடு சண்டையிட்டு சாவதற்கல்ல என்றும் எழுதியிருந்தது. E.P.R.L.F தலைமையகத்துக்கு எழுதிய கடிதம் கூட கமலண்ணையிடம்தான் ஒப்படைந்திருந்தார். அந்த அளவிற்கு கமலண்ணை ஒரு நேர்மையான போராளி. கள்ளன் காடனை பிடித்தாலும் புத்திமதி கூறி அனுப்பி வைப்பாரே தவிர கையோங்கி அடிக்க மாட்டார்.

இயக்கங்களின் போராளிகள் யாராவது பொதுமக்களுக்கு அடித்ததாக அறிந்தால் கூட என்னிடம் கூறி பலமுறை கவலைப்பட்டிருக்கின்றார். நான் ஒரு அரச அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்தேன். அப்போது இராணுவ சுற்றி வளைப்புகள் அடிக்கடி நடப்பதுண்டு. இதனால் எனது அலுவலக அடையாள அட்டையின் தஞ்சத்தோடும் நம்பிக்கையோடும் அலுவலக வோச்சர் அப்பாவோடு இரவில் போய்படுப்பதுண்டு. ஆனாலும் அந்த கிழவருக்கு தெரியாமலேயே ஒரு அலுவலக அறை அதற்குள் வந்து படுத்து விடுவார்.

பல நாட்கள் கள்ளம் நிலைக்குமா? கிழவன் பிடித்து விட்டது. ஆனாலும் கமலண்ணை என்று கண்டவுடன் இன்முகம் காட்டி படுக்க வைத்து, மேலதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தாது இருவர் வேலைக்கும் ஆப்பு இல்லாமல் காத்து வந்தார் அந்த அப்பா.

ஒரு நாள் காலையில் இராணுவம் நான்கு மணிக்கே ஊரை சுற்றி வளைத்து விட்டார்கள். ஊரை சுற்றி வெடியோசை. எனக்கு நெஞ்சிலே இடியோசை, கை கால் நடுக்கம், அத்தோடு கமலண்ணை குண்டையும் கைத்துப் பாக்கியையும் இடுப்பில் செருகியபடி என்னோடு வேறு. கை காலை ஒரு இடத்தில் ஊன்ற முடியவில்லை, தானாக தாளம் போட்டபடி. எங்கள் பாதுகாப்பு கருதி போக இருந்த கமலண்ணையை போக விடாது தடுத்து களஞ்சிய அறையில் வைத்து பூட்டி விட்டோம்.

வெடிச்சத்தம் மிக நெருக்கமாக கேட்க கதிரையை விட்டு தரையில் அமர்ந்து விட்டேன். முன்வந்த இராணுவத்தினர் சுட்டபடி முன்னேற, பின் வந்தவர்கள் சோதனை நடத்தினார்கள். எல்லா அறைக்கதவுகளையும் நான் திறந்துவிட்டபடியால், எல்லா அறைகளையும் எட்டி எட்டி பார்த்தபடி என் அறைக்குள் வர, இரண்டு அடையாள அட்டைகளையும் தூக்கி காட்டியபடி எழும்பினேன். என்னை எதுவுமே கேட்கவில்லை. முன்னேறிப் போய்க்கொண்டே இருந்தார்கள்.

எத்தனையோ சுற்றி வளைப்புக்கள் நடந்தன, ஆனால் இந்த ஒரு சுற்றி வளைப்புத்தான் தமிழரின் உயிருக்கும் உடமைக்கும் சேதாரமின்றி நடந்த வளைப்பு. களஞ்சிய அறையில் மும்மொழிகளிலும் களஞ்சியஅறை என்று எழுதியிருந்ததாலோ என்னவோ உயிர் பிழைத்தோம் அன்று.

இப்படியே இலங்கை இராணுவத்தின் அட்டகாசம் அடங்க, இந்திய இராணுவத்தின் அடக்குமுறையும் 1987ல் ஆரம்பமானது. விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவத்துக்கும் முல்லை, குருத்தூர் மலையடிவாரங்களில் உக்கிர போர் நடந்து கொண்டிருக்கும் போது, ஒருநாள் தண்ணீர் ஊற்றில் ஆலடி சந்தியில் இளையராஜா என்ற போராளியோடு கமலண்ணை பேசிக்கொண்டிருக்கும் போது, பொது மக்கள் பயணிக்கும் மினி பஸ்களில் மக்களோடு மக்களாக இராணுவமும், துணைப் படை குழுவொன்றும் திடீரென வந்திறங்க தப்பமுடியாது சைனட்டை வாயில் வைத்துவிட்டார். மற்றைய போராளி கடிக்க முதலே சைனட்டை உயிருடன் சுமத்திவிட்டார்கள். கமலண்ணை வாயிலிருந்து சைனட்டை அகற்ற முயன்றிருக்கிறார்கள், முடியவில்லை. அடங்கிவிட்டது அந்த அன்பு நிறைந்த, யாருக்கும் கேடு நினைக்காத அந்த அற்புதமான மனிதரின் ஆத்மா. அந்த மனிதரின் நிறமும் தங்கம். மனமும் தங்கம். இந்த மனிதரின் உயிர் பிரிந்த பின்பும் உடலத்தை சன்னத்தால் சல்லடையாக்கி விட்டுத்தான் போனார்கள்.

இதுநடக்கும் போது நான் கூட கூப்பிடு தொலைவில் ஒரு தையல் கடையில்தான் நண்பர்களோடு நின்றேன். வெடிச் சத்தம் கேட்கவே வெளிக்கதவை பூட்டிவிட்டு உள்ளுக்குள் பேசாமல் படுத்திருந்தோம். வெடிகள் ஓய்ந்தது. சாவித்துவாரத்தால் பார்த்து அரக்கர்கள் அகன்றுவிட்டார்கள் என்று அறிந்து கதவைத் திறந்தோம். ஒருவர் சொன்னார் கமலண்ணையின் கவலைச்செய்தியை. சுவரோடு சாய்ந்தபடியே முட்டுக்காலில் முகம் புதைத்து அமர்ந்து விட்டேன். புலிகளால் தடை செய்யப்பட்ட ஒரு புளோட் போராளியும் என்னுடன் புலிப்போராளிகளை யாரையும் சுட்டிருக்கலாம், ஆனால் இந்த தண்ணிமனம் கொண்ட மனிதனை ஏன் மச்சான் சுட்டார்களென்று இன்றும் நான் அடிக்கடி மீட்டுக்கொள்ளும் வாக்கியமிது.

ஆக விடுதலைப்புலிகளை விரும்பாதவர்கள் கூட கமலண்ணையை விரும்பியிருந்தார்கள். மலர்ந்த முகம். சிரித்தபடி பேசும் சுபாவம். பந்தா காட்டாத பண்பு. இதை தவிர, எந்த ஒரு வீட்டாருக்கும் இடைஞ்சல் கொடுக்க மாட்டார். நன்றாக குளிக்க முழுக வேண்டுமென்றால் கூட என்னிடம் வருவார். தோட்டம் ஒன்றுக்கு போய் குளித்து முழுகிவிட்டு இளநீரும் குடித்துவிட்டு வருவோம்.

என் வீட்டுக்கே இரண்டொரு தடவை தான் வந்ததுண்டு. பெண்கள் இருக்கும் வீடுகளுக்கு போய் வருவதை முற்றாக தவிர்த்து வந்தவர் கமலண்ணை. சில போராளிகள் சில வீடுகளுக்கு தொடர்ந்து போய்வருவதை கண்டித்திருக்கிறார். உங்களுக்கு பிரச்சினை இல்லை, ஆனால் அந்த பெண்களுக்கு கெட்ட பெயர் கூடிவிடும் என்று ஆதங்கப்படுவார். இவர் இறந்த பின் ஒரு நாள் வங்கி ஒன்றுக்கு நான் போன போது அநடத மேலதிகாரி என்னை உள்ளுக்குள் அழைத்து சாத்திவிட்டு விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டார். இத்தனைக்கும் கமலண்ணையை அறிந்திருந்தாரே தவிர, பேசியது கூட இல்லை இந்த மனிதர்.

இப்படி பண்புள்ளம் கொண்ட அந்த மனிதர் விடுதலைக்கு வித்தாகி 23 வருடங்கள் ஓடிவிட்டது, ஆனாலும் அந்த அற்புதமான சிரித்த முகம் அடிக்கடி சிரித்தபடி என் மனதில் தோன்றும். கண்களும் கலங்கும்.

## சர்வதேசமும் கத்தரிக்காயும்.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி.. சர்வதேசம் செய்ய எவ்வளவோ இருக்க.. விடயங்களை மழுங்கடிக்கச் செய்யும் வகையிலும் மனித உரிமை மீறல்களை மறக்கச் செய்யவும் மன்னிக்கும் வகையிலும் சர்வதேசம் நடந்து கொள்ள முனைவதே அதன் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இதனை சர்வதேசத்துக்கு உணர்த்த வேண்டியது தமிழர்களின் கடமை. ஆனால்.. தமிழர்களோ.. சர்வதேசம் எல்லாத்தையும் தமக்கு சாதமாகச் செய்யும் என்ற கனவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயம் அது தமிழர்களை மீண்டும் ஏமாற்றும் வகையிலேயே செயற்படப் போகிறது. இதை எதிர்காலம் உங்களுக்கு உணர்த்ததான் போகிறது. அப்போது மீண்டும் தலையில் துண்டை போட்டுக் கொண்டு ஒப்பாரி வைக்கத் தான் போகிறீர்கள்.

சர்வதேசமும்.. இந்தியாவும் வேறல்ல. எல்லோரினதும் அணுகுமுறைகள் ஒன்றே. நாம் அவர்கள் மீது செய்யக் கூடிய அழுத்தங்கள் தான் எங்களுக்கான சாதகங்களையும் பாதகங்களையும் தீர்மானிக்குமே அன்றி நாங்கள் சும்மா இருக்க.. சர்வதேசம் எம்மில் இரக்கப்பட்டு எமக்கு வேண்டியதை பெற்றுத் தரும் என்று எதிர்பார்த்திருப்பது முழு முட்டாள் தனம் என்பதை தமிழர்கள் மீண்டும் உணரும் நிலை வரும். அப்போது தமிழர்கள் மீட்சி[illegible]

CHITRAVATHI CAKE CLASSES
கேக் அலங்கார வகுப்புகள் நடைபெறுகின்றன.
May, June New Classes Starting
Monday, Wednesday, Friday
Morning 9.45 to 12.30 and evening 1 to 3
Tel : 020 8240 1519 Mobile : 07944668642
அனைத்து வைபவங்களுக்கும் நீங்கள் விரும்பிய வடிவில் அழகா பலதரப்பட்ட டிசைன்களில் கேக் செய்து கொடுக்கப்படும்.

மணமகன் தேவை....
கனடாவில் வசிக்கும் கனேடியப் பிரஜை, மிருகவைத்தியப் பட்டம் பெற்ற, 22.11.1968 இல் பிறந்த மகளுக்கு பெற்றோர் ஏற்ற மணமகனைத் தேடுகின்றனர். தகுதியானவர்கள் படம், ஜாதகம் முதலியவற்றை அனுப்பி வைக்கவும்.
Wanted Bridegroom
Parents seeking bridgeroom for the daughter born on the 22nd of November A canadian citizion and a Qualified Veterinary Surgeon. Lives in canada. Response from qualified persons are invitet with their photographs, Chart and C.V
தொடர்புகளுக்கு : 07946878562

HANUMAN ASTROLOGY CENTER
PANDIT GANESH
Specialist in all kind of Astrology, Face Reading & Palm Reading
Throught Astrology, palmistry, Face Reading, Horoscope, Date of Birth & Humerology. Know your past, Present, future in education, career, business, Money matters, love-marriage-children & family matters, marriage matching, husband wife relationship, health (natural medicine for all types of diseases), Choice of lucky stones (rings can be made), lottery & lucky money, lakshmi prayers, removel of witchcraft, court problems, sexual problems, all types of evil-black-magic removel, protection in house, job & all types of personal problems.
Languages: Tamil, Hindi, English, Telugu & Kannada
Openning Hours 9.30 am 7.00 pm (7 days in week)
Address: BJS Fashion Jewelleres ( Near McDonalds) 87 High Road, Woodgreen London N22 6BB
Mobile no: 07438454345 / 07903033353

யாழ்ப்பாணத்தில்
வீடு விற்பனைக்கு!
யாழ்ப்பாணம் ஊரெழு வடக்கில் (Urelu North) 5 larchams காணி, கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.
உடன் தொடர்பு கொள்ளவும் : 078 0940 8740

ENGINE TEC MOTORS
We offer Facilities For:
- Serving
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken
உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.
Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web:www.etmluk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் லாடனின் இருப்பிடம் அறிந்த விபரமும் தாக்குதல் விபரமும்



வேல். தர்மா
(ஒரு பேப்பருக்காக)

அமெரிக்க ஆட்சியாளர்களை அதிர வைத்த 2001 இல் நடந்த 9-11 இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து பின் லாடனைத் தேடுவது அதி தீவிரப்படுத்தப்பட்டது. 2002இல் உலகெங்கும் பல அல் கெய்டா ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு கியூபாத் தீவின் அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ள குவான்டனமோ கொடுஞ் சிறையில் அடைக்கப்பட்டனர். அத்துடன் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா பல இஸ்லாமியத் தீவிரவாதிகளை தடுத்து வைத்துள்ளது. 11- 09- 2001 இற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ பின் லாடனைப் பற்றியும் அவரது உலகெங்கும் உள்ள ஆதரவாளர்கள் பற்றியும் தகவல்களைத் திரட்டத் தொடங்கிவிட்டது.

இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின் அமெரிக்கா பின் லாடனைப் பிடிக்க பல மில்லியன்கள் செலவில் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் செய்து பல கருவிகளையும் உருவாக்கியது. பின் லாடன் அவற்றில் இருந்து தப்புவதற்காக தன் இருப்பிடத்தில் எந்த வித இலத்திரன் கருவிகளோ உபகரணங்களோ வைத்திருப்பதில்லை. அவரிடம் கைக் கடிகாரம் கூட இருப்பதில்லை. ஆப்கானிஸ்தானில் அல்லது பாக்கிஸ்தானில் எங்கோ ஒரு காட்டுக்குள் ஒரு குகைக்குள் அவர் ஒளிந்திருப்பதாகவே நம்பப்பட்டது.

### குவான்டனமோ ஏமாற்றம்.

குவான்டனமோக் கைதிகளிடம் இருந்து பின் லாடனின் இருப்பிடத்தைப் பற்றி எந்தத் தகவல்களும் பெற முடியாமல் போனது அமெரிக்காவிற்குப் பெரும் ஏமாற்றம். அவர்கள் எவரும் உண்மையில் பின் லாடனின் இருப்பிடம் அறிந்திருக்கவில்லை.

### மர்ம தகவல் பரிமாற்றக்காரர்.

அமெரிக்கா பல அல் கெய்தா ஆதரவாளர்களை கிழக்கு ஐரோப்பாவில் சிறைவைத்துள்ளது. அங்குள்ள கைதிகளிடம் இருந்து அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ பெற்றுக் கொண்ட ஒரே ஒரு பெறுமதி மிக்க தகவல் பின் லாடனுக்கு ஒரு நம்பிக்கை வாய்ந்த தகவல் பரிமாற்றக்காரர் இருக்கிறார் என்பதே. பின் லாடன் தனது இரண்டாம் நிலை சகாக்களுடன் இந்த தகவல் பரிமாற்றக்காரர் ஊடாகத் தான் தொடர்புகளை வைத்திருந்தார். அவரின் உண்மையான பெயரைக் கூட அவர்களால் பெறமுடியவில்லை. இந்நிலையில் அமெரிக்கா குவான்டனமோ சிறைச்சாலையிலும் மற்றும் கிழக்கு ஐரோப்பியச் சிறைச் சாலைகளிலும் கைக்கொள்ளும் சித்திரவதை விசாரணை முறை பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது. அங்கு பாவிக்கப்படும் நீரடிக்கும்பலகைச் சித்திரவதை முறையும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது. இவை எல்லாம் அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ இற்கு பலத்த ஏமாற்றத்தையே அழித்தது. கிழக்கு ஐரோப்பியாவில் உள்ள கைதிகளில் முக்கியமானவர்கள் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குத் திட்டமிட்ட காலித் ஷேக் முகமதுவும் அல் கெய்டாவின் நடவடிக்கைப் பிரிவுத் தலைவர் அபு பராஜ் அல்-லிபியும். அவர்கள் தங்களுக்கு தகவல் பரிமாற்றக்காரர் பற்றி எதுவும் தெரியாது என்று கூறிவிட்டனர். இப்படி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓடிவிட்டது. 2005 இன் பின் லாடன் இருப்பிடம் அறிவது என்பது ஒரு முடியாத காரியம் என்று ஆகிவிட்டது. விளைவு "ஆப்பரேஷன் கனன் போல்" இதில் பல சிஐஏ தலைகள் உருண்டன. பாக்கிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் புதிய உளவாளிகள் அமர்த்தப்பட்டனர்.

### தேசிய பாதுகாப்பு முகவரகம்.

தேசியபாதுகாப்புமுகவரகம் என்பது உருவாக்கப் பட்டு அது நவீன கருவிகளைக் கொண்டு பல தொலைபேசித் தொடர்புகளையும் மின்னஞ்சல்களையும் களவாகப் பதிவு செய்தது. பாக்கிஸ்த்தானில் இருந்து அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் இருந்து மர்ம தகவல் பரிமாற்றக்காரரின் குடும்பப் பெயரை சிஐஏ அறிந்து கொண்டது. அல் கெய்டாவின் நடவடிக்கைப் பிரிவுத் தலைவர் அபு பராஜ் அல்-லிபியை மரபு வழிச் சித்திரவதை விசாரணை செய்ததன் மூலம் மர்ம தகவல்பரிமாற்றக் காரரின் பெயர் பெறப்பட்டது. அதுமுழுப்பெயர் அல்ல. தொடர்ந்த பல நடவடிக்கைகளினால் அவரது முழுப் பெயரும் வாகன இலக்கமும் குடும்பப் பெயரும் பெறப்பட்டது. அவர் குவைத்தில் பிறந்த ஷேக் அபு அகமத். அவரது வாகனத்தை பல நாட்கள் பல தடவைகள் தொடர்ந்த போது. 2010 ஆகஸ்ட் மாதம் மர்ம தகவல் பரிமாற்றக்காரரின் இருப்பிடம் அறியப்பட்டது. அது அபத்தாபாத் என்னும் அழகிய நகரம்.

### காட்டிக் கொடுத்த ஏழடிச் சுவர்.

அபத்தாபாத்தில் மர்ம தகவல் பரிமாற்றக் காரரின் சகோதரரின் வீட்டை நோட்டம் விட்ட அமெரிக்க உளவுப் பிரிவினர் அங்கு வீட்டைச் சுற்றி 12 அடி உயரச் சுவரும் மாடிகளில் ஏழடிச் சுவரும் இருப்பதைக் கண்டனர். பின் லாடனின் உயரம் ஆறு அடி ஐந்து அங்குலம். அங்கு பின் லாடன் இருப்பார் என அமெரிக்க உளவுத் துறை நம்பவில்லை. அங்கு ஒரு முக்கியமானவர் இருக்கிறார் என்றுதான் உளவுப்படையினர் நினைத்தனர். அது ஒரு மூன்று மாடி மாளிகை.

### மீண்டும் ஏமாறிய தேசிய பாதுகாப்பு முகவரகம்

மூன்று மாடி மாளிகையை செய்மதி மூலமும் நவீன கருவிகள் மூலமும் வேவு பார்த்த தேசிய பாதுகாப்பு முகவரகம் மீண்டும் ஏமாறியது. அந்த மாளிகைக்கு தொலைபேசித் தொடர்போ அல்லது இணையத் தொடர்பு வசதிகளோ இருக்கவில்லை. அதனால் அங்கிருந்து எந்தத் தகவல்களையும் பெறமுடியவில்லை. ஆனால் அப்படி ஒரு மாளிகைக்கு அப்படிப்பட்ட வசதிகள் இல்லாதிருப்பது சந்தேகத்தை வளர்த்தது. அங்கிருந்து குப்பைகள் வெளியில் வீசப்படுகிறதா என்று பார்த்தார்கள். குப்பைகளுக்குள் ஏதாவது தகவல் பெறலாம் என்று. அதுவும் இல்லை. மொட்டை மாடியில் வைத்து குப்பைகள் எரிக்கப்படுவதைக் கண்டனர். அங்கு பின் லாடன் இருப்பதை உறுதி செய்து கொண்டனர். வாலைத் தேடியவர்களுக்கு தலை அகப்பட்டது. இப்போது 2011 பெப்ரவரி.

### பெண்டகனும் சிஐஏயும் கலந்துரையாடின

சிஐஏ அதிபர் லியோன் பனெட்டா பெண்டகனின் சிறப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான வில்லியம் மக் ரவனை சிஐஏ பணிமனைக்கு பெப்ரவரி மாதம் அழைத்து அந்த மாளிகை மீதுதாக்குதல் நடந்தும் திட்டங்களை வகுத்தார். அவர்கள் மூன்று மாற்றுத் திட்டங்களை வகுத்தனர்.

1. பி-2 குண்டு வீச்சு விமானங்கள் மூலம் குண்டு வீசி மாளிகையைத் தாக்குவது.
2. ஹெலிக் கொப்டர்கள் மூலம் படையினரை மாளிகைக்குள் இறக்கித் தாக்குவது.
3. பாக்கிஸ்தானின் உளவுத் துறையுடன் இணைந்து தாக்குவது.

### ஒசாமாவைக் கொல்ல ஒபாமாவின் ஒப்புதல்

மார்ச் 14-ம் திகதி சிஐஏ அதிபர் லியோன் பனெட்டா மூன்று மாற்றுத் திட்டங்களுடன் வெள்ளை மாளிகைக்குச் சென்றார். பாதுகாப்புச் செயலர் ரொபேர்ட் கேர்ட்ஸ் இரண்டாம் திட்டமான ஹெலிக்கொப்டர் தாக்குதலை விரும்பவில்லை. அது ஆபத்தானது என்றார் அவர். விமானமூலம் தாக்குதல் நடத்துவதாயின் இரண்டாயிரம் இறாத்தல் எடையுள்ள 32 குண்டுகள் வீச வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. விளைவு மாளிகை இருந்த இடத்தில் பாரிய கிடங்கு. ஆனால் பின் லாடன் கொல்லப் பட்டார் என்பதை உறுதி செய்ய முடியாது. பாக்கிஸ்த்தானுடன் இணைந்து தாக்குதல் நடத்துவது நம்பகரமானது அல்ல என்றும் கூறப் பட்ட்து. பல வாதப் பிரதி வாதங்களின் பின்னர் பராக் ஒபாமா தனக்கு சில மணித்தியாலங்கள் தரும்படி கேட்டார். 16 மணித்தியாலச் சிந்தனைக்குப் பின்னர் வெள்ளை மாளிகைக்கு மீண்டும் உயர் அதிகாரிகளை அழைத்த ஒபாமா ஹெலிக் கொப்டர்கள் மூலம் படையினரை மாளிகைக்குள் இறக்கித் தாக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினார். அவருக்கு அத்திட்டம் பற்றி விளக்க முற்பட ஒபாமா அவர்களை இடைமறித்து போய் செய்து முடியுங்கள் என்றார். ஏற்கனவே அமெரிக்கப் படையினர் அபதாபாத் மாளிகை போல் ஒன்றை அமெரிக்காவில் உருவாக்கி தாக்குதல் ஒத்திகையில் ஈடுபட்டனர்.

### பாக்கிஸ்தானுக்கு அறிவிப்பு

பாக்கிஸ்தானுக்கு அறிவிக்கும் நேரத்தை அமெரிக்கர்கள் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டனர். முன் கூட்டி அறிவிக்காவிடில் பறக்கும் ஹெலிக்கொப்டர்கள் மீது பாக்கிஸ்தானியப் படைகள் தாக்குதல் நடத்திஇருந்திருக்கும். பாக்கிஸ்த்தானுக்கு வழங்கிய தகவல் அல் கெய்டாவிற்கு கசியப் போதிய கால அவகாசம் இல்லாதவகையில் தாக்குதலுக்கு சற்று நேரத்திற்கு முன்னரே அறிவிக்கப்பட்டது. இந்த உண்மை வெளிவந்தால் பாக்கிஸ்த்தானில் தீவிர வாதிகள் கிளர்ந்து எழலாம் என்பதற்காக இரு நாடுகளும் இதை மறுக்கின்றன

### தாக்குதல் விபரம்

பின் லாடனுக்கு ஜெரேனிமோ என்னும் குறியீட்டுப் பெயர் வழங்கப்பட்டது. அமெரிக்கக் கடற்படையின் கடல், வான், நிலம் ஆகிய மூன்று முனைகளிலும் சண்டையிடக்கூடிய சீல் (SEAL) பிரிவினர் ஒசாமா பின் லாடனைக் கொல்லும் சண்டையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். கடல்(SEA), வான் (AIR), தரை(LAND) ஆகிய சொற்களின் முதல் எழுத்துக்க்ளில் இருந்து SEALஎன்ற சொல் உருவாக்கப் பட்டிருந்தது. SEALபடைப்பிரிவில் மிக நேர்த்தியாகத் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் இந்தப் படை நடவைக்கையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். இவர்களை TEAM - 6 என அழைப்பர். ஆப்கானிஸ்த்தான் எல்லையில் உள்ள ஜலலாபாத்தில் இருந்து ஹெலிக்கொப்டர்கள் மாளிகையில் வீரர்களை இறக்கியது. அவர்கள் சுவர்களைக் குண்டுகளால் தாக்கினர். அங்கு பாதுகாப்பிற்கு இருந்த ஆணைக் காப்பாற்ற ஒரு பெண் குறுக்கே பாய்ந்தார். அவர் சுடப்பட்டார். அ்வர் மர்ம தகவல் பரிமாற்றக்காரரின் மனைவி. ஒரு ஹெலிக்கொப்டர் பின் லாடனின் பாதுகாவலரின் தாக்குதலுக்கு உள்ளானது.

அதில் எவரும் கொல்லப்பட வில்லையாம். பின்லாடன் இருந்த அறையின் சுவர்களைத் தகர்த்தே தாக்குதல் அணியினர் உள் புகுந்தனர். அங்கு இருந்த பின்லாடனின் மனைவியும் இரு மகன்களும் பயத்தில் ஓடிப்போய் தந்தையைக் கட்டிக் கொள்ளுதல் இயல்பு. அதை அமெரிக்கர் பின் லாடன் மனைவியைக் கேடயமாகப் பாவித்தார் என்கின்றனர்.

பின் லாடன் தங்கி இருந்த மாளிகையில் இருந்து கணனிகள் மற்றும் பதிவேடுகளை அமெரிக்கத் தாக்குதல் அணியினர் எடுத்துச் சென்றுள்ளனர். அவை அமெரிக்காவிற்கு அல் கெய்தாவிற்கு எதிரான நடவடிக்கைகளிற்குப் பெரிதும் உதவும். பின் லாடனின் நிதி மூலங்கள் ஆயுதக் கிடங்குகள் ஆயுதம் வழங்குபவர்கள் போன்றவை பற்றிய தகவல்கள் அவற்றில் இருக்கலாம்.

பின்லாடன் துப்பாக்கிச் சண்டை புரிந்ததாக முதலில் சொன்ன அமெரிக்கா பின்னர் அதைத் திருத்திக் கொண்டது.

பின்லாடனின் உடலை ஹெலிக்கொப்டரில் எடுத்துச் சென்று அரபுக் கடலில் இஸ்லாமிய முறைப்படி கிரியை செய்துவிட்டுவீசினாராம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Remembering Sri Lanka's Slaughtered Faces



By: Roy Ratnavel
TAMIL GUARDIAN

Any Tamil who lived in Sri Lanka knows how personal the month of May is. In sum: May will be etched in Tamils' memory as the month where Sri Lankan military most effectively demonstrated their ability and their desire to kill Tamils in the blood-lands of Vanni. This wound will stay raw forever.

This is a moment for Tamils to soberly reflect on how we value life and what meaning we attach to death. This moment is ripe for celebration, a celebration of the lives of innocent people killed in May 2009 and those who were caught in the crossfire of decade old war on Tamils in Sri Lanka.

When this Memorial Month concludes, thousands of Tamils around the globe will have participated in commemorations that represent a precious opportunity for reflection, remembrance and mourning — both public and private. It also presents an important lesson to us all to fulfill the obligation to the survivors — especially the kids.

My scarred memory is full with incidents of my experiences in northern Sri Lanka during mid-eighties. Skanthakumar and Roshan — two timid teenagers of Point-Pedro, a small coastal town whose inhabitants were frequently bombed and shelled to oblivion. Included in that was my family's ancestral home, which included two young boys — my only brother and myself.

> I soon learned to recognize, at a very young age the different sounds generated by bombers during an air raid: the aircraft guns; the machine guns and return fire of the Tamil fighters;

As boys growing up in northern Sri Lanka during the conflict of 1985-86, on most nights during heavy bombardment we lay on the warm floor of our home. I soon learned to recognize, at a very young age the different sounds generated by bombers during an air raid: the aircraft guns; the machine guns and return fire of the Tamil fighters; the cracks made by the incendiaries as they landed; the shock waves from the high explosive bombs, preceded by the seismic wave that was felt as we lay on the ground.

For me, the fear I remember most clearly was feeling the ground shocks from a stick of bombs, each one getting closer and more intense, and then the relief when the next shock came from the other side and the intensities began to decay. Many homes and lives were destroyed on a daily basis by the Sri Lankan terror apparatus. But some nights, surprisingly I have slept through it all.

At school, the teacher would sometimes ask us to stand and observe a moment of silence for the souls of my classmates who had been killed in a recent raid. Often we heard of number of people dead in the recent raid.

In 1986, at one of those silence tribute at my school, I learned the details of my classmates — Skanthakumar and Roshan. I learned that Roshan's house, and subsequently his body was blown to smithereens by Sri Lankan navy's daily recreational night shelling. Skanthakumar was dragged out of his house kicking and screaming by a gang of drunken soldiers — shot like an animal right in front of his parents — the only son they had.

British philosopher, and Nobel Laureate Bertrand Russell once observed that war doesn't decide who is right, war decides who is left and people who are vigorous and brutal often find war enjoyable, provided that it is a victorious war and that there is not too much interference with rape and plunder. This is a great help in persuading people that wars are righteous. Tamils perhaps do realize today how complete Russell's thoughts were.

Western governments and the media have gone along with Sri Lanka in blaming the Tamils and have refrained from criticizing the Sri Lankan government's handling of the ethnic strife. This stance certainly gave Sri Lanka the carte blanche to kill scores of Tamils. The world had its opportunity to save them and did nothing, except to wax eloquence; proving that global human rights have become more about carefully crafted marketing messages than about human life. It is either gross incompetence or collusion.

> According to recent U.N. findings numerous war crimes were, and still are committed against Tamils.

According to recent U.N. findings numerous war crimes were, and still are committed against Tamils. But it is too late for those murdered Tamils of Sri Lanka. However, the deeds of those who tried to protect Tamils from persecution — the few righteous around the globe, represent a flickering spark of humanity in a world that had gone dark. They offer a sharp rebuke to those who say "we had no choice," or "we did not know," or "it was a war against terrorism."

No words can bring meaning or sense to such senseless deaths. But commemoration can bring hope to those who survived and those who remember. And in so doing, we can at least show the victims of Sri Lanka's madness that their deaths had some effect on us, caused us to reflect, reconsider and even hope.

Like many Sri Lankan Tamils in the West, there's a troubled, guilty part of us that's still thousands of kilometers away. Troubled, because Tamils are still a persecuted minority in Sri Lanka. And guilty, because not everyone we loved managed to escape, like we did. we lived, but many Skanthakumars and Roshans didn't. To this day, many of us worry that we didn't do enough to help them. It's hard to enjoy the Western dream when your nightmares leave you racked with survivor's guilt.

Many survivors, like us, found a haven in the West. Through pure motivation, we found the strength to start over again; to build new families and to leave a legacy of hope, love and determination for our children and their descendants to follow. We need to show them where we are going, without forgetting where are from. In the end, we must show a fidelity to history and memory. We do this for ourselves and for those whose echoes were so murderously silenced — for the Skanthakumars and Roshans — whose still, soft voices call out from the grave to all of us to remember.

Certainly, we each have our memories of those we have lost. Some are personal, subtle moments between two individuals; some are the stories we all share that unite us in our grief and make us smile fondly even in the midst of overwhelming loss.It is important to replace numbers with names, which is why I felt the need to name my lost friends. Failing to do so is like a deafening silence — silence of a murdered generation, including thousands of innocent Tamil children. Each victim of the Sri Lankan terror had a name, felt love, was loved, laughed, cried, was scared and ultimately slaughtered by the Sri Lankan army hordes.

We have seen enough deaths to understand the value of life. It is important not to replicate the cycle of violence that has already crippled Sri Lanka. The war turned the innocent kids into numbers. It is for us Tamils in the West to turn the numbers back into kids.

If we cannot do that, then the tyrants have shaped not only these kids view of the world, but their humanity. We must honour those who were lost with forthright action and a commitment to ensure we will enhance the lives of those who survived, but are still suffering. We must serve as the much needed prosthetic to those amputated souls.

I am left only with the memories — the mischievous smile of Skanthakumar, the shy nature of Roshan, the two timid boys. But somewhere in this mangled memory will always be the life it represents, like an echo you no longer hear but swear you will never forget.

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all the Sri Lankan Communities
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
• Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!

Special rates for Containers and Machinery
4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: info@massshipping.com
Web : www.massshipping.com
*Condition Apply Warning
No hidden charges
No bnognus promotions

T.N. MOTORS SERVICES
All Makes & Models

CROYDON
181 Handcroft Road,
West Croydon, CR0 3LF
T:020 8689 1984
tn.motors@hotmail.com
Working Hours:
Monday - Saturday 9.00 am t 6.00 pm
Services and repair all makes and models,MOTs, Air Conditioning, Welding Insurance Work, Bodywork, Tyres, Exhausts Automatic & Manual Gearbox Repairs, Engine Rebuilds Specialists, Courtersy Cars Available on Most Repairs and Vehicle Recovery Services
020 8689 1984 • 020 8648 345
MITCHAM WORKSHOP 1
R/O 36A, Grenfell Road,
Mitcham, Surrey CR4 2BY
T : 020 8648 3458
M : 07956274764
F : 020 8665 9111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tigers are freedom fighters, not terrorists, says Professor Whitehall



By: Tim Elliott

HE HAS been called a "terrorist collaborator" and "cunning propagandist", a "brainwashed puppet" and "naive white man". He has been investigated by the Australian Federal Police and was mentioned last year by a Supreme Court judge in relation to potential anti-terrorism charges. But for Professor John Whitehall, the University of Western Sydney's foundation chair of paediatrics and child health, "collaborating" with Sri Lanka's Tamil Tigers is nothing to hide from.

"People called them terrorists," Whitehall says. "But as far as I could tell, they were freedom fighters. They were also my students, and I loved them."

At least nine of those "students" are now dead, killed in the final stages of the Sri Lankan civil war, in which the Tigers lost their fight against the government for a separate homeland in the island's north and east. And although the war finished two years ago, for Whitehall, at least, the struggle has not stopped. The 68-year-old, who was a finalist for Senior Australian of the Year in 2006, has since championed the Tamil cause in human rights forums and the media, where he has pressured the Australian government to pursue war crimes allegations against the Sri Lankan leadership.

"It's an ongoing tragedy and yet no one is held responsible" ...

"The Sri Lankan army has a lot to answer for," says Whitehall, who was buoyed by the release this week of a United Nations report that found credible allegations of war crimes committed by both sides.

"They bombed Tamil orphanages and schools and still have tens of thousands of Tamils locked up in secret concentration camps," Whitehall says. "It's an ongoing tragedy and yet no one is held responsible."

Whitehall first visited Sri Lanka in 2005 to deliver antibiotics and ventilators to areas devastated by the Asian tsunami. Later that year he returned, travelling to the north to teach what he thought was a group of medical students from Jaffna University. "About three weeks later, however, I discovered that my students comprised the medical wing of the Tamil Tigers." Most of his students had been fighters: many had suffered bullet and shrapnel wounds, three had wooden legs. They were familiar with combat medicine - everything from how to treat mass casualties to arterial surgery by torchlight while under artillery attack. To complete their medical degrees, they required a paediatrics course, and Whitehall obliged.

"When two fellows from the AFP interviewed me later on ... I just told them I was teaching the Tigers how to look after sick children. That's what I do."

Whitehall spent three months with the Tigers, during which time he befriended their political leader, S. P. Thamilchelvan ("a reasonable man, intelligent, engaging, educated"), visited their jungle hospitals and even helped his students publish a book of their first-hand accounts of the conflict, called War and Medicine.

His work has earned him the ire of the Sinhalese community in Australia and Sri Lanka. "The Ceylon College of Physicians wrote to the Australia College of Physicians asking that I be struck off," Whitehall says. "I was actually quite proud of that."

Nimal Liyanage, a spokesman for an Australian Sinhalese group called SPUR (Society for Peace, Unity and Human Rights for Sri Lanka), says Whitehall is "naive" and "ignorant".

"He gave medical assistance to a group that were at the same time sending suicide bombers to Colombo," Liyanage says. "[Whitehall] has a concern for human suffering, but why was he so blind to the carnage that went on in buses, trains, shopping malls, banks, streets and isolated villages for over 30 years done by the Tigers?"

He says Whitehall was a "willing accomplice"; he has "been indoctrinated with this stuff of the 'good terrorist'. He willingly accepted the idea that this terrorism was for a good cause, so the bloodshed of 20 million Sri Lankans by a few thousand Tigers was OK for him."

Whitehall continues to seek what he regards as justice for the Tamils, but remains pessimistic about the UN report.

"The UN is ineffective, but Australia should do something on its own, like revoke [Sri Lankan President Mahinda] Rajapaksa's invitation to the Commonwealth Heads of Government Meeting in Perth in October.

"We should demand they let Tamil civilians go from their concentration camps. And they should allow the [Red Cross] access to all the Tiger soldiers they have in their camps. Until then, Australia should have nothing to do with this lot."


இலண்டன் சிவன் கோயில்
மஹா கும்பாபிஷேக விழா விஞ்ஞாபனம்



சகல வளங்களும் பரிபூரணமாக விளங்கும் இலண்டன் மாநகரில் லூயிஷம் என்னும் பதியில் அமைந்துள்ள சிவபுரம் என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் ஸ்ரீ உண்ணாமுலை அம்பிகை சமேத ஸ்ரீ அண்ணாமலை பெருமான் எழுந்தருளி திருவருள் பாலித்து வருகிறார். இலண்டனில் முதல்முதலாக அமைக்கப் பெற்ற சிவாலயம் என்ற பெருமையுடன் விளங்கும் இவ்வாலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புடன் விளங்குகிறது. இவ்வாறான சிறப்புறு அம்சங்களோடு விளங்கும் இவ்வாலயம் ஆகம ரீதியில் கருங்கற்களினால் இராஜகோபுரம் சகிதமாக புதிதாக அமைக்கப் பெற்று இறைவனது மஹா கும்பாபிஷேக விழாவானது சர்வ மங்களகரமான கர வருஷம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பகல் 12.00 மணிக்குள் நடைபெறத் திருவருள் கைகூட்டியுள்ளது. மஹா கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரிஜைகள் 6.06.2011 திங்கட்கிழமை அதிகாலை 6.00 மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறும். 8.06.2011 புதன்கிழமை அதிகாலை 5.00 மணி தொடக்கம் சகல திருவுருவங்களும் நூதன ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்று அஷ்டபந்தனம் சாத்தப்படும். கும்பாபிஷேக தினமாகிய 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை இரவு திருக்கல்யாண வைபவம் இடம் பெறும்.

9.06.2011 வியாழக்கிழமை 10.06.2011 வெள்ளி ஆகிய இரு தினங்களும் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரையும், 11.06.2011 சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் பகல் 10.00 மணி வரையும் எண்ணைக்காப்பு நடைபெறும். எனவே, அடியார்கள் யாவரும் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து இறையருள் பெறுவதோடு ஆலய திருப் பணிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கும்பாபிஷேக தினம் 12.06.2011 ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறும்.

09.06.2011, 10.06.2011 இரு நாட்களிலும் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரையும் 11.06.2011 சனிக்கிழமை 7.00 மணி தொடக்கம் பகல் 10.00 மணி வரையும் எண்ணைக்காப்பு நடைபெறும்.

4A - Clarendon Rise, Lewisham London - SE13 5ES Tel : 0208 3189844, www.londonsivankoil.org.uk.

இங்ஙனம், அறங்காவலர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KIDS பேப்பர்

## ரோம எண்ணுருக்கள்

**I** அல்லது **i** இன் பெறுமானம் ஒன்று,
**V** அல்லது **v** இன் பெறுமானம் ஐந்து,
**X** அல்லது **x** இன் பெறுமானம் பத்து,
**L** அல்லது **l** இன் பெறுமானம் ஐம்பது,
**C** அல்லது **c** இன் பெறுமானம் நூறு,
**D** அல்லது **d** இன் பெறுமானம் ஐநூறு,
**M** அல்லது **m** இன் பெறுமானம் ஆயிரம்.

**FRUITS Name in TAMIL**

**APPLE** - அரத்திப்பழம், குமளிப்பழம்
**APRICOT** - சர்க்கரை பாதாமி
**AVOCADO** - வெண்ணைப் பழம்

**BANANA** - வாழைப்பழம்
**BELL FRUIT** - பஞ்சலிப்பழம்
**BILBERRY** - அவுரிநெல்லி
**BLACK CURRANT** - கருந்திராட்சை, கருங்கொடிமுந்திரி
**BLACKBERRY** - நாகப்பழம்


*By: AYSHVAAN THEVARAJAH (10 years)*


Riddles


1) What goes up but never comes down?
Your age.
2. What has holes but never spills water?
A sponge.
3) What stays at the corner but travels round the world?
A stamp.
4. What has 8 letters but only 1 letter in it
An envolope.
5. What has fethers but can't fly?
A Peacock

Saraneyaa 8+









**Dear Kids...**
Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!





*By: Ashuvinie*





*By: Lakshvinie*



*By: Vigaashan*



*By: Lavenja*



*By: Pirakeith*




*By: Dhivyah*




*By: Shasithan*




*By: Joseph*




*By: Rehashan*




*By: Lavenja*




*By: Vigaashan*




*By: Menuja*




*By: Bavikesh*




*By: Saraneyaa*




*By: Shasithan*

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is Vigaashan***




## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | E | T | R | A | V | E | L | O | E |
| S | P | O | R | T | N | I | L | M | A |
| S | A | N | D | P | O | D | E | L | J |
| E | U | A | R | S | B | E | A | C | H |
| M | R | D | S | G | V | F | T | N | G |
| E | Q | Y | U | A | Z | A | I | U | W |
| S | O | H | M | R | I | B | N | J | E |
| U | O | P | M | D | C | X | T | U | K |
| A | R | S | E | E | O | P | C | X | T |
| U | K | L | R | N | M | R | D | V | F |

**Hidden Words:**
**Subject: Summer Fur**
BEACH, GARDEN, SAND, SPORT, SUMMER, TRAVEL

**Submitted by:**
***By: Vigaashan Asokan*** *(South Harrow)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TSS

உதை பந்

சுற்றுப் பே

201



கடவுளே பந்து மட்டும் என்னட்டை வந்திடப்படாது



அண்ணை.. இதால அடிச்சா.. ஆனையிறவுக்கு அங்கால போய் விழுமோ?



வண்டியை குறைக்கிறதுக் காச்சும் ஒரு நடைபயணம் லண்டனில வைக்க வேணும்.



அக்கா எந்த குதிரையில காசு கட்டினீங்கள்?



லெப்ட்.. ரைட்.. லெப்ட்.. அசெம்பிளி பொயின்ட் எங்க எண்டு கெதியா சொல்லுங்கப்பா...



பிள்ளை.. கையில இருக்கிறதால ஓரே போடா போடுடியம்மா...



நீங்க எல்லாம் இப்படி படத்துக்கு போஸ் குடுத்து கொண்டு திரியுங்கோ... நிண்டவன் போனவன் எல்லாம் மேடையை பாவிச்சிட்டு போறாங்கள்



மக்களே... வடிவா கேளுங்கோ... சிறிலங்கா ஒரு திறமான நாடு.. நீங்க எல்லாரும் அங்க போய் மீன் பிடிக்கலாம்.... மாடும் மேய்க்கலாம்



அரசியல் வேற... விளையாட்டு வேற எண்டு சொன்னாங்கள்....





வடிவா பாருங்கோ... நான்தான் முதல் முடிச்சன்.. எனக்குத்தான் முதல் பிரைஸ்.



எல்லாருக்கும் டெசேர்ட் இருக்கு... அந்தரப் படாதீங்கோ



பேசியலுக்கு செலவழிச்ச காசுக்கு ஒரு திறீ பெட் ரூம் ஹவுஸ் வேண்டி இருக்கலாமப்பா... ஏன்தான் ரிசெசன் வந்திச்சோ



நாங்களும் கஸ்டப்பட்டுதான் வே
இதைப் பார்த்தாச்சும் ஏதாவது

























## மேலதிக படங்களுக்கு http://g

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SSA

## பந்தாட்ட
## போட்டி
## 2011



நான் யார் எண்டு
சொல்லுங்கோ பார்ப்பம்



Charlie.. charlie
5 mutton rolls.. 2
உழுந்து வடை over!





ஐஸ்கிறீம் குடிச்சா சின்ன ஆக்களுக்கு மட்டும்தான் தடிமன் வரும்.



நீ நடந்தால் நடையழகு



கடவுளே.. இதில
எண்டாலும் கொம்யூனிஸ்ட்
பார்ட்டி வெல்ல வேணும்





விளையாட்டு போட்டி எண்டு சொல்லி கூட்டி வந்து.. இப்படி காயப் போட்டுட்டாங்களே மச்சான்.



பழைய மாணவர் ஒன்றியம் எண்டு சொன்னாங்கள். நாங்கள் மட்டும்தான் நிண்டு முறிய வேண்டிக் கிடக்கு



நாங்கள் மட்டும் என்னவாம்?



டுதான் வேலை செய்யிறம்..
ஏதாவது மெடல் தாங்கப்பா.



லண்டன் வாழ் தமிழ் மக்களே... ரிடையர் பண்ணினா பிறகு நீங்களும் இப்படி ஒரு மஞ்சல் துண்டை போட்டுட்டு வந்து எங்களோட ஐக்கியமாகுங்கோ...



அண்ணை.. அந்த சிவப்பு சேர்ட் போட்டவன தூக்கிறம்.



செய்திகளை தொடர்ந்து காலநிலை அறிக்கை. நான் மழை எண்டு ஒரு நாடகம் போடலாம் எண்டு நினைக்கிறன். தமிழனுக்கு நேரம் சரியில்லைப்பா.

























# /gallery.britishtamils.com/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாதிகளின் அசிங்க அரசியல்

**சஞ்சீவன்**

***(ஒரு பேப்பருக்காக)***

புலம்பெயர் தேசங்களில் குறிப்பாக லண்டனில் சில தமிழ் அமைப்புகள் செயற்படும் விதத்தைப் பார்த்தால், மிக விரைவில் மகிந்த ராஜபக்ஷவையும் ஏனைய சிங்கள இனவர்திகளையும் ஒய்வெடுக்குமாறு கூறிவிட்டு தாங்களே ஈழத்தில் மிஞ்சி இருக்கும் அப்பாவித் தமிழ் மக்களை இல்லாமல் செய்து விடுவார்களோ என்று அச்சமாக இருக்கு. அந்தளவுக்கு மிகவும் கீழ்த்தரமான அரசியல் செய்து வருகிறார்கள்.

இதுவரை காலம் எங்கே இருந்தார்கள், என்ன செய்தார்கள் என்று தெரியாத நபர்கள் எல்லாம் சிறு சிறு குழுக்களாக சேர்ந்து புதிய அமைப்புகளை உருவாக்கிவிட்டு அந்த அமைப்புகள் தான் ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் போலவும், அவர்கள் மட்டும்தான் ஈழத்திலே உள்ள மக்களுக்கு உதவி செய்வதாகவும், இதற்கு முன் பல ஆண்டுகளாக தமிழர்களுக்காக இயங்கி வந்த அமைப்புகளை கொச்சைப் படுத்தியும் செய்துவரும் பிரச்சாரங்களைப் பார்த்தால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து நிச்சயம் அச்சப்பட வேண்டியே உள்ளது. இவர்களைப் புறக்கணித்து விட்டுச் செல்ல வேண்டிய கடமை இருந்தாலும் இவர்களின் கீழ்த்தரமான அரசியலின் அடிப்படைகளை மக்களுக்கு கட்டாயம் எடுத்துச் சொல்லவேண்டும். இந்த வகையான அமைப்புகளை பெயரிட்டுக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தமும் இப்போது ஏற்பட்டிருக்கு.

முக்கியமான இரண்டு அமைப்புகளின் செயற்பாடுகளை அலசி ஆராய்ந்தால் மிகுதி அமைப்புகளின் தன்மையையும் எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஒன்று "நேர்டோ" (NERDO) என்ற அமைப்பு. மற்றையது "லிட்டில் எய்ட்" (Little Aid) என்ற அமைப்பு. இந்த அமைப்புகளின் கீழ்த்தரமான அரசியல் தவிரவும் இராஜேஸ்வரிபாலசுப்ரமணியம், இராகவன் போன்ற சிலரது தனிப்பட்ட அரசியலும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

கடந்த சில வாரங்களாக லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக் காட்சி ஒன்றில் சமகால அரசியல் தொடர்பாக வாரத்தில் ஒருநாள் நடைபெறும் நேரடி விவாத நிகழ்ச்சியை தொடர்ந்து பார்க்க நேர்ந்தது. அதில் நிகழ்ச்சித் தொகுப்பாளர் தவிர நான்குபேர் பங்குபற்றினார்கள். ஒருபுறம் பிரித்தானிய தமிழர் பேரவை, இளையோர் அமைப்பு போன்ற நீண்ட காலமாக தமிழர்களுக்காக செயற்பட்டுவரும் அமைப்புகளில் அங்கம் வகிக்கும் இரண்டு பேரும், மறுபுறம் நேர்டோ , லிட்டில் எய்ட் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் விவாதித்தார்கள்.

ஐ.நா போர்க்குற்ற விசாரணை அறிக்கை தொடர்பான ஒரு விவாதத்தின்போது நேர்டோ, லிட்டில் எய்ட் பிரதிநிதிகளின் வாதம் மிகவும் மோசமான உள்நோக்க அரசியலைக் கொண்டதாக அமைந்திருந்தது. அந்தப் பிரதிநிதிகள் பேசும்போது, தங்களுடைய அமைப்பு மட்டும் தான் ஈழத்தில் துன்பப் பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு உதவிகளை செய்வதாகவும், இப்போது வடக்குக் கிழக்கிலே எந்த இராணுவ நெருக்குதல்களும் இல்லாமல் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இயல்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருப்பதாகவும் கொஞ்சமும் வாய் கூசாமல் ஒரு பொது உரையாடலில் சொல்கிறார்கள். அதில் லிட்டில் எய்ட் பிரதிநிதி, தான் கடந்த இரண்டு வருடங்களில் ஒன்பதாவது தடவையாக இலங்கைக்கு சென்று வந்துள்ளதாகவும், அங்கே எந்தவிதமான சோதனைக் கெடுபிடிகளும் இல்லை என்றும், வடக்குக்கு செல்லும் போது சோதனைச் சாவடிகளில் நின்ற இராணுவத்தினர் தன்னை இறங்கவேண்டாம் என்று சொல்லி மரியாதையாக அனுப்பி வைத்ததாகவும் சிங்கள இராணுவத்துக்கு ஜால்ராப் போடுகிறார். லட்சக் கணக்கில் எம் மக்களையும் போராளிகளையும் கொன்று குவித்த சிங்கள இராணுவம் தன்னை மரியாதையாக அனுப்பிவைத்தது என்று தன்னைத் தமிழன் என்று கூறிக்கொள்பவன் எவனாவது சொல்வானா? வாயைப் புளிந்து புளிந்து சிங்கள ராணுவத்துக்கு வக்காலத்து வாங்கும் அந்த நபரை தொலைக்காட்சியில் பார்க்கும் சமயம் எவருக்கும் ரத்தக்கொதிப்பு நிச்சயம் ஏற்படும்.

அந்த நிகழ்ச்சியிலேயே அவருடைய முகமூடி கிழித்தெறியப்பட்டது. அவர் முதல்முறை போகும்போது பசில் ராஜபக்ஷவின் துணையோடு, இராணுவப் பாதுகாப்போடு வடக்குக் கிழக்குக்குப் போய் வந்தவராம். (இந்த இலட்சணத்தில் சிறிலங்கா இராணுவம் அவருக்கு சலூட் அடிக்காமல் வேறென்ன செய்யும்?)

நேர்டோ அமைப்பின் பிரதிநிதி பேசும்போது அடிக்கொரு தடவை "நான் முன்னர் புலிகள் அமைப்பில் ஆயுதம் தாங்கிப் போராடியவன்" என்பதையே சொல்லிகொண்டிருந்தார்.இதற்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியில் பங்குபற்றிய இராகவனும் இதையேதான் கூறினார். இவர்கள் முன்னாள் போராளிகள் என்ற அடையாளத்தை வைத்தே இப்போது தம் பிழைப்புகளை ஓட்டுகின்றனர். முன்னாள் போராளிகள் என்ற அடையாளத்தை தமக்கு சாதகமாகவும், அதை ஒரு சமூக அங்கீகாரமாகவும் நினைத்து அடிமட்ட தமிழ் சமூகத்தில் குழப்பத்தை உண்டு பண்ணப் பார்க்கிறார்கள். புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழர்களின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்று தோற்றபின்னர், இப்போது புதிய புதிய பெயரில் அமைப்புகளை உருவாக்கி, சிங்கள அரசாங்கத்தின் துணையுடன் இலங்கைக்குப் போய், அங்கே நலிவுற்றுள்ள எம் மக்களை குழப்புவதில் ஈடுபட்டுள்ளனர்.

இதிலே உச்சக் கட்ட அபத்தம் என்னவென்றால் இலங்கையில் நடைபெற்றது போர்க் குற்றமே இல்லை என்று நேர்டோ, லிட்டில் எய்ட் பிரதிநிதிகளும், இராகவன், இராஜேஸ்வரிபாலசுப்பிரமணியம், தேசம்நெட் சோதிலிங்கம் போன்றவர்கள் வாதிட்டதுதான். இவர்க்ள் எல்லோரும் தமிழர்களாம்.

பிரித்தானியத் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, தமிழ் இளையோர் அமைப்பு போன்றவை ஈழத்திலே உள்ள மக்களுக்கு என்ன வகையான உதவிகளை யார் மூலம் செய்கிறது என்பதை வெளிப்படையாக சொல்லக் கூடிய அரசியல் சூழ்நிலையா இப்போது நிலவுகிறது திரும்பத் திரும்ப BTF , TYO பிரதிநிதிகளைப் பார்த்து "நீங்கள் மக்களுக்கு என்ன உதவி செய்தீர்கள் " என்று கேட்பதைப் பார்க்கும்போது, அதை அறிந்து சிங்கள அரசுக்கு காட்டிக் கொடுக்கும் உள்நோக்கம் இருப்பது வெளிப்படியாகவே தெரிகிறது.

ஒரு பேச்சுக்காக, மகிந்த ராஜபக்ஷவே "நானும் எனது இராணுவமும் போர்க் குற்றம் புரிந்தோம்" என்று தானாகவே ஒப்புக் கொண்டால்கூட இந்தப் புலம்பெயர் அடிவருடிகள் விடமாட்டார்கள் போல் தெரிகிறது.

உண்மையில் புலம்பெயர் மக்கள் தெளிவாகவே உள்ளனர். ஆனால் பொருளாதார ரீதியாகவும், மன ரீதியாகவும் மிகவும் நலிந்து போயுள்ள தாயகத்தில் உள்ள மக்களை நேர்டோ ,லிட்டில் எய்ட் போன்ற அமைப்புகளும், சில தனிப்பட்ட நபர்களும் தமது சுயலாப அரசியலுக்காக தவறான பாதைக்கு வழிநடத்தக்கூடிய அபாயம் இருக்கு. தாயகத்தில் உள்ள பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவி செய்வது வரவேற்கத் தக்கதுதான். ஆனால், அங்கே இன அழிப்பே நடைபெறவில்லை எனவும், சிங்கள அரசு தமிழ் மக்களை கண் கலங்காமல் பாதுகாக்கிறது என்றும் மிகவும் துணிச்சலாக பொது வெளியில் வந்து சிங்களத்துக்கு துதி பாடுபவர்களை மக்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னர் ஏசியன் ட்ரிபியூன் என்ற இலங்கை அரச ஆதரவு இணையத் தளத்துக்கு 'வன்னிப் போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படவில்லை' என்று செவ்வி வழங்கியடக்ளஸ்சுக்கும் இந்த நேர்டோ, லிட்டில் எய்ட் வகையறாக்களுக்கும் கொஞ்சமும் வித்தியாசமில்லை. BTF, GTF , TYO போன்ற அமைப்புகள் நேரடியாக ஈழத்தில் களமிறங்கி செயற்பட முடியாத நிலையில், புலம்பெயர் நாடுகளில் உள்ள பொதுமக்கள்தான் தாங்கள் தாங்களே தமது சொந்தக் கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு தங்களால் ஆனால் உதவியை நேரடியாகச் செய்து, தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும்.


**Study with the fastest growing Business School in Europe**

London School of Business & Finance

London • Birmingham • Manchester • Worldwide

**Meet London School of Business & Finance on Saturday 14th May 2011 at the UK University Fair.**

Earls court London, Warwick Road, London SW5 9TA. 12:00 – 17:00

**SI - UK கண்காட்சியின் முடிவில் விண்ணப்பித்து £6000 பவுண்கள் பெறுமதியான 'ஸ்கொலர்ஷிப்'பை வெல்லுங்கள்!***

LSBFஇன் பயிற்சித்திட்டங்கள் யாவும் தொழில் சம்பந்தமானதும், தொழில்சார்ந்ததுமாக இருப்பதுடன் உங்களது தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கான தகுதி கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை, அக்டோபர், ஜனவரி, ஏப்ரல் ஆகிய எமது நான்கு ஆரம்ப திகதிகளில் சேருவதற்கு மிகவும் குறைந்த வெற்றிடங்கள் இன்னும் உள்ளன.**

* கண்காட்சியின் போது நேரில் சமுகமளித்து விண்ணப்பித்தோரில் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு £6000/- பவுண் பெறுமதியான 'ஸ்கொலர்ஷிப்' சீட்டுக் குலுக்கல் முறையில் தெரிந்து அளிக்கப்படும்.

**LSBF Business School Programmes**

- Master in Business Administration (MBA)
- Master in International Business (MIB)
- MSc Finance
- MSc Marketing
- LLM in International Business Law
- Bachelor in International Business (BIB)
- Bachelor in Business Administration
- Bachelor in Accounting & Financial Studies
- LLB Law
- School of English



Tel. +44 (0) 207 100 1808
www.lsbf.org.uk

உங்களுடைய பட்டப்படிப்பினைத் தேர்வு செய்வது பற்றி தனிப்பட்ட முறையில் யாரிடமாவும் கலந்தாலோசிக்க வேண்டுமானால் Andrew Rowe உடன் எனும் arowe@isbf.org.uk மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது **020 7287 7040** என்ற தொலைபேசி எண்ணில் பன்மொழி ஆலோசகர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேதின ஊர்வலம்




















தொழிலாளர்கள் தினமான மே முதலாம் திகதி மே தின ஊர்வலத்தில் பெருந்திரளான தமிழர்கள் பங்கேற்றனர்.

மத்திய லண்டன் பகுதியில் பிரித்தானியா வாழ் பல்லின மக்களும் பங்கேற்ற இந்த மேதின நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்குகொண்டிருந்தனர்.

பல்லாயிரக்கணக்கான பல்லின மக்களோடு Clerkenwell green பகுதியில் இருந்து ஆரம்பமாகிய இந்த மேதின ஊர்வலம் Trafalgar Square பகுதியை நிறைவடைந்தது

இப்பேரணியில் 'போர்க்குற்றங்களை அம்பலப்படுத்திய சனல்4, அல்ஜசீரா, ரைம்ஸ் ஊடகங்களுக்கு நன்றி' 'போர்க்குற்றவாளிகளை கைது செய்' 'ஈழத்தமிழர்களுக்கு நீதி வழ்ங்கு', 'தமிழர்கள் மீதான இன அழிப்பை நிறுத்து' 'தமிழ் மக்கள் சுதந்திரத்தை நேசிக்கும் மக்கள்' 'ஐ.நா வே சிறீலங்காவின் போர்க்குற்றங்களை தாமதமின்றி விசாரணை செய்' போன்ற கோஷங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு பேரணியில் பெருந்திரளான தமிழர்கள் கலந்து கொண்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் சிறீலங்கா அரசின் போர்க்குற்றவாளிகளை நிறுத்த உதவுமாறும், சிறீலங்காவில் நடைபெற்ற இன அழிப்பு தொடர்பாக விசாரணை செய்ய சர்வதேச பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறும் கோரும் மனுவிற்கு ஆதரவு தெரிவித்து பல்லின மக்களிடமும் கையொப்பம் பெறும் நடவடிக்கையில் நாடு கடந்த தமிழீழ அரச பிரதிநிதிகள் ஈடுபட்டிருந்தமையை காணமுடிந்தது. ஆர்ப்பாட்டப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்

## வெள்ளிவிழா நிகழ்வுகள்



















Herts Tamil Schoolஇன் வெள்ளி விழா நிகழ்வுகள் அண்மையில் வெகு சிறப்பாக இடம்பெற்றன நிகழ்வுகளின் போது எடுத்த புகைப்படங்களையே மேலே காண்கிறீர்கள்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் புத்தாண்டு நாள் நிகழ்வுகள்







Sutton For Peace and Justice இன் தமிழ்ப் புத்தாண்டு நாள் நிகழ்வுகள் அண்மையில் Greenshaw High School இல் இடம் பெற்றன. நிகழ்வுகளில் சட்டன் தமிழ் பாடசாலை மாணவிகளின் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

அன்றையதினம் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி வழங்குவதற்காக நிதி சேகரிக்கப் பட்டது.

நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

## மூடிக் கிடக்கிறது முள்ளிவாய்க்கால் புத்தரின் காவியினால்

ஓர் கொடிய நீண்ட இரவின் பிறப்பில் எலும்பும் சதையுமாக எரிந்து கொண்டிருந்தது முள்ளிவாய்க்கால்.

இறந்த தாயின் முலையில் குழந்தை பால் குடிக்க இழுத்து வந்து நெருப்பு மூட்டினர்.

இருளின் நடுவே சிலுவை தாங்கி இறைவன் வருவான் என நிலவைப் பார்த்தோம் கண்களை மூடி இது உன் விதி என்றது.

எங்களின் வீட்டினுள் யூதர்கள் நுழைந்தனர் யேசுவைக் கேட்டனர் ஆயிரம் ஆயிரம் சிலுவையில் அவர்களை அறைந்தனர் அடையாளம் காட்ட யூடாஸ் வந்தான்.

மாவீரன் கல்லறையில் மீண்டும் இரத்தம் வடிய உயிர்த்திருந்தவர்களை இன்னெருமுறை புதைத்தனர் கனவுகள் உடைந்து கல்லறைக்குள் ஒளித்துக் கொண்டது.

இரத்தமும் சதையுமாய் எழுப்பிய சுவருக்குள் எங்கள் முகங்கள் எரிந்து கருகின.– முள்ளிவாய்க்கால் முழுமையாக மூச்சிழந்தது ஆயிரம் சிலுவையோடு அணைந்து போனது.

அந்த உயிர்களின் கனவும் வாழ்வும் கங்கையில் மிதந்த பிணங்களைப் போல் எங்களின் வயல்களில் பிணங்கள் நீந்தின.

எல்லாமே எரிந்து முடிந்தது மிஞ்சிக் கிடக்கும் சாம்பலில் இருந்து எலும்பை எண்ணிக் கணக்கெடுக்க அங்கு யாரும் சாட்சிகள் இல்லை

எரிந்து கிடக்கும் சாம்பலைத் தவிர எஞ்சியிருப்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை மிஞ்சியிருக்கும் காக்கையும் குருவியும் கரைந்த படி திரிய நாறிக் கிடந்தன.

பிணங்கள் நாங்கள் மனிதரில்லை என்றே மூடிக் கிடக்கிறது முள்ளிவாய்க்கால் புத்தரின் காவியினால்.

தாகம் தீர்த்தது சத்திய சோதனை எங்களின் குருதியினால்.

– பா. உதயகுமார்

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்




ஆர்ப்பாட்டப் நிகழ்வு
சிறிலங்கா துடுப்பாட்ட அணிக்கு எதிரான ஆர்ப்பாட்டம்
நேரம்: காலை 10:00 மணி முதல்
இடம்: Gatting way, Off Park Road, Uxbridge UB8 1NR
ஏற்பாடு: தமிழ் இளையோர் அமைப்பு

MAY 14 SATURDAY

இலவச யோகா வகுப்புக்கள் (10 வாரங்களுக்கு)
நேரம்: காலை 10:00 மணி முதல் 11:00 வரை
இடம்: Harrow High School, Gayton Road, Harrow HA1 2JG
ஏற்பாடு: மிடில்செக்ஸ் தமிழ் கல்விக்கூடம்

MAY 15 SUNDAY

தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வு
இடம்: Greenford Town Hall, Ruislip Road, Greenford UB6 9QN
நேரம்: மாலை 03:00 மணி
ஏற்பாடு: நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

MAY 18 WEDNESDAY

வன்னிப் பேரவல நினைவு நாள்
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இரண்டாம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வுகள்.
இடம்: Trafalgar Square, London. WC2N 5DN
நேரம்: மாலை 06.00 - 08.00 வரை
தொடர்புகளுக்கு: British Tamil Forum

MAY 21 SATURDAY

கலையரசி-2011
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளையினர் நடாத்தும் கலையரசி 2011
இடம்: Ilford Town Hall, High Road, Ilford, IG1 1NF
நேரம்: மாலை 06.30 மணிக்கு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விமர்சிப்பதில் காலத்தை செலவிடாது செயற்பாடுகளில் கவனத்தைச் செலுத்துங்கள்" - உருத்திரகுமார்

நாடுகடந்த அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைகின்ற நிலையில் அதன் செயற்பாடுகள் தொடர்பாக அறிவதற்காக நா.க.அ பிரதமர் திரு. விஸ்வநாதன் உருத்திரகுமாரனை **ஒரு பேப்பர்** தொடர்பு கொண்டது. நாம் எழுத்து மூலம் அனுப்பிய வினாக்களையும் அவரது பதில்களையும் இங்கு தருகிறோம்.



**இதுவரை சாதித்தவை எவை?**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு எண்ணக்கருவாக கருக்கொண்டு பிரசவமாகி, குழந்தையாகத் தவழ்ந்து, தற்போது ஒரு வயதை நிறைவு செய்யும் நிலையில் நிமிர்ந்து நடை பயிலத் தொடங்குகிறது. எந்த ஒரு புதிய அமைப்பும் உருவாகும்போது அவ்வமைப்பு தனது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி முன்னெடுக்க சிறிது காலம் தேவைப்படும். இது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கும் பொருத்தமானதே. இத் தளத்திலிருந்துதான் நாம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளை நோக்க வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கமே ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் வெற்றிதான். ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையினை எவராலும் நசுக்கி விட முடியாது என்ற செய்தியினை சிங்களப் பேரினவாதிகளுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கம் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது.

சுதந்திரத் தமிழீழ அரசினை அமைப்பதற்குரிய அரசியல் இராஜதந்திர நகர்வுகளுக்கு ஒரு பலமான அடித்தளத்தை இடும் செயற்பாடுகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. உலகில் பலமிக்க அரசுகளின் நலன்கள், ஒரு பிரச்சினையில் இந்த அரசுகள் எடுக்கும் நிலைப்பாடுகள் காத்திரமான பங்கினை வகிக்கும் என்பதனை நாம் கவனத்திற் கொண்டு இம் முயற்சியினை மேற்கொண்டுள்ளோம். இதவேளை ஒவ்வொரு நாட்டின் உள்நாட்டு நிலைமைகளுக்கும் உள் நாட்டுக் கொள்கைகளுக்கும் வெளியுறவுக் கொள்கைக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இருக்கும் நிலைமைகளையும் உள்வாங்கியே எமது வியூகங்களை வகுக்கிறோம்.

இத்தகையொரு பின்புலத்தில் இலங்கைத் தீவில் புவிசார் அரசியல் அடிப்படையில் அக்கறை செலுத்தும் பலமிக்க அரசுகளில் எவற்றின் நலன்கள் ஈழத் தமிழ் நலன்களோடு ஒரே தளத்தில் சந்திக்கக் கூடியவை என்பதனை ஆராயந்து, அவற்றை அரசியல் இராஜதந்திர அறிவியல் மட்டத்தில் முன் வைத்து, இவ் வியடம் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் ஒரு சிந்தனை மாற்றத்தை எற் படுத்தும் முயற்சியில் நாம் தற்போது ஈடுபட்டு வருகிறோம். இம் முயற்சியினை வலுப்படுத்ததுவதற்காக ஒரு ஆய்வு நிறுவனத்தையும் நாம் உருவாக்கி வருகிறோம்.

நமது தாயகத்தில் நமது மக்களின் துயர் துடைப்பதிலும் இவர்களது எதிர்கால வாழ்வினை வலுவாகக் கட்டி அமைப்பதிலும் நாம் காத்திரமான பாத்திரத்தை வகித்தாக வேண்டும். இருந்த போதும் சிறிலங்கா அரசாங்கம் தற்போது கடைப்படித்து வரும் நடைமுறைகள், கொள்கைகள் காரணமாக நாம் தற்போது இம் முயற்சியில் நேரடியாக ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் அற்றுப்போய் உள்ளன. இவ் வியடத்தில் நாம் அனைத்துலக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதனையே நமது தற்போதய அணுகுமுறையாகக் கொண்டுள்ளோம். இலங்கைத் தீவினை விட்டு வெளியேறும் உறவுகளுக்கு நம்மால் இயன்றவரை உதவும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

மலேசியாவில் நாம் இவ் விடயம் தொடர்பாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்தியாவில் திபேத் மக்களுக்கு இருக்கும் உரிமைகளை நமது ஈழத் தமிழ் மக்களுக்கும் வென்றெடுப்பதில் அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளோம். தற்போது ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூடுதல் கவனம் கொடுத்துச் செயற்படுகிறோம். இவ் அறிக்கையினை எவரும் குப்பைத்தொட்டிக்குள் வீசி விட முடியாத அளவுக்கு வலுவாக அனைத்துலக சமூகத்தின் உணர்வலைகளைத் தட்டியெழுப்பி, இவ் அறிக்கையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டு மென்ற அனைத்துலக கருத்தை காத்திரமாக உருவாக்குவதுமுக்கியமானது என உணர்ந்து செயற்படுகிறோம். இவ் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டே சிறிலங்கா அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளது என்பதை வலியுறுத்தும் முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டுள்ளோம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது இம் முதலாவது ஆட்சிக்காலத்தில் செயற்பாடுகளை முன்னெடுப்பது மட்டுமன்றி இச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கட்டமைப்புக்களையும் உருவாக்கும் இரட்டைப் பொறுப்பினைச் சுமந்து நிற்கிறது.

*நா.க.அ. ஜனநாயக அணியினரை நாம் சில வாரங்களுக்கு முன்னர் செவ்வி கண்டபோது, தற்போதையயாப்பினை தாம் ஏற்றுக் கொள்ளாதமைக்கான காரணங்களாக, ஒன்று, அரசவையின் தலைமைக்கும் (executives) உறுப்பினர் அவைக்கும் (legislature) இடையில், அதிகாரச் சமநிலை (checks and balances) காணப்படாமை. மற்றயது, பலநாடுகளில் பரந்து நாம் வசிக்கிறோம் என்பதை அனுகூலமாக எடுத்துக்கொண்டு, நாடுகடந்த ரீதியில் அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்படவில்லை என்பவற்றைக் கூறினார்கள். இது தொடர்பில் உங்களது கருத்து என்ன?*

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்தான் முக்கிமானதே தவிர தனிமனிதர் எவருமல்ல. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை திரைமறைவில் இருந்து எவரும் இயக்கவில்லை. இவ்வாறு எவரும் இயக்க முயன்றாலும் அதனை நாம் அனுமதிக்கப் போவதுமில்லை**

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்பை யார் இன்று விமர்சனம் செய்கிறார்களோ அவர்கள் இந்த அரசியல் அரசமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கினை ஆற்றியிருந்தார்கள்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிறைவேற்று அவைக்கும் உறுப்பினர் அவைக்கும் இடையே இருக்க வேண்டிய உறவுநிலை குறித்தும் இவர்கள் அங்கம் வகித்த அரசிலமைப்புக்குழுதான் சரத்துக்களை உருவாக்கியது. அரசியலமைப்பின் நகல் தயாரானவுடன் உறுப்பினர்கள் அனைவருக்கும் அதனை அனுப்பி அவர்களின் கருத்துகளும் மாற்று ஆலோசனைகளும் உள் வாங்கப்பட்டன. இவ்வாறான மாற்று ஆலோசனைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது. உதாரணமாக மூன்று துணைப்பிரதமர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என அரசியலமைப்பு நகல் தெரிவித்தபோது அவ்வாறு மூன்று துணைப் பிரதமர்கள் தேவையில்லையென மாற்றுநிலைப்பாடு சில உறுப்பினர்களால் தெரிவிக்கப் பட்டது. இது வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஒரு அதிகப்படியான வாக்கினால் மூன்று துணைப் பிரதமர்கள் என்ற நிலைப்பாடு வெற்றி கண்டது. இதனை இன்று அரசியலமைப்பை எதிர்ப்பவர்கள் தமக்குச் சாதகமாகக் கொண்டனர்.

அடுத்து துணைப்பிரதமர்களை பிரதமர் தேர்ந்தெடுப்பதா அல்லது அப் பிராந்தியத்தின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதா என்பதற்கு வாக்கெடுப்பு நிகழ்ந்தது.

இதில் துணைப்பிரதமர்களை பிரதமர் தேர்ந்தெடுப்பது என்ற நிலைப்பாடு வெற்றி கண்டது. இது இன்று அரசியலமைப்பை எதிர்ப்பர்களின் நிலைப்பாட்டுக்கு மாறானதாகும். இதுவே இவர்கள் இந்த அரசியலமைப்புடன் முரண்பாடு என்று கூறத்தலைப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் ஆகும். மூன்று துணைப் பிரதமர்கள் தேவையில்லை என்று கருதிய உறுப்பினர்கள் எவ்வாறு வாக்கெடுப்பின் முடிவினை ஏற்றுக் கொண்டார்களோ அதேபோல் துணைப் பிரதமர்களை பிரதமர் தேர்நதெடுப்பதற்கு ஆதரவாக வெளிப்பட்து. இம்முடிவினை இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இவர்களால் அப்படிச் செய்ய முடியவில்லை. மேலும், அதிகாரங்கள் ஒரு பிரதேசத்திலோ அல்லது தனிமனிதரிடமோ குவிந்து கிடப்பதாகக் கூறப்படுவதிலும் உண்மையில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிறைவேற்றுக் குழுவாக தற்போது அமைச்சரவை உள்ளது. அமைச்சர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களாக நாடு கடந்த ரீதியல் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நாடு கடந்தரீதியல் செயற்படுகின்றனர். நாம் அமைச்சரவையில் ஏகமனதாக. அல்லது பெரும்பான்மையின் அடிப்படையில் தீர்மானங்களை நிறைவேற்றிச் செயற்படுகிறோம். சில முக்கியமான தீர்மானங்கள் உறுப்பினர்களால் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக, மே 18 ஆம் திகதியைத் தமிழீழ தேசிய துக்க நாளாகப் பிரகடனம் செய்தமை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட தனிநபர் மசோதா மூலமாகத்தான் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சரவையால் அல்ல.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். அரசியலமைப்பு எழுதப் பட்டபோது, அரசவையின் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாது இருக்க வேண்டும் எனவும் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் பிரதமராக இருக்க முடியாது எனவும் சரத்துக்களை நான் முன்மொழிந் திருந்தேன். இங்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தான் முக்கிமானதே தவிர தனிமனிதர் எவருமல்ல.

*நாடு கடந்த அரசாங்கத்திற்கு தெரிவான உறுப்பினர்களிடையே குழு நிலையான முரண்பாடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே வெளிவந்த அறிக்கைகளும், செய்திகளும் இதனை உறுதிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இவ்வகையான முரண்பாடுகளுக்கு திரை மறைவில் நின்று நாடுகடந்த அரசாங்கத்தை இயக்க முற்படுபவர்களே காரணம் என ஊகிக்கப்படுகிறது. இவ்வாறான அழுத்தங்கள், நெருக்குவாரங்கள் உங்கள் மீது பிரயோகிக்கப்படுகிறதா?*

இவ் விடயத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பாக நாம் வெளிப்படுத்தும் நிலைப்பாடுகளையும் எமது செயற்பாடுகளையும் தான். சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழஅரசினை உருவாக்குவதையே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. மேலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை திரைமறைவில் இருந்து எவரும் இயக்கவில்லை.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது விடியும்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக ஒரு நம்பிக்கை. இதன் நம்பகத்தன்மையை விவாதிக்க படுவதை தவிர்த்து, தமிழ் மக்களிடையே காணப்படும் இரண்டு வகையான மணமுடிச்சுக்களில் பிரதானமாக வழக்கத்தில் இருப்புது பெரியோர்களால் பேசி முடிக்கும் திருமணம் ஒரு வகை.

அடுத்ததாக வருவது காதல் திருமணங்கள். காதலித்து திருமணங்கள் கை கூடுவதில் பல தடைகள் எதிர்ப்பட்டாலும், காதலர்களின் பரஸ்பர மனோதிடமே இத்திருமணங்கள் நிறைவேறுவதில் முக்கிய பங்கை வகிக்கிறது. பெரியோர்களால் பேசி முடித்துவைக்கப்படும் திருமணங்கள் பல கோணங்களில் அலசி ஆராயப்பட்டாலும் முடிவில் கிரக பொருத்தம், சாதி, சீதனம் ஆகிய இணக்கங்கள் முக்கிய பங்கை வகிப்பது இன்றும் தமிழ் மக்களிடையே இருந்து வரும் பரம்பரை வழக்கமாகிவிட்டதை எவராலும் மறுக்க முடியாது.

தாயகத்தில் வாழும் குடும்பங்களில், பெண்களை பிள்ளைகளாக பெற்ற தாய் தந்தையர்களுக்கு பெரிய தலையிடியாக இருப்பது மணமாகாத பெண்பிள்ளைகளே. அனேகமான குடும்பங்களில் 30 வயதுக்கும் 40வயதுக்கும் இடைப்பட்ட திருமணமாகாத பெண்கள் விரக்தியின் விளிம்பில் இருப்பதை அறிமுகமான சில பெற்றோர்கள் அழாக் குறையாக அழுது வடித்தனர்.

இதன் அடிப்படை காரணத்தை ஆராய்ந்த போது 30 வருட யுத்தம் பெரும்பாங்கை வகிப்பது தவிர்க்க முடியாத காரணங்களில் ஒன்று. இக்கொடிய யுத்தம் ஒரு இனத்தின் இளம் ஆண் வர்க்கத்தையே மூன்று சகாப்த காலத்தில் முற்றாக அழித்துவிட்டதை உணரமுடிகிறது.

வசதிபடைத்தவர்களின் குடும்பங்களை சேர்ந்த இளைஞர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்த காரணத்தால், திருமண வயதை எய்திய தாயகத்தில் வாழும் பெண்களுக்கு உரிய வயதில் திருமணங்கள் இடம் பெற போதிய இளைஞர்கள் இல்லாத காரணத்தினால் திருமணப்பருவமெய்திய பெண்களின் திருமணங்கள் தள்ளியே போய்விட்டன.

காலம் கடந்த திருமணங்களை நிறைவேற்றி வைக்க பெற்றோர்கள் திருமண தரகர்களையும் நிறுவனங்களையும் நாடும்போது இவர்கள் முகம் கொடுக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக 'சீதனம்' தலை தூக்கியுள்ளதாக அறிகின்றோம். வெளிநாட்டு மாப்பிள்ளையாக இருந்தால், அவரவர் படிப்புக்கும், தொழிலுக்கும், இருப்பிட விசாவுக்கும் ஏற்றவாறு தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

உள்நாட்டு மாப்பிள்ளையாக இருந்தால் வெளிநாட்டுக்கு செல்ல வேண்டிய பயணச்செலவு எதிர்பார்க்கப்படுகின்றது. அதிலும் படித்த பட்டதாரி பெண்ணாக இருந்தாலோ, தோஷமுள்ள கிரக சாதகராக இருந்தாலோ அதற்கு பொருத்தமான மணமகனை தேடுவது முயல்கொம்புதான். மூன்று சகாப்தமாக தோன்றிய கொடிய யுத்தத்தினால், இழந்துவிட்ட எமது சந்ததியினரை ஈடு செய்ய முடியாமல் தவிக்கும் தமிழ் சமுதாயத்தில், திருமணமாகாத பெண்களுக்கு எப்போது விடியும்? இளைஞர்களே முன் வாருங்கள்.

# கார் திருட்டுக்களில் புதிய அணுகுதல்

கணணிக்குள் ஊடுருவும் கள்ளர்கள் போல (Hackers) கார்களுக்கும் திருட்டுத்தனமாக உள்ளே புகக்கூடிய வாய்ப்பு வந்துவிட போவதாக ஆராய்ச்சியாளர்கள் அபாயச்சங்கை ஊதுகிறார்கள். ஏனெனில் நவீன கார் உற்பத்தியில் 70க்கும் மேற்பட்ட மின் அணுக்களாலான பகுதிகள் (Electronic Control Units) காரின் என்ஜினை மையமாக வைத்தே உருவாக்கப்படுகின்றன. இதன் காரணமாக காரின் முக்கிய இயக்கங்களான கை வளையம் (Steering), கதவுகளின் பூட்டுக்கள், காற்றுப்பை (Airbag), வேகத் தடுப்புக்கள் (Brakes) ஆகியவை கணணி வகையிலான மின் அணுக்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன.

காரின் பாதுகாப்பை தூரத்திலிருந்தே இயங்க வைக்கும் கைக்கருவி மூலம் செயல்படுத்த நவீன கார்களில் பாவனைக்கு வந்து பல காலமானாலும் இதே முறையில் காரின் பாதுகாப்பை உடைக்கும் அபாயம் உண்டு என ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். கலிபோனியாவிலுள்ள பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞான பேராசிரியர் Stepan Savage அவர்களும் Todayoshi Kohno என்னும் அவரது உதவியாளர் அவர்களும் கண்டுபிடித்த மென்பொருள் (Software) பொருத்தி Blutooth கணணி வலைப்பின்னல் மூலமும், கைத்தொலைபேசி மூலமும் கார் இயந்திரத்தின் இயக்கங்களை கட்டுப்படுத்த முடியுமென கடந்த மார்ச் மாதம் நிரூபித்துள்ளனர்.

இவர்களுடைய ஆராய்ச்சியின் பெறுபேறுகள் தப்பானவர்களின் வசம் சேர்ந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டாலும், கார் உற்பத்தியில் கடைப்பிடிக்கப்படும் மின் அணுக்களாலான பகுதிகளை, இத்தகைய விரோதமான சக்திகள் அணுகிவிடாமல் தடை செய்ய பாதுகாப்பு அரண் (Built–In–Firewall) அமைக்கவேண்டிய தேவை அவசியம் இருப்பதாக Anup Ghosh எனும் பிரதான விஞ்ஞான பேராசிரியர் பரிந்துரைத்துள்ளார். கார் உற்பத்தியாளர்கள் கவனிப்பார்களா?

# இழந்த குரலை அடையாளம் காண முடியும்

புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களும், மாரடைப்பு போன்ற இதய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களும், தமது குரல்வளையை (Larynx) இழப்பது ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் அடங்குவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உடனடி நிவாரணமாக, கழுத்தில் பொருத்தப்படும் குழாய்கள் (Valves) இவ்வாறு பேசும் திறன் இழந்தவர்களுக்கு மிக குறைந்த பரிகாரத்தை தந்தாலும் அடிக்கடி அவை மாற்றம் செய்ய வேண்டிய தேவை இருப்பதால் நிரந்தரமான தீர்வை தேடி ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டன. செபீல்டு (Sheffield) பல்கலைக்கழகத்தை சேர்ந்த Phil Green தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆராய்ச்சியில், குரலை இழந்தவர்கள் பேச நினைக்கும் வார்த்தைகளை அவரவர் முகத்தில் தென்படும் அசைவுகள், நாக்கின் நகர்வுகள், உதடுகளின் துடிப்புகள் போன்ற சைகைகளை ஒழுங்குபடுத்தி, மீட்டெடுக்கும் முயற்சியில் அதிசயிக்கத்தக்க ஒரு கருவியை கண்டுபிடித்துள்ளனர்.

காந்த சக்தியை கொண்ட சிறியரக கருவியை வாய்க்குள் திணித்து, இதனால் கிரகிக்கப்படும் நகர்வுகளை, தலையில் பொருத்தப்படும் ஒலிவாங்கியில் உள்வாங்கி, பேச நினைத்த வார்த்தைகளை ஒலிபெருக்கி வழியாக Bluetooth மூலம் பேச வைக்கப்படுகின்றன.

இதுவரை பரீட்சைக்கு உட்படுத்திய நபர்களில், அவரவர் திறமையின் அடிப்படையில் அறியக்கூடியதாக அதிகபட்சம் 50 சொற்கள் மட்டுமே அடையாளம் காணக்கூடியதாக இருப்பதை Phil Green அவர்கள் கூறுகின்றார்கள்.

வாய்க்குள் திணிக்கப்படும் காந்த சக்தி பொருந்திய கருவி, சில அசௌகரியங்களை ஏற்படுத்துவதால், அக்கருவியை சிறிய அளவில் நாக்கின் நுனியில் பொருத்துவதற்கு மேலும் ஆராய்ச்சிகள் நடைபெறுவதாக Hull பல்கலைக்கழகத்தை சேர்ந்த James Gilbert அவர்கள் கூறுகிறார்கள். அத்துடன் தலையில் பொருத்தப்படும் ஒலிவாங்கியின் அளவையும் சிறிதாகவும், அழகாகவும் வடிவமைக்க ஆராய்ச்சிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குரல்வளை பாதிப்புக்குட்பட்டு பேச்சை இழந்த பல்லாயிரம் மக்களுக்கு பரிகாரமாக வரப் போகும் இப்புதிய கருவி, பாவனைக்கு வருவதற்கு இன்னும் 12 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டுமென, ஐக்கிய இராய்ச்சியத்தை தளமாக கொண்டு இயங்கும் பிரபல உற்பத்தியாளரான Toby Churchil என்ற நிறுவனம் எதிர்பார்ப்பதாக அறிகிறோம். காத்திருப்போம் பொறுமையுடன்.



# We're Hiring!

## Can you teach us something new?

'You see what you get' and we practice that at ***ORU Paper.*** We are the foremost Tamil Newspaper in the Europe to break the print medium cliches and creativity is part of us.

We love to collaborate with innovative individuals and if you can teach us something new—we would love to hear from you.

Current openings:

**'Business Development Executive'**
**(2 positions)**

**Responsibilities:**

- Find potential customers to advertise with Oru Paper
- Liaise with businesses in regards to Sponsorship
- Find new leads to grow revenue
- Manage advertising agencies
- Develop advertising opportunities, via building rapports with advertising agencies and businesses
- Analysing and achieving targets from customer relationship management
- Promotional marketing for the newspaper via events and partnership programmes
- Managing the production of both marketing and newspaper publication
- Direct Marketing for the publications and ad hoc projects
- Briefing the creative team in relation to producing adverts

**Requirements:**

Min A-C Grades at GCSE or equivalent including English Language.

**Skills:**

- Capable of building instant, credible rapport and have solid business acumen.
- Must be reliable, conscientious, with work ethics and a "can do" attitude.
- Willingness and ability to cold-call to create new business prospects.
- Willingness to travel within the set georgraphical area.
- Excellent communication skills – both verbal and written.
- Flexible approach to role and requirements.
- Self Motivated and able to prioritise workload.
- Ability to meet deadlines.
- IT/Microsoft Office skills (intermediate level).
- Community focused

**Point your CVs to**
careers@orupaper.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "விமர்சிப்பதில்.....

(21ம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறு எவரும் இயக்க முயன்றாலும் அதனை நாம் அனுமதிக்கப் போவது மில்லை. நாம் நமது மக்களுக்கு விசுவாசமாக வெளிப் படையாகத் தான் இயங்குகிறோம். நமது மக்களுக்கு உண்மையாகவே நாம் இருக்கி றோம். மேலும் நாடு கடந்த தமிழீழ அரசா ங்கத்துக்கு உலகளாவிய ரீதியில் வலுத்து வரும் மக்கள் ஆதரவு நமக்கு எத்தகைய வெளிச் சக்திகளின் அழுத்தத்தையும் எதிர் கொள்ளும் ஆற்றலை எமக்கு வழங்கி நிற்கிறது.

**உலகத் தமிழர் பேரவை முக்கியமானதொரு அமைப்பு. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் பரிந்துணர்வுக்குரிய சுமூகமான உறவுண்டு.**

*நாடு கடந்த அரசாங்கம், தமிழீழத் தாயக த்தை தனது அடிப்படை கோட்பாடாக வரித்துக் கொண்டுள்ளது. ஆனால் இக்கோட்பாட் டையிட்டு குழப்பமான கருத்துகளை வெளி யிட்டுவரும் கலாநிதி ஏ.ஜே. சந்திரகாந்தன் போன்றோர் (வேறும் சிலரது பெயர்களை இங்கு குறிப்பிட முடியும் நா.க.அ க்கு மதியுரைஞர்களாக உள்ளர். சந்திரகாந்தன் சிறிலங்கா அரச படைகளுடன் சேர்ந்தியங்கும் திரு. செல்வராசா பத்மநாதனுக்கும் (கே.பி.) ஆலோசகராக உள்ளார். இந்நிலையில் முரண்பட்ட நலன்கள் கொண்டிருப்பவர்களின் ஆலோசனையை ஏற்று நடக்கும்உங்கள் மீதும் இயல்பாகவே சந்தேகம் ஏற்படுகின்றது. தமிழீழக் கோரிக்கையை இறுதி இலட்சிய மாகக் கொள்வது பற்றிய உங்களது நிலை ப்பாட்டை தெளிவுபடுத்துவீர்களா?*

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனக்குத் தேவையான விடயங்களில் தேவையா ஆலோசகனைப் பெற்றுக் கொள்வதற்காக மதியுரைக் குழுவினை அமைத்துள்ளது. உரு வாக்கக் காலத்தில் இக்குழுவில் பங்கு கொண்டவர்களைக் கொண்டே இம் மதியுரைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரும் விடயங்களில் இவர்கள் தமது கருத்தக்களை வழங்குவார் க்ள். இக் கருத்தக்களை ஆய்வு செய்து முடிவுகளை எடுத்துக் கொள்வது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஈழத்தமிழர்களுக் காகத் தனியரசு அமைக்கும் எமது இலக்கில் கொண்டுள்ள உறுதிப்பாட்டுக்கு நமது செயற் பாடுகளே சாட்சியமாக அமையும்.

*வழமையான அரசாங்கங்களை போலன்றி நா.க.அரசாங்கம் வரி அறவிடுதல்போன்ற வருமானம் பெற்றுக் கொள்வதற்கான பொறி முறை எதனையும் கொண்டிருக்கவில்லை. உங்கள் செய்திட்டங்களுக்கான நிதியை எங்கி ருந்து பெற்றுக் கொள்கிறீர்கள்? இது தொடர் பாக பாதீடு ஒன்றை (வரைபையாவது) தயாரித் துள்ளீர்களா?*

மக்களே நமது நிதிமூலத்தின் ஆதாரம். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது நிதித் தேவைகளுக்கு மக்களிடம் இருந்து பங்க ளிப்புகளைப் பெறுகிறது. இப் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்கான மேலும் விரிவுபடுத் தப்பட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிதி யமைச்சர் இதற்கான நடைமுறைகளைக் கவனித்து வருகிறார்.

*நாடு கடந்த அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்படும் ஊடகங்கள், உலகத்தமிழர் பேரவை மீது அவதூறுகளை வெளியிட்டு வருகின்றன. அவ்வமைப்பை போட்டியமைப் பாகவும், எதிர்த்தரப்பாகவும் இவை பார்க் கின்றன. இரண்டு அமைப்புகளும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தி, செயற்திட்டங் களை முன்னெடுக்க முடியாதா?*

இந்தக் கேள்வியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு ஆதரவானஊடகங்கள் உலகத் தமிழர் பேரவையுடன் பகைமை பாரா ட்டுவதாக பொதுப்படையாக் கூறப்படுவது அபத்தமானது. இன்று தமிழ் ஊடகப்பரப்பில் பெரும்பாலான ஊடகங்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை ஆதரிக்கின்றன. இவையெல்லாம் உலகத் தமிழர் பேரவை யுடன் பகைமை பாராட்டுவதாக நான் கருத வில்லை.

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான ஆதரவினையும் அங்கீகாரத்தையும் வென் றெடுப்பதற்கு நாம் நமது அரசாங்கத்தை ஒரு வலுமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.**

எம்மைப் பொர்றுத்தவரை உலகத் தமிழர் பேரவை முக்கியமான தொரு அமைப்பு. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் பரிந்துணர்வுக்குரிய சுமூகமான உறவுண்டு. எந்தவொரு ஊடகமும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துடனோ அல் லது உலகத் தமிழர் பேரவையுடனோ அல்லது மக்கள் அவைகளுடனோ பகைமை பாராட்டு வதை விடுத்து ஈழத் தமழர் விடுதலை குறித்து ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண் டும். இதேபோல் அமைப்புகளும் தமக்கி டையே பகைமை பாராட்டும் மனப்பாங்கைக் கொண்டிருக்கக்கூடாது. ஒருவரையொருவர் விமர்சிப்பதில் காலத்தை செலவிடாது தமது செயற்பாடுகளில் கவனத்தைச் செலுத்த வேண்டும். அப்போது ஒன்றுபட்டு செயற்படு வதற்கான சூழல் செயற்பாட்டுத்தளத்தில் உரு வாகும்.

*இறுதியாக, அடுத்த இரு ஆண்டுகளுகளில் நடை முறைப்படுத்துவதற்கென திட்டமிட்டு ள்ள செயற்திட்டங்கள் பற்றி குறிப்பிடுவீர்களா?*

செயற்திட்டங்களைக் கூறுவதனைவிட அனைத்துலக அரசியல் தளத்தில் ஆதர வினையும் அங்கீகாரத்தினையும் வென்றெ டுப்பதற்கு அடுத்து நாம் கடைப்பிடிக்கவிரு க்கும் அணுகுமுறையினைக் குறிப்பிடுவதே கூடுதல் பொருத்தமானது என நான் கருது கிறேன்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான ஆதரவினையும் அங்கீகாரத்தையும் வென் றெடுப்பதற்கு நாம் நமது அரசாங்கத்தை ஒரு வலுமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பலத்தினதும் நலன்களதும் அச்சில் சுழலும் இவ் உலக ஒழுங்கில் உலகின் கவனத்தை நாம் நமது பக்கம் ஈர்க்க வேண்டுமானால் நாம் பலமிக்கவர்களாக மிளிர வேண்டும். ஈழத் தாயகத்தின் புவியியல் அமைவிடம், தாயக மக்களின் தளராத விடுதலை உணர்வு, புலம் பெயர் மக்களின் தயாக ப்பற்றும் செயற்பாடுகளும், உலகம் முழு வதும் பரந்துள்ள எண்பது மில்லியன், தமி ழர்களும் ஒருங்கு சேர்ந்து எழுப்பக்கூடிய தோழைமை உணர்வு, இவையெல்லாம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு வலுமை யமாகஉருவாகுவதற்குத் தேவையான வலு வினைத் தரக்ககூடியவை. இத்தகைய ஒரு வலுமையை நாம் உருவாக்கிக் கொள்வது தொடர்பாக நம்பிக்கை தரும்வகையில் முன்னேறத் தொடங்கியுள்ளோம்.

இன்றைய உலக ஒழுங்கு இயங்கும் விதத்தை புரிந்து கொண்டு நாம் உலக அரசுகளிடம் முதற்கண் குறி வைப்பது அவர் களின் வெளிப்படையான அங்கீகாரத்தை அல்ல. நாம் இயங்குவதற்கும், நமது நாடு கடந்த அரசாங்கத்தை செயற்படுத்துவதற்கும் வாய்ப்பும் வசதியும் கிடைக்கும் வகையிலான ஒரு மறைமுகமாக அங்கீகாரத்தில் இருந்து தான் நாம் நமது இராஜதந்திர உறவு களை ஆரம்பிக்கிறோம்.

ஒவ்வொரு நாட்டின் சட்டங்களும் ஜன நாய விழுயங்களும் எமது செயற்பாடு களுக்கு உறுதுணையாயிருக்கின்றன. இதன் அடுத்த கட்டம் வெளிப்படையான அங்கீகா ரத்தை நோக்கியதாக இருக்கும். இத்தகைய மறைமுகமான மற்றும் வெளிப் படையான அங்கீகாரம் நாம் நமது இலக்கு குறித்து முன்னேறுவதற்குத் துணைபுரியக் கூடியவை.




தமிழர்களுக்கான ஒரே சேவை!

எம்மவரின் சேவையே எமது ஒரு பேப்பரின் சேவை

லண்டனில் மட்டுமன்றி ஏனைய பாகத்திலும் வீடுகள், அறைகள், கடைகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாடகைக்கு விடுவதற்கும், எடுப்பதற்கும் சகல வசதிகளுடன் செய்து தர காத்திருக்கிறோம்.

மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் விளம்பரங்கள் போன்றவற்றை எமது பத்திரிகையில் பிரசுரிப்பதற்கும்.

உங்கள் பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண வாழ்த்துக்கள் மற்றும் அனைத்து வித மங்களகரமான நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
020 7043 4310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## முல்லையில் வளரும் புத்தர்.



முல்லை மாவட்டத்தில் குமுழமுனைக்கு தெற்கு பக்கமாக இருக்கும் குருந்தூர் மலை உச்சியில் மிக பிரமாண்டமான புத்தர் கோவிலை அமைத்து வருகிறது சிங்கள அரசு. இதன் கட்டுமான பணிகள் நிறைவுற்றதும் முல்லைத்தீவு, வவுனியா,திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களால் இதன் கோபுர உச்சியை காண முடியுமாம். இது கோட்டாவின் கண்டிப்பான உத்தரவும் கூடவாம். கட்டுமான பணியாளர்களோடு ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## புழுத்த பாண் போதும் தமிழனுக்கு



முல்லை ஒட்டிசுட்டானில் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தை அண்டிய ஒரு தனியார் காணியொன்றை சிங்களவர் ஒருவர் கையகப்படுத்தி, அதில் பேக்கரி ஒன்றை நடத்தி வருகிறார். இங்கே தயாரிக்கப்படும் பாண், பணிஸ் போன்றவற்றில் பூச்சி, புழுக்கள், வண்டுகள் காணப்படுவதாகவும், இதை அப்பகுதி மக்கள் அந்த சிங்களவரிடம் முறையிட்டதற்கு 'இந்த பகுதியில் இனியொரு தமிழனுக்கு பேக்கரி போட அனுமதி கிடைக்காது என்றும், தெமிழனுக்கு பசித்தால் பூச்சியோ, புழுவோ இதைத்தான் சாப்பிட வேண்டுமென்று மிரட்டியிருக்கிறார் அந்த சிங்களவர்.

## மிலிந்தவின் நோக்கம்.



மகிந்தவின் முதன்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொறகொட மகிந்தருக்கு ஆலோசனை கொடுக்கின்றாரோ இல்லையோ த.தே.கூ உறுப்பினர்கள் சிலரை சில சட்ட சிக்கலில் மாட்டி விடுவதோடு தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் பிளவுகளை உண்டு பண்ணி கூட்டமைப்பை கச்சிதமாக உடைத்துவிடுவார் என்பது சிங்கள புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது.

## கோட்டாவின் அளுங்குப்பிடி.



வருகிற 16ம் நாள் பிரீஸ் இந்தியா போய், பின்பு அணி சேரா நாடுகளின் கூட்டத்தொடரில் பங்கு கொண்டு நாடுதிரும்புவதற்குத் தான் இருந்தாராம், ஆனால் கோட்டாவின் விடாபிடியால் சீனாவுக்கும் போய் வருவதாக அவரது பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டதாம். காரணம் சீனா போவதாக இந்தியாவிடம் தெரிவித்தாலே நிபுணர் குழு அறிக்கைக்கு முந்தி விழுந்து முழு ஆதரவும் இந்தியா செய்யும் என்பது கோட்டாவின் நம்பிக்கை.

## தமிழ்நாட்டு தலைவரின் அக்கறை.



06-05-2011 அன்று சென்னையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் உலகப்பயங்கராவாதி பின்லாடனின் இறப்புக்கு இரங்கல் தெரிவித்து ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களால் விசேஷ தொழுகையும் ஆர்ப்பாட்டமும் செய்யப்பட்டது. இதை பாதுகாப்பு பிரிவினர் கண்டு கொள்ளவேயில்லை, ஆனால் ஈழத்தமிழர்களுக்கோ அல்லது இந்திய மீனவர்களுக்கோ கொடுமை செய்யாதே, கொத்துக்கொத்தாய் சுட்டுக்கொல்லாதே என்று மக்கள் ஒன்று கூடினால் அரைமணி நேரத்துக்குள்ளேயே அள்ளிக் கொண்டு போய் அடைத்துவிடும் கருணாநிதி அரசு..

## இன அழிப்பின் இன்னொரு அங்கம்.



முல்லைத்தீவில் கரையோர பகுதிகளான கொக்குழாய், கொக்குத் தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகளில் குடியேறிய மீன் பிடிக்கும் சிங்கள சமூகத்தவர்களால் பாரியளவில் வடி சாராயம் வடிக்கப்பட்டு இலங்கை இராணுவத்தின் உதவியுடன் தமிழர் பகுதிகளில் விற்று வருகிறார்கள். இப்படியே தொடர்ந்தால் எஞ்சிய ஆண்களும் விரைவில் இறக்கநேரிடும் என்று பெண்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

## தமிழ்நாட்டு தலைவரின் அக்கறை



06-05-2011 அன்று சென்னையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் உலகப்பயங்கராவாதி பின்லாடனின் இறப்புக்கு இரங்கல் தெரிவித்து ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களால் விசேஷ தொழுகையும் ஆர்ப்பாட்டமும் செய்யப்பட்டது. இதை பாதுகாப்பு பிரிவினர் கண்டு கொள்ளவேயில்லை, ஆனால் ஈழத்தமிழர்களுக்கோ இல்லது இந்திய மீனவர்களுக்கோ கொடுமை செய்யாதே, கொத்துக்கொத்தாய் சுட்டுக்கொல்லாதே என்று மக்கள் ஒன்று கூடினால் அரைமணி நேரத்துக்குள்ளேயே அள்ளிக் கொண்டு போய் அடைத்துவிடும் கருணாநிதி அரசு.

## உள்ளே தள்ளினால் உணவு தவிர்ப்பு.



கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி 2.G அலைக்கற்றில் 230 கோடி ரூபா பணபரிமாற்றம் தொடர்பான வழக்கில் அவரை கைது செய்யும்படியான சூழல்உருவாகுமானால், கருணாநிதியும் அவரது குடும்ப அங்கத்தினர் அத்தனை பேரும் கூடி கூட்டு உண்ணா விரதம் இருப்பதாக தீர்மானித்திருக்கிறார் 'ஆனால் அவரது மூத்த மகன் அழகிரி தான் கலந்து கொள்ளப் போவதில்லை என கண்டிப்பாக தெரிவித்து விட்டாராம்.

# ராஜபக்சே - மனமும் குழம்புது! குடும்பமும் குழம்புது!!




இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ச தனது புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான் கீ மூன் கெடுத்துவிட்டதாக புலம்பினாராம். அவரது புத்தாண்டுக் கொண்டாட்டம் மரண வீட்டுக்கு கீழே அந்தியேட்டிக்கு மேலே.

மஹிந்த ராஜபக்ச தனது இறுதி நிலை சதாம் ஹுசெயினுக்கு கீழே இடி அமீனுக்கு மேலே என்று நினைத்துக் கலங்கத் தொடங்கி விட்டாராம்.

ஐக்கிய நாடுகள் சபை ஒருபக்கம் இருக்க சனல் - 4 தொலைக்காட்சி வேறு இலங்கை அரசின் அட்டூழியங்களை தொடர்ந்து ஒளிபரப்பிவருகிறது. இதனால் மஹிந்த ராஜபக்சவின் நிலை பனையால் விழுந்தவனுக்கு கீழே மாட்டால் மிதி பட்டவனுக்கு மேலே.

தனது உதவாக் கரை தம்பியால் தான் இதெல்லாம் நடந்ததா என்று அவர் நினைப்பது முண்டாம். பசில் ராஜபக்ச மஹிந்தவைக் கவிழ்த்து விட்டு தான் பதவிக்கு வர முயற்ச்சிக்கிறாராம். இதனால் அவரது குடும்பம் வியட்னாம் வீட்டிற்கு கீழே பாமா விஜயத்திற்கு மேலே.

தனக்கு ஏதாவது நடந்தால் அடுத்த வாரிசாக தன் மகனைக் கொண்டு வர வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ச நினைக்கிறாராம். இதற்கு தனது மகனை பிரதமமந்திரியாக்க வேண்டும் என்று கருதுகிறாராம். இதற்கு கோத்தபாய ராஜபக்ச சம்மதிக்கவில்லையாம். இந்த வாரிசுப் பிரச்சனையில் அவரது நிலை கருணாநிதிக்கு கீழே சோனியாவிற்கு மேலே.

தனக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச் சாட்டில் இருந்து தப்பி ஓடுவதா அல்லது நின்று போராடுவதா என்பதைப் பற்றி கடுமையாக சிந்திக்கிறாராம் மஹிந்த ராஜபக்ச. இதனால் இவரது நிலை ஹஸ்னி முபாரக்கிற்கு மேலே மும்மர் கடாபிக்கு கீழே.

இவை எல்லா வற்றையும் மனதில் போட்டுக் குழப்புவதால் மஹிந்த ராஜபக்சவின் நிலை பைத்தியத்திற்கு கீழே மன அழுத்ததிற்கு மேலே.

*- வேல் தர்மா*

**COMPUTER REPAIRS**

உங்கள் கொம்பியூட்டர்

- Slow வாக வேலை செய்கிறதா?
- அடிக்கடி இறுகிப் போய் நிற்கிறதா?
- வைரஸ் ஏதும் பூந்திட்டுதா?
- Error மெசேஜ் வருகிறதா?
- Internet க்கு போனா அறுபத்தி எட்டு windows திறக்கிறதா?

எல்லாம் சரி செய்யலாம்

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**DATA RECOVERY**

உங்கள் கொம்பியூட்டர்

- Hard disk இறுகிப் போய்விட்டதா?
- மிக முக்கியமான data மாட்டிக் கொண்டதா?
- பிள்ளைகளின் முக்கியமான படங்கள் அழிந்து போய் விட்டதா?

பிரச்சனைக்கு முடிவு கட்ட

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**IT SUPPORT**

FOR YOUR BUSINESS

- PC / Server Maintenance
- Wireless / Wired Networking
- OS / Software (re)Installation
- Regular Data Backup
- Anti-Virus / Firewall Setup
- Block unwanted website visits, safe valuable staff time
- Broadband Supply

CALL US ON

020 7043 4318

FREE CONSULTATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்பாபா மற்றும் ஓசாமா

ஒரு கிழமையில் இரண்டு முக்கிய சாவுகள் நிகழ்ந்துள்ளன. எவருடைய சாவும் அவர்களது உற்றார் உறவினர்களுக்கு முக்கியமான சாவு தான். ஆனால் இங்கு குறிப்பிடப்படும் இரண்டு சாவுகளும் சமூக அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன. சாய்பாபாவின் சாவு ஒன்று மற்றயது ஒசாமா பின்லேடனுடைய சாவு.

ஒசாமாவின் சாவுபற்றிப் பெரிதாகப் பறைய ஒன்றுல்லை இசுலாமிய அடிப்படைவாதியாக இருந்து கொண்டு இசுலாமியப் பெண்களுக்கு அவர் இழைத்த அநீதி கொடுரமானது.

அதையும் விடக் கொடுரமானது பின்லாடனை இட்டு உலகத்தில் சாதாரண அப்பாவிச்சனங்களின் அச்சம். பொது மக்களை இலக்கு வைத்து அவர் நடாத்திய தாக்குதல்கள் மன்னிக்கப்பட முடியாதவை. இவ்வாறான பயங்கரவாதங்களில் எப்பொழுதும் பலியாக்கப்படுபவை அப்பாவி மக்களும் அறமும்.

வேறொரு தீர்க்க முடியாத கவலையும் பின்லாடனை இட்டு எனக்கு உண்டு. எமது ஈழத் தேசிய விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டமைக்கும் அவர் முக்கியமானவர் ஆகிறார். அவரது செப்டெம்பர் 11 இரட்டைக் கோபுரத்தாக்குதலின் பின்னரே விடுதலைப் போராட்ட அமைப்புக்கள். பயங்கரவாத அமைப்புக்களாக சித்தரிக்கப்பட்டன. சில நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்ததும் அதன் பின்னரே.

இவை இவ்வாறிருக்க பின்லாடனின் சாவையிட்டு எங்ஙனம் கவலை கொள்வது? அமெரிக்காவின் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டினார் என்ற ஒன்றைத்தவிர பின்லாடனை மெச்ச எனக்கு வேறு ஒன்றுமில்லை.

அந்தச் சாவிலும் பார்க்க சாய்பாபாவின் சாவை முக்கியமெனக்கொள்ளமுடியவில்லை. ஆயினும் கவனத்தில் எடுக்கவேண்டிய சாவு அது. 'நாத்தீகனையும் நம்பலாம் ஆஸ்தீகனையும் நம்பலாம் ஆனால் நான் தான் கடவுள் என்று சொல்பவர்கள் தான் ஆபத்தானவர்கள்' என்று கமல் காசன் ஒருதிரைப்படத்தில் சொல்லியிருந்தார். அதுமகா உண்மை.

சாய்பாபாவை கடவுளின் அவதாரம் என்றே அவரை வழிபடுவோர் விசுவாசிப்போர் நம்புகின்றனர். சாய்பாபாவும் அதற்கு ஓம் என்னுமாப்போல கள்ளமௌனம் காத்தார். அதுமாத்திரமின்றி அற்புதங்கள் சித்துவேலைகள் செய்து தான் கடவுள் அல்லது கடவுள் அவதாரம் என நிரூபிக்க முயன்றார். இது மிகக்கடூரமா நம்பிக்கைத் துரோகம். அதர்மமான செயல்களிலேயே மிக மோசமானது நம்பிக்கைத் துரோகம்.

சிலர் சொல்லக்கூடும் அவர் தர்மகாரியங்கள் பலசெய்கிறாரே என்று அப்படிப்பார்க்கையில் கருணாநிதியும் சமத்துவபுரம் அருந்ததியர், முசுலீம்களுக்கான இட ஒதுக்கீடு திருநங்கையர் நலவாரியம், ஒரு ரூபாவுக்கு ஒருகிலோ அரிசி என்றெல்லாம் பல நன்மைகள் செய்திருக்கிறார்.

அரச பணத்தை எடுத்துத் தானே கருணாநிதி இவற்றைச் செய்கிறார் என்று சாய்பாபா விசுவாசிகள் இதனைக் கேட்கலாம். சாய்பாபா யாருடைய பணத்தை எடுத்துச் செய்கிறார். அத்தனையும் அவருடைய அப்பன் வீட்டுச் சொத்தா? மக்களைப் பேய்க்காட்டி மக்களிடமிருந்து சுரண்டிய பணம் தானே அவை.

இதற்கு தமிழருவி மணியனின் ஓர் உதாரணத்தை இரவல் வாங்கிச் சொல்கிறேன். ' என்ன தான் ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுக்கு முன்பு மது அருந்தினாலும், சிகரட் புகைத்தாலும், வெற்றிலை போட்டுத் துப்பினாலும், இடையிடையே பாடம் நடத்துகிறாரே அது போதாதா?' இதை அவர் கருணாதிக்குச் சொன்னார். நான் அதை சாய்பாபாவுக்கும் பொருத்துகிறேன்.

சாய்பாபா மீது இப்படிக் கறாரான கருத்துக்களை வைக்கிறேன் என்றால் அதன் காரணம் சர்பாபா மீது என் தனிப்பட்ட கோபம் என்பதல்ல. ஆன்மீகத்தில் எனக்குள்ள ஆத்திரமும் அல்ல. எல்லா மதங்களையும் ஒன்று போலவே கருதுகிறேன் அதாவது நான் எந்த மதத்திலும் இல்லாதவன்.

ஆன்மீகத்தைப்பேசியபோதும் 'வாடிய பயிரைக்கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று மக்களின் பசியைப் போக்கி வாழ்ந்தாரே வள்ளலார் அவரை நான் உன்னதர் என்பேன். யாவரிலும் மேலாக அவரை உச்சத்தில் ஏற்றி வைத்து மெச்சுவேன்.

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

பத்து வயதுப் பாலகனாயிருந்த நாட்களில் நான் சாய்பாபாவின் பக்தன். 1971ம் ஆண்டு மகாசிவராத்திரிக்கு நாங்கள் குடும்பமாக திருக்கேதீச்சரம் போனோம். ரெயின் செட்டிக்குளம் தாண்டிய பிறகு இரண்டு அண்ணன்மார் எங்கள் பெட்டிக்குள் ஏறினர். அப்போது அவர்கள் ஒரு புதிய பெயரை எங்களுக்குச்சொன்னார்கள். அது சாய்பாபா.

அவரது அற்புதங்களை அடுக்கினார்கள். சாய்பாபாவின் படத்திலிருந்து வீபூதி கொட்டுகிறது. கையைத்திறந்தால் தங்கக்காசு கார்த்திறப்பு எல்லாம் வருகிறது. அவரது தலைமயிரை வெட்டி நிலத்தில் போட்டால் பாம்பு பாம்பாக ஊருகிறது. தொண்டைக்குள் விரல் வைத்து பொன்னாலான சிவலிங்கம் எடுக்கிறார்.....

அந்தப்பருவம் இவை அனைத்தையும் நம்பச்செய்தது. ஆகவே எனக்குச்செய்ய சில காரியங்கள் இருந்தன. அதுவரை பாரதி விளையாட்டுக்கழகம் என இருந்ததை சாய்பாபா விளையாட்டுக்கழகம் என மாற்றினோம். அப்பாவை விட்டுக் கலைத்து சாய்பாபா படம் வாங்கி சுவாமி அறைக்குள் சுவாமிகளோடு சுவாமியாக வைத்தேன். சாய்பாபா ஜெயந்தி அன்று சுண்டல் அவித்து பூசை செய்தோம். ஆயினும் சாய்பாபா படத்திலிருந்து வீபூதி கொட்டுண்ணவில்லை.


அந்தச்சிறுவயதில் எனக்கு சமயம் படிப்பித்த வினாயகரத்தினம் ஆசிரியர் தான் கொஞ்சமேனும் என் கண் திறந்தார். 'நான் கடவுள் அல்லது கடவுளின் அவதாரம் என்று சொல்கிற எவரையும் நம்பாதே அப்பர், சம்பந்தர் போன்ற நாயன்மார் எப்பவேனும் தாங்கள் கடவுள் என்று சொன்னார்களோ? நான்தான் கடவுள் என்று சொன்ன தக்கன் அடைந்த முடிவு உனக்குத் தெரியும் தானே மந்திர வித்தைக்காரர்களை நம்பாதே'

அந்தச் சிறுபருவத்தில் எனக்குப் பாதி புரிந்தது. இப்பொழுது மீதியும் புரிகிறது. சாய்பாபாவின் வாழ்வில் மர்மங்கள் உள்ளன. புட்டபத்தியில் பல கொலைகள் நிகழ்ந்தன என்பதும் என் காது அறிந்த சங்கதி. ஆதாரம் என்னிடம் எதுவும் இல்லை ஆனால் என்னிடம் ஒரு கேள்வி உண்டு.

மனிதரின் ஆதார பண்பு எது ? நேர்மை என்பதே அதன் பதில் நேர்மை உண்டெனில், வாய்மை தவறாது. அடிப்படை நேர்மை இல்லாதவர் மனிதரே அல்லர். சாய்பாபா என்ற கடவுள் அவதாரத்துக்கும்' அது பொருந்தும்.




துன்பம் தொலைந்தது.. போம்.. போம்..




## மக்கள் களம் - (யாழ்)

### இந்தியா, இலங்கைக்குத் துணை போகாமலாவது இருக்க வேண்டாமா? - *சு.ப.வீரபாண்டியன் கேள்வி!*


சு.ப. வீரபாண்டியன், வீரமணி எல்லோரும் முள்ளிவாய்க்காலில் தமிழனின் கடைசி இரத்தம் வடியும் மட்டும் முதலைமைச்சர் கருணாநிதியின் நண்பர்களாயிருந்தவர்கள். அன்று கொடுக்காத குரலை.... இன்று கொடுத்து என்ன பிரயோசனம்?

*- தமிழ்சிறி*

சுபவீரபாண்டியன் ஒரு அரசியல் விபச்சாரி. தன்னைத் தமிழின ஆர்வலர் என்று காட்டிக் கொண்டே பணத்துக்காகக் அதே தமிழையும் காட்டிக் கொடுக்கத் தயங்காத விபச்சாரி.

முள்ளிவாய்க்காலில் தமிழினம் துடி துடிக்க கொல்லப்பட்டபோது அந்தக் கொலைக்கு தன்னாலான அனைத்து ஆதரவையும் கொலைகாரக் காங்கிரஸுக்கு கருணாநிதி வழங்கிக் கொண்டு இருந்தபோது எந்த விதக் கூச்சமும் இல்லாமல் அவனை ஆதரித்து, 'இனக்கொலையா, அப்படியொன்றும் நடக்கவில்லையே' என்கிற கருணாநிதியின் பிதற்றலை வழிமொழிந்த கயவன். இவனும், வீரமணி, வைரமுத்து போன்றவர்களும் பணத்திற்காக தங்கள் இன மானம், ரோஷம், போன்ற எல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைத்து விட்டு தங்கள் பைகளை நிரப்பக் காத்திருக்கும் வியாபாரிகள், விபச்சாரிகள்.

*- ரகுநாதன்+++*



உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுங்கள் !

UK இல் வசிக்கும்
- 34 வயது (BSc) Citizen
- 31 வயது (Electrical Engineer)
- 29 வயது (BBA)
- 27 வயது (Graduate )Student Visa

மணமகன்கள்

USA இல் வசிக்கும்
- 38 வயது (America Express Bank-Accountant)
- 36 வயது

மணமகன்கள்

மணமகன்கள் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு : 02086720673, 07904535905

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ***ஒரு பேப்பர்*** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
| --- | --- |
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. Age 30, 5'6", PSW Visa in UK, Engineer, looking for a suitable bride with PR or . Ref: 3352

2. Age 40, 5'3", UK PR, A/L finished, looking for a suitable bride. Ref: 3368

3. Age 33, 5'7", Canadian PR, Computer Engineer, looking for a well-educated bride. Ref: 3367

4. Age 35, 5'5", British Citizen, Graduated, looking for a suitable bride. Ref: 3346

5. வயது 27, 5'8", Student Visa, Graduated, ,லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகளை தேடுகின்றார். Ref: 3361

6. Age 33, 6'2", UK PR, Engineer, Divorced, got a child, looking for a suitable bride. Ref: 3360

7. வயது 36, 5'6", A/L finished, இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார் Ref: 3355

8. Age 29, 6'1", Student Visa, Graduated, looking for a matching bride with UK PR or Citizenshhip. Ref: 3349

9. Age 29, 5'8", HSMP Visa in UK, MSc qualified, looking for an educated bride. Ref: 3344

10. வயது 30, 5'9", MBA finished, PSW Visaஇல் இருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3341

11. Age 37, 5'6", Graduate, Student Visa in UK, looking for a bride with UK Citizenship. Ref: 3339

12. Age 24, 5'4", Graduate, Student Visa in UK, seeking a suitable bride with UK Citizenship. Ref: 3338

13. வயது 35, 5'9", UK PR, Graduate, மணமகன் நன்கு படித்த துகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3337

14. வயது 28, 5'6", இலங்கையில் IT Companyஇல் வேலை செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3331

15. Age 33, 5'4", UK PR, looking for a Suitable bride. Ref: 3329

16. Age 30, 5'5", British Citizen, BSc in Computer Science, looking for a well educated bride. Ref: 3291

17. Age 29, 5'8", British Citizen, Financial Sector, seeking well educated girl. Ref: 3301

18. வயது 38,5'7", PR in UK, லண்டனில் கடையில் வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3289

19. Age 39, 5'5", British Citizen, Doctor, Divorced, looking for a well educated bride who live in UK. Ref: 808

20. வயது 36, 6' Franceஇல் வசிக்கும் மணமகனுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகளை தேடுகின்றனர். Ref: 3288

21. Age 35, 5'5", Student Visa in UK, Graduated, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 3292

22. Age 32, 6", UK PR, working in a shop, looking for a suitable bride. Ref: 3310

23. வயது 30, 5'9", MBA finished, Work Permit Visaஇல் வசிக்கும் மணமகனுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3325

24. Age 37, 5'8", Canadian Citizen, Self-employed, looking for a suitable bride. Ref: 1409

25. Age 45, 5'11", British Citizen, Divorced, working as Practicing GP, seeking matching bride. Ref: 3298

26. 32, 6', British Citizen, Doctor, looking for a well educated girl. Ref: 925

27. வயது 35,5'5", இலண்டனில் Student Visa,ல் MBA படித்துக்கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3292

28. Age 29, 5'5", British Citizen, Software Engineer, looking for a educated bride. Ref: 3291

29. Age 29, 5'8", British Citizen, Bsc Graduate, looking for a well educated bride. Ref: 3301

30. Age 29, 5'9", Doctor, UK born, looking for a well educated bride. Ref: 3271

31. Age 29, 5'6", doing his Bachelor Degree, British Citizen, looking for a suitable bride. Ref: 3274

32. Age 28, 5'6", Self-Employed, British Citizen, seeking a matching bride. Ref: 3272

33. வயது 32, 5'6", இலங்கையில் Photo grapher ஆக பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3270

34. வயது 32, 5'3", MSc student, Student visa in UK, நன்கு படித்த தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3281

35. Age 47, 5'4", Doctor, No visa in UK, looking for a educated bride. Ref: 3267

36. Age 55, 5'2", A/L finished, UK PR, searching for a matching bride. Ref: 3269

37. Age 31, 5'7" A/L finished Living in US looking for a Suitable Bride Ref: 3258

38. Age 31, 5'6" IT Engineer working in a company in UK, German Citizen looking for a Suitable bride Ref : 3254

39. Age 37, 5'9", Engineer, British Citizen, seeking well educated bride in UK. Ref: 1084

40. Age43, 5'10", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 912

41. வயது 37, 5'7", A/L finished, UK PR, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 781

42. வயது 32, 5'3", IT Qualified, British Citizen, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 1208

43. Age 27, 6", Self-Employed, British Citizen, looking for a suitable bride. Ref: 587

44. வயது 26, 5", இலண்டனில் Student Visa மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3259

45. வயது 35, 5'5", O/L finished, UK PR, தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3263.

46. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

47. Age 37, 6", UK PR, A/L finished, looking for a matching bride. Ref: 2916

## மணமகன் தேவை

1. Age 27, 5'5", British Citizen, working as a Commercial Financial Analyst, looking for a well-educated groom. Ref: 3371

2. Age 40, 5'2", British Citizen, Graduated, seeking for an educated groom in UK. Ref: 3362

3. Age 31, 5'6", British Citizen, Accountant, looking for a well-educated groom. Ref: 3365

4. Age 26, 5'8", British Citizen, Medical Sector, searching for a professional groom in UK. Ref: 3359

5. வயது 42, 5'6", Canadian PR, Medical Sector, நன்கு படித்த மணமகனை தேடுகின்றார். Ref: 3358

6. வயது 19, 5'2", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3348

7. வயது 34, 5'5", IT qualified, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3342

8. வயது 30, 5'7", Engineer, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3340

9. Age 33, 5'2", Medical Sector, Living in Sri Lanka, looking for a matching groom. Ref: 3336

10. Age29, 5'6", A/L finished, living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3335

11. Age 33, 5'4", Living in SriLanka, Graduate, looking for an educated groom. Ref: 3345

12. Age28, 5'5", British Citizen, Accountant, looking for a well educated groom. Ref: 3316

13. Age 33, 5'2", British Citizen, Doctor, looking for a well educated groom. Ref: 3307

14. Age 27, 5'3", British Citizen, Doctor, seeking matching and well educated groom. Ref: 3308

15. வயது 29 5'3", Tourist Visa in UK, A/Lபடித்த பெண்ணுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகன்ன தேடுகின்றனர். Ref: 3313

16. வயது 33, 5'6", இலங்கையில் Accountant ஆக வேலைசெய்யும் பெண்ணுக்குநன்கு படித்த இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனை தேடுகின்றனர். Ref: 826

17. Age 41, 5'6", British Citizen, Pharmacist, seeking educated groom. Ref: 3290

18. வயது 25, 5", இலங்கையில் வசிக்கும்A/L படித்த பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 1222

19. Age 29, 5'3", Tourist Visa in UK, worked in a bank in Jaffna, looking for a matching groom with UK PR or Citizenship. Ref: 3314

20. வயது 41, 5'6", British Citizen, Pharmasist, நன்கு படித்த தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 3290

21. வயது 26, 5'6", Psygologist, கொழும்பில் வசிக்கும் பெண்ணுக்கு இலண்டனில் நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3299

22. Age 32, 5'5", A/L finished, Student Visa in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3302

23. Age 25, 5'2", Bio Medical Engineer, Australian Citizen, looking for a educated groom. Ref: 3282

24. வயது 34, 5'5", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3268

25. வயது 33, 5'2", A/L finished, இந்தியாவில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3278

26. Age 24, 5'6", BA finished, looking for a suitable groom with UK citizenship. Ref: 3277

27. Age 29, 5'4", Doctor, Australian Citizen, looking for a well educated groom. Ref: 3232

28. Age 28, 5'4", BSc degree holder, British Citizen, serching for a matching groom. Ref: 1596

29. வயது 25, 5'4", Accountant Student, இலண்டனில் Student Visa,ல் இருக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3260

30. வயது 26, 5'4", இலங்கையில், BA final year படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3257

31. Age 32, 5'4", Doctor, Stident visa in UK, looking for a matching groom in UK. Ref: 3243

32. வயது 32, 5'2", ஆசிரியையாக இலங்கையில் வேலை செய்யும் பெண்ணுக்கு இலண்டனில் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3240

33. Age 31, 5'4", Architect, British Citizen, looking for a well educated groom. Ref: 3227

34. வயது 29, 5'2", Account Student, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 881

35. வயது 32, 5'4", Architect ஆக வேலை செய்யும் ஜேர்மனிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 589

36. 42 வயது, 5'2", ஆசிரியையாக இலங்கையில் பணிபுரியும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2622

37. 26 வயது, 5'3", நோர்வேயில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2749

38. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

39. 31 years, 5'4", Architect & self employed, German Citizen, living in UK, looking for a well educated groom. Ref: 589

40. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

41. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

42. 28 வயது, 5'2", இலங்கையில் ஆசிரியராக பணிபுரியும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 2392

43. 30 வயது, 5'6", A/L finished, கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை எதிர்பார்க்கின்றனர். Ref: 2496

44. 50 வயது, 5'6", Finished Hotel Management in Colombo, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 804

45. 49 வயது, 5'6", Finished Hotel Management, Canadian Citizen, பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 805

46. 41 years, 5'4", Doctor, Living in Sri Lanka, looking for a educated groom anywhere. Ref: 1514

47. 43 years, 5'1", A/L finished, Living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref 2119

48. Age 29, 5'5", working as a Financial Analyst, British Citizen, looking for a well educated groom. Ref: 2175.

49. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

50. Age 28, 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

51. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, லண்டனில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

52. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

53. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

54. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylonஇல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகினறனர். Ref: 1871

55. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782


56. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

57. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவனத் திருவிழா



அண்மையில் Tooting அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நடந்தேறியது. பூங்காவனத்திருவிழாவும் அதில் ஒரு அம்சம். வழமை போல இலை, தழை, கிளைகளாலும், பூங்கொடிகளாலும் கோயிலின் ஒரு மூலையில் பூங்காவனம் மாதிரி உருவாக்கப்பட்டிருந்தது. ஐயர்மாரினதும் ஓரிரு தொண்டர்களினதும் அயராத உழைப்பின் சிறப்பு அது. ஒரு புறமாக ஒரு தடாகம். அதில் தாமரை இலைகளோடு பூ. பொம்மை அன்னங்கள். ஒரு புறம் தொங்கும் கூட்டுக்குள் ராணி அக்கா வீட்டு லவ்பேர்ட்ஸ், அத்துடன் வர்ண மின்சார ஒளி அலங்காரத்துக்கு நடுவே பல வர்ண மலர் அலங்காரங்களோடு அம்மன். ரம்மியமான ஒரு பூங்காவனச்சூழல் உருவாக்கப்பட்டிருந்தது.

தாயக திருவிழாக்களில் இடம்பெயர்வு சூழல்களால் தடைப்பட்டிருந்த போதும், புலம்பெயர் நாடுகளில் உள்ள வசதிகளை கொண்டு தொடரும் சமய செயற்பாடு இது. மூன்றாம் மாடியில் ஒடுக்கு மூலையில் இதனை பார்த்து மகிழ்ந்த வேளையில் மூன்று வீதிகளும் கோபுர வாசலும் நிறைந்த ஊர்க்கோயில்களின் பிரசித்தி பெற்ற பூங்காவனத்திருவிழா நினைவுக்கு வந்தது.

ஊருக்கு ஊர் திருவிழா கொண்டாட போட்டா போட்டியாக எண்பதாம் ஆண்டு வரை பூங்காவன திருவிழாக்களும், பிற திருவிழாக்களும் இடம்பெற்றன. அளவெட்டி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன், கரவெட்டியாக்கரை, நாகர் கோயில் என்பன வருடா வருடம் நடைபெறும் திருவிழாக்களால் பெயர்பெற்றவை. குறிப்பாக பூங்காவன திருவிழாக்களில் சிகர சப்பற சோடினைகள், வான வேடிக்கை, தமிழ் நாட்டில் இருந்து பிரபல பாடகர்கள், நாதஸ்வர, தவில் வித்வான்கள் ஆகியோரின் வருகை ஆகியன சிறப்பூட்டும் திருவிழா நிகழ்ச்சிகளாக அமைந்தன.

அளவெட்டி கும்பளாவளை ஆலயம் 7ம் திருவிழாவுக்கும், பூங்காவன திருவிழாவுக்கும் பெயர் போனவை. என் சின்ன வயதின் சிறப்பு பதிவுகள். இன்றும் மறக்க முடியாதவை. இந்த இரண்டும் போட்டியாக நடந்த திருவிழாக்கள். பூங்காவனம் சுருட்டு தொழிலாளர்களின் உபயம். 7ம் திருவிழா ஒரு சமூகம் சார்ந்த தொழிலாளர்களின் திருவிழா. அம்பனை வயலை தாண்டி அழகொல்லைக்கு அப்பால் வடக்கு அளவெட்டியில் அமைந்த கோயில் அது. பல மைல் தொலைவிலிருந்து பார்த்தாலே மின்சார வெளிச்சம் பூங்காவன திருவிழா நடைபெறும் கும்பளாவளை பிள்ளையார் ஆலயத்தை அடையாளம் காட்டிவிடும்.

சைக்கிளில் போவது சுலபம், ஆனால் சைக்கிள் பார்ட்ஸ் டைனமோ, ஹெட் லைட், பார் கிளிப் என்பன களவுபோகும் அபாயம் அதிகம். நடந்து போக மட்டும்தான் வீட்டில் அனுமதி கிடைக்கும். திருவிழா இரவிரவாக நடக்கும். அதிகாலை விடிய சுவாமி வீதி உலா வரும்போது வடக்கு வீதியில் நிகழ்ச்சி அவசர அவசரமாக நிறைவுக்கு வரும். இரவு ஏழு, எட்டு மணிக்கு பிறகு இரவு சாப்பாட்டையும் முடித்துக்கொண்டுதான் புறப்படுவோம். மாட்டு வண்டிலில் போவோரும் உண்டு. குடும்பமாக போய் வெளி வீதியில் விரித்து உட்கார்ந்து பார்க்க கையோடு பாயும் கொண்டு போவார்கள்.

நிகழ்ச்சிகள் கோயில் மேளத்தில் ஆரம்பமாகி, தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி, வாக்கன் கணேஷ், மற்ற கணேஷ், சிதம்பரநாதன் கோஷ்டி என்று பிரபல தவில் நாதஸ்வர கச்சேரிகள் இரவு ஒரு மணிவரை நடைபெறும். இடையே சின்னமணி கோஷ்டியின் வில்லுப் பாட்டு, கண்ணன் கோஷ்டியின் மெல்லிசை நிகழ்ச்சி, புத்தூர் சின்ன மேள கோஷ்டியின் நடனம் என்பன போன்ற நிகழ்ச்சிகளாலும் மேடை கலகலக்கும்.

மூன்றாம் வீதியை சுற்றிலும் சிகர, சப்பற மணவறை சோடினைகள். ஒவ்வொரு வீதியிலும் ஒரு பனை உயர சிகரங்கள். பல வர்ண சித்திரங்களோடு அமைந்திருக்கும். இடையிடையே சப்பற மனவறை சோடினைகள். சுமார் ஆறு ஏழு வரையான சிகரங்கள், பன்னிரெண்டு வரையான சப்பறங்கள், எண்ணுக்கணக்கில் அடங்காத மணவறைகள் அனைத்தும் வீதியில் நிறைந்திருக்கும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

வாசல் முதல் பத்தடிக்கு ஒன்றாக ஒரு கம்பம் வர்ண ரீயூப் பல்ப்புகளால் ஒளியூட்டும். சிகரங்கள், மணவறைகள் ஆகியனவற்றை ஒளியூட்ட வெளிப்புறத்தில் பத்து பன்னிரெண்டு மின்சார என்ஜின்கள் இரைச்சலோடு இயங்கி கொண்டிருக்கும். இரு மருங்கிலும் ஒளியூட்டும் கம்பங்களை இணைத்து வீதி நெடுக மணிக்குஞ்சர மாலைகள் முழத்துக்கு ஒன்றாக அழகுடன் தொங்கும்.


சுடச்சுட தாச்சிகளில் கடலை வறுத்து விற்கும் கடலைக்காரர்கள். சோளம், மணிலா, கடலை என்று பால் பேணியால் அளந்து கடதாசி பைகளில் போட்டு விற்பனை செய்வார்கள். இவர்களில் பெரும்பாலும் விற்பனையாளர்கள் கிழவிகள்தான். கிழிந்து தொங்கும் அவர்களது காது ஓட்டைகளில் தொங்கும் பெரிய கடுக்கன் தோடு கால் இறாத்தல் எடை தேறும். கடலைக்காரர்கள் இல்லாத திருவிழாக்கள் இல்லை என்ற அளவிற்கு கடலை வியாபாரம் கோயில் திருவிழாக்களொடு இணைந்த ஒன்று. தும்பு முட்டாஸ் விற்பனை, ஐஸ்பழ வியாபாரி, ஐஸ்பரவான், றபர் மிட்டாய் விற்பனை, கடலை வியாபாரி, காற்றாடி, பனங்குட்டான், பாய், ஓலை குஞ்சுப்பெட்டி, கடக விற்பனை, அலுமினீய பாத்திர விற்பனை, பொம்மை கடைகள், மணிக்கடைகள் என்று வீதியை சுற்றிலும் அணி அணியாக கடைகள். வாத்துக்கு வளையடுதல், வட்டத்துக்குள் அம்பெறிதல் என்ற கட்டுப்பண விளையாட்டுக்களும் ஒரு புறம் நடக்கும். வெற்றி பெற்றால் மும்மடங்கு பணம். எலும்பு கூடாக மாறும் பெண் என்பன போன்ற மாயாஜால வித்தைகளும் காட்சிப்படுத்தப்பட்ட காலங்களும் உண்டு அம்மம்மா குழல் என்ற பலூனை ஊதியும் சத்தப்படுத்தியும் சிறுவர் கோஷ்டி, சிரித்து சத்தம் எழுப்பியபடி சுற்றி திரியும் இளைஞர் கோஷ்டி, குஷியோடு சுற்றி திரியும் காதலர் கூட்டம் என்பனவும் பூங்காவன காட்சிகள்.

காதலர் ஓடிப்போதல், பொம்பளை தூக்குதல் போன்ற கிராமிய காதல் கதைகள் அரங்கேறுவதும் கூட இந்த பூங்காவன திருவிழாக்களில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள். சுற்றி அலைந்து ஒரு புறமாக படுத்து உறங்கும் சிறுவர்களின் தலை முடியை அங்குமிங்குமாக கத்தரிக்கோலால் வெட்டி அலங்கோலப்படுத்துவதும் சில இளைஞர்களின் திருவிழா சேட்டைகள்.

கலை நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்தை சுற்றி நிற்கும் கூட்டத்தை விட வீதியை சுற்றி வரும் கூட்டங்களே அதிகம். வான வேடிக்கை திருவிழா நிறைவு நிகழ்ச்சியாக நடைபெறும் ஒரு அற்புத நிகழ்ச்சி. ஈக்கிள் வாணத்தால் அடுக்கப்பட்ட ஆகாய கோட்டை, அழகிய சப்பறம் போல் அமைக்கப்பட்டு ஒரு கம்பியில் ஓடி வரும் அனுமான் அந்த வான வர்ண சப்பறத்துக்கு எரியூட்டுவது போன்ற அமைப்பு வான வேடிக்கை மிகவும் அற்புதமானது. ஆறு ஏழு நிமிடங்கள் அளவில் அந்த வர்ண சப்பறம் எரிந்து அழகு காட்சி தரும்.

வானக்கார வைரமுத்தர், சபாரத்தின ஐயர் ஆகியோர்தான் வழமையான வான வெடி குத்தகையாளர்கள். சபாரத்தின ஐயரின் அவுட்டு வானம் ஆகாயத்தில் பல வண்ண வெளிச்சத்தை கக்கி வெடித்து சிதறும் அழகு வான வில்லையும் தோற்கடித்துவிடும்.


திருவிழா முடிய விடியும். நித்திரைக்களை முகத்தோடு பாய், அலுமினீய பாத்திரங்கள், கடலைப்பை என்று தம் கொள்முதல்களொடு சாரி சாரியாக சனம் வீடு திரும்பும். இப்படியான திருவிழாக்களை தமிழீழத்தில் இனி காணமுடியுமா? அது ஒரு அழகிய கனாக்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குனர்களின் தொடர் கலாச்சாரம் !!



அண்மையில் இயக்குநர் பாலாவின் அவன்-இவன் திரைப்படப் புகைப்படங்களைப் பார்க்க நேர்ந்தது. கதைகளும் மாந்தர்களும் தொடர்ந்து ஏன் ஒரே மாதிரியான வார்ப்பில் இருக்கிறார்கள் என்று யோசிக்கிறேன். தமிழ் சினிமாவில் யதார்த்தமான சித்தரிப்பு என்பதே அபூர்வமானது என்பதும் மாறாக எல்லாமே அதிலிருந்து விலகி போலித்தனமான அழகியல்தன்மையைப் தொடர்ந்து போற்றிப் பார்ப்பது தமிழ் சினிமாவிற்கு உரித்தான அபத்தங்களில் ஒன்று என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். செத்து பிணமாய்க் கிடக்கும் காட்சியிலும் மருத்துவமனையில் ஆறு மாதமாய் படுத்துக் கிடக்கும் காட்சியிலும் தூங்கி எழுந்த காலை கொட்டாவியிலும் கூட பிளாஸ்டிக் 'ஒப்பனை'யை கைவிடாத விநோத உலகம். ரிக்ஷாக்காரனாய், பிச்சைக்காரனாய் இருந்தாலும் ரீபோக் காலணி போட்டிருக்கும் அதிசயம் அங்குதான் நடக்கும்.

செட்டுக்களிலிருந்து வெளிவந்து அசல் கிராமத்தை காண்பித்தவர் என்று பாரதிராஜாவின் மீது பொதுவான சிலாகிப்பு உண்டு. ஆனால் அவர் கூட அசலான கிராமத்தைக் காண்பிக்க வில்லையே? என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. பச்சை பசேலென்றே வயல்களில் வண்ணத்துப் பூச்சிகள் படபடக்க, தாமரை நீர்க்குளங்களில், வேறு வேலை வெட்டியில்லாத காதலர்கள் 'தம்தனதம்தன' என்று தொடர்ந்து காதல் செய்துக் கொண்டிருப்பதும் அவர்களை தீவெட்டிகளை தூக்கி துரத்தி வரும் கிராமத்துக் காட்டான்களும். என்பதைத் தவிர பாரதி என்ன யதார்த்தமாக கிராமத்தை சித்தரித்து விட்டார் என்ற கேள்வி எழுகிறது? நகரத்தில் பிறந்த சத்யஜித்ரேவின் 'பதேர் பாஞ்சாலி'க்கு நிகரான ஒரு காட்சியைக் கூட கிராமத்தில் பிறந்த பாரதியின் திரைப்படங்களில் காணக் கிடைக்கவில்லை.

இந்த மிகையான அழகியல் சூழலில் பாலா முன்வைத்த அசலான மனநோயாளி தோற்றமுடைய 'சேதுவும்' 'முரட்டு இளைஞனான 'நந்தாவும்' பிதாமகன் சித்தனும் (தோற்றத்தில் மாத்திரம். -பாத்திர சித்தரிப்பில் ஒப்புதல் இல்லை) ஒரளவிற்கு ஆறுதலளித்தனர் என்பதை மறுக்க முடியாது. விளிம்புநிலை மனிதர்களை பிரேமின் ஓரத்தில் சில நொடிகளுக்கு மேல் காட்டாத, பொதுப்புத்தியில் படிந்துள்ள அதே சிந்தனைகளுக்குத் தப்பாமல் திரையிலும் சித்தரிக்கிற (வெள்ளையா இருக்கறவன் பொய் சொல்ல மாட்டாண்டா) தமிழ் சினிமாவின் மத்தியில் பாலா செய்து வரும் இந்த நுட்பமான புரட்சி ஒருவகையான ஆறுதலைத் தந்தது நிஜம்தான்.

ஆனால் ஏன் அவர் இதையே தனது டெம்ப்ளேட்டாக ஆக்கிக் கொண்டு தொடர்ந்து தனது திரைப்படங்களின் கதையையும் மாந்தர்களையும் ஒரே மாதிரியாக படைத்துக் கொண்டிருக்கிறார் என்கிற சலிப்பு 'அவன் இவன்' புகைப்படங்களை பார்க்கும் போது இயல்பாக ஏற்படுகிறது. இந்த வளையத்துள் பாலாவை மாட்டிக் கொள்ளச் செய்தது எதுவாக இருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன். 'வித்தியாசமான இயக்குநர்' என்று வந்துவிட்ட பெருமையா, 'நான் பாலா படங்களின் ரசிகன்' என்று மணிரத்னமே புகழ்வதில் ஏற்பட்ட கிறுகிறுப்பா, வழக்கமான இயந்திர வாழ்க்கையில் சலிப்புற்றிருக்கும் நடுத்தர வர்க்க பார்வையாளர்களுக்கு பாம்பு - கீரிச் சண்டை மாதிரி அவர்களின் வாழ்க்கையில் அபூர்வமாக சந்திக்கிற அல்லது சந்தித்தே இருக்காத அல்லது சந்திக்க விரும்பாத சூழலை, மனிதர்களைக் காட்டி மிரட்சியை ஏற்படுத்துவதா?

இயக்குநர் கே.பாலச்சந்தர் வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்திருந்தாலும் 'நடுத்தர வர்க்க' மனிதர்களையே தொடர்ந்து தேர்ந்தெடுத்து அதையொட்டியே காட்சிகளை அமைத்து ஒருவகையான கிளிஷேவில் மாட்டி பின்பு நீர்த்துப் போனார். 'கிராமத்தை அசலாக காட்டினவர்' என்று சிலாகிக்கப்பட்ட பாரதிராஜாவே சடக்கென்று மாறி அதே 'சப்பாணியை' 'நகரப் பின்னணயில்' சிகப்பு ரோஜாக்களாக, சைக்காலிஜிக்கல் திரில்லர் படங்களுக்கே உரிய படிமங்களுடன் எடுத்து ஆச்சரியப்படுத்தினார். இன்றும் நான் வியக்கும் விஷயம் அது. வெவ்வேறு வகையான சூழலை, மனிதர்களை, நிகழ்வுகளை வெவ்வேறு பின்னண்ணியில் அசலாக சித்தரிக்க பாவனை செய்வதே ஒரு திரை இயக்குனனின் முன்னுள்ள சவால். 'ஆர்ட் பிலிம்' என்றழைக்கப்படும் படங்களே ஒரே மாதிரியாக போராத்தாகத்தான் இருக்கும் என்று பொதுப்பார்வையார்களிடம் படிந்து போயிருக்கின்ற எண்ணங்களிடமிருந்து சத்யஜித்ரே படங்களும் தப்ப முடியவில்லை. ரேவின் படங்களை பார்த்திருக்காதவர்கள்தான் இந்த குற்றச்சாட்டை சொல்ல முடியும். அகம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான படங்கள், திரில்லர் படங்கள், குழந்தைகள் படங்கள், சமூகப் பிரச்சினையை ஆராயும் படங்கள் என்று பல்வேறு வகைமைகளில் அவர் முயற்சி செய்திருக்கிறார் என்பது அவரது படங்களை பார்த்திருந்தவர்களுக்கு தெரியும். இயக்குநர் என்பதைத் தாண்டி, ஓவியர், பத்திரிகையாளர், எழுத்தாளர் என்று பன்முகப்பட்ட ஆளுமை கொண்டவர் என்பதால் இது சாத்தியமாகியிருக்கலாம்.

தனது குருகுலத்திலிருந்து வெளிவந்தவர்கள், பெரும்பாலும் தனது குரு இயக்குநர்கள் எடுத்த அதே பாணியிலேயே தங்களின் படங்களையும் உருவாக்குவது பொதுவான வழக்கம், தமிழில் பாரதிராஜா பள்ளி, பாலச்சந்தர் பள்ளி என்று முன்உதாரணங்கள் பல உண்டு. ஷங்கர் வித்தியாசமான இயக்குநர் என்று பொதுவாக அறியப்பட்டாலும் தனது குருவான எஸ்.ஏ. சந்திரசேகர் எடுத்திருந்த 'ராபின்ஹூட்' வகைப்படங்களையே இன்னும் பிரம்மாண்ட மசாலாவாக, பல்வேறு சுவாரசிய மாய்மாலங்களுடன் எடுப்பவர் என்பதை சற்று உன்னிப்பாக கவனித்தாலே புரிந்துகொள்ள முடியும். (பாய்ஸ் விதிவிலக்கு). ஹாலிவுட் ஷங்கரான ஸ்பீல்பெர்க்கால் கூட தி கலர் பர்ப்புல், ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் போன்ற ஆப்-பீட் படங்களை எடுக்க முடிந்தது. ஆனால் இன்னமும் ஷங்கரால் தனது முதல் எளிய முயற்சியான 'மயிலை' திரையில் கொண்டு வர முடியாதபடியான வணிக கிளிஷே வட்டத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் பாலுமகேந்திரா பள்ளியிலிருந்து வெளிவந்திருந்தாலும் பாலாவால் தன்னுடைய குருவின் பாணியிலிருந்து எளிதில் வெளிவந்து தனக்கென பிரத்யேகமான ஒரு பாணியை உருவாக்க முடிந்தது. ஆனால், வித்தியாச மேக்கப்பில்தான் செய்தால் கமல்படம் என்று கமல் ஒரு வகையான வளையத்துள் மாட்டிக் கொண்டிருப்பது போல, அழுக்கான, கோரமான மனிதர்களை மையமாக வைத்து எடுப்பதுதான் பாலாவின் பாணி என்கிற வட்டத்தில் பாலாவும் மாட்டிக் கொண்டு விட்டாரே? என்று தோன்றுகிறது.

என் கவலை தேவையற்றது என்கிற சாத்தியத்தை 'அவன் இவன்' திரைப்படத்தின் உள்ளடக்கம் ஏற்படுத்துகிறதா என்பதை பெறுத்திருந்து பார்ப்போம். ?

*- சுரேஷ் கண்ணன்*

## திரை விமர்சனம்

# Thor




வீரத்திற்குரிய மமதையும், அகம்பாவ குணமும், அவசர புத்தியும் கொண்ட தேவனான தோர் அவன் செய்த ஒரு தவறுக்காக தந்தை ஒடானால் சபிக்கப்பட்டு தேவனிற்குரிய சக்திகளை இழந்து மானுடர்கள் வாழ்விடமான பூமிக்கு வந்துசேர்கிறான். பழைய புராணக்கதைகளில் கூட தேவர்களோ அல்லது முனிபங்கர்களோ ஏதேனும் அறத்தை மீறிய காரணத்திற்காக அழகிய சிட்டுக்களை நோக்கி கண்சிமிட்டல் போன்ற அற்ப நிகழ்வுகள் அவர்கள் கொண்டிருந்த சக்திகளை இழந்து சாதாரணர்களாக தண்டனை காலத்தை அனுபவித்ததை நாங்கள் படித்திருக்கிறோம். இத்தண்டனை காலத்தில் அவர்களின் நன்னடத்தைகள் அவர்கள் இழந்த பதவி, அதிகாரம், கவுரவம் மற்றும் சக்திகளை அவர்களிற்கு மீட்டுத்தரும் வல்லமையை கொண்டதாக இருக்கும். இயக்குனர் மற்றும் நடிகரான Kenneth Branagh இயக்கத்தில் வெளியாகியிருக்கும் திரைப்படமான Thorன் கதைகூட அப்படியான ஒன்றுதான்.

கண்டிப்பான ஒரு தந்தைக்கும், மகன்களிற்கும் இடையில் நிகழும் பாசத்திற்கான, அங்கீகாரத்திற்கான போராட்டங்கள், பொறாமை கொண்ட ஒரு சகோதரன், அவன் கொண்ட பொறாமை உருவாக்கும் விபரீதங்கள் என உருவாக்கப்பட்டிருக்கும் திரைக்கதையானது ஷேக்ஸ்பியரின் ஆர்வலரான இயக்குனர் கென்னத் பிரான்னாக்கிற்கு அல்வா சாப்பிடுவது போல, ஒரு ராஜ நாடகம் கொண்டிருக்கும் கம்பீரத்துடன் திரையில் ஜொலிக்கிறது தேவர்களின் உலகான ஆஸ்கார்டில் நிகழும் காட்சிகள். ஆஸ்கார்டின் பிரம்மாண்டத்தை அழகாக உருவாக்கியிருக்கும் கலைஞர்களை பாராட்டியே ஆகவேண்டும். திரையில் அகன்ற சட்டகங்களில் உருவாக்கப்பட்டிருக்கும் ஆஸ்கார்டின் காட்சிகள் அந்த ராஜ்யத்தின் பிரம்மாண்டமான இயல்பை மனதில் தக்க வைக்கின்றன. தோர் பாத்திரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நடிகரான Chris Hemsworth, முதலில் சற்று எரிச்சலைத் தந்தாலும் மமதையும், பெருமையும் கொண்ட தேவன் பாத்திரத்தில் பின்பு அட்டகாசமாக பொருந்திப் போய் விடுகிறார். தன் சக்திகளை இழந்து, பூமியில் வந்து விழும் அவர் தன்னை இன்னமும் ஒரு தேவனாகவே கருதிக் கொண்டு நிகழ்த்தும் செயல்கள் நகைச்சுவையாக கூறப்பட்டிருக்கின்றன. அவர் பின்னால் ஓடி அவன் மேல் காதல் வயப்படும் நாயகியாக நத்தாலி போர்ட்மேன் ஹாலிவூட் இலக்கணத்தை பிசகாது கடைப்பிடித்திருக்கிறார்.

ஆனால் தோரின் நண்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அந்த நான்கு பேரும் இத்திரைப்படத்திற்கு திருஷ்டி கழிப்பதற்காகவே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது என் கருத்து. அவர்களை கண்டாலே சுத்தியடி Thorன் சுத்தியலை இரவல் வாங்கி அவர்களை அடிக்கும் அளவிற்கு அவர்கள் பாத்திரங்கள் இருக்கின்றன.

ஆஸ்கார்ட் ராஜ்யத்தின் எதிரிகளான உறைராட்சசர்களுடன் நிகழும் மோதல்கள் சிறப்பாக இருக்கின்றன. மியோல்னீர் எனும் அபூர்வ சுத்தியலால் தோர் அடிக்கும் அடி மரண அடியாக இறங்குகிறது, அந்தச் சுத்தியினை ரசிக்க வைத்து விட்டார்கள் படுபாவிகள். அந்த மோதல்கள் உருவாக்கும் எதிர்பார்ப்புகளை எல்லாம் படத்தின் இறுதிப் பகுதி தீர்க்கவில்லை. மிகுந்த அட்டகாசமான ஆக்ஷன்களை எதிர்பார்த்துக் காத்திருந்த ரசிகர்கள் ஏமாந்து போவது தவிர்க்கவியலாது. படமும் சட்டென முடிந்து விட்ட ஒரு உணர்வை இறுதிப் பகுதி வழங்குகிறது. ஆனால் தோர் 2012ல் The Avengers ல் திரும்புவார் எனக்கூறி திரைப் படத்தை முடிக்கிறார்கள். அதில் என்ன சொல்லப்போகிறார்களோ?

*- கனவுகளின் காதலன்*



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

திரை விமர்சனம்

## அழகர்சாமியின் குதிரை



கதை வறட்சியோடு வெற்று பொழுதுபோக்குகளையும், களியாட்டங்களையும் திரையில் பார்த்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கோடை வெயிலை குளிர வைக்கும் கோடை மழையாக தமிழ்ச் சினிமா விற்குள் வந்துள்ள அழகர்சாமியின் குதிரையை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

கதையில்லாமல் சதையை மட்டுமே நம்பி தமிழ்ச் சினிமாவின் போக்கு போய்க் கொண்டிருக்கிறது என்றெல்லாம் டாஸ்மாக் கடை வாசலில் எழும் புலம்பல்களைப் போல கோடம்பாகத்தின் சந்து பொந்துகளில் கிசுகிசுக்கப்படும் பேச்சுக்கள் இனி நிறுத்தப்படலாம். கதைகள் எங்குதான் இல்லை...? நம்மிடையே இன்னமும் பேசப்படாத, வெளியில் சொல்லப்படாத கதைகள் நிறைய உள்ளன என்பதற்கு இந்தப் படமும் ஒரு சாட்சி.

மழையில்லாமல் வறட்சியோடு ஆண்டுகளை நகர்த்திக் கொண்டிருக்கும் தேனி, மல்லையாபுரத்து மக்களுக்கு இருந்த கடைசி நம்பிக்கை ஊரில் குடியிருக்கும் அழகர்சாமியின் மனம் குளிர அவரை ஆற்றுக்குத் தூக்கிவந்து இறக்கிவிட்டால் கோமாரி பொழியும் என்று நினைக்கிறார்கள்.

கூடவே அந்த ஊர் மக்களிடையே இருக்கும் பிரிவினையினாலும், தனி மனித கோபத்தினாலும் ஊர்த் திருவிழா நடக்காமலேயே போயிருக்கிறது..! இந்த முறை அழகரைத் தூக்கிவிடுவோம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கும்போது அழகரின் வாகனமான குதிரை வாகனமே காணாமல் போய்விடுகிறது..

அதனைத் தேடியலையும்போது நிஜ குதிரையே கிடைத்துவிட.. அழகராக பார்த்துதான் ஊருக்குள் நிஜக் குதிரையைக் கொண்டாந்து விட்டிருக்கிறார் என்ற பாமர நம்பிக்கையில் மக்கள் கொண்டாட்டத்தில் இறங்க.. அந்த நிஜக் குதிரையை நம்பி வாழ்க்கையை ஓட்டி வரும் அப்புக்குட்டி தனது குதிரையைத் தேடி வருகிறான்..

ஊர் மக்களுக்கு மழையும், அழகர் ஆற்றில் இறங்குவதும் முக்கியமாக இருக்க.. அப்புக்குட்டிக்கு குதிரை கிடைத்து அதன் மூலம் தனது கல்யாணம் நடக்க வேண்டும் என்பதும் முக்கியமாய் இருக்க.. கடைசியில் எந்தக் குதிரை ஜெயித்தது என்பதுதான் திரைப்படம்..!

கதையாக உருவெடுத்தபோதே விகடன் வாசகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை உண்டு பண்ணியிருந்தது இந்தக் குதிரைக் கதை..! நிறைய கிராமிய மணத்தை தூவி விட்டு அதகளப்படுத்தியிருந்தார் பாஸ்கர் சக்தி.

தாவித் தாவிப் பறந்து அடிக்கும் ஹிரோயிஸம் மிஸ்ஸிங்.. ஐ.நா. சபை செகரட்டரி அளவுக்கு வசனம் பேசும் தாதாயிஸமும் இல்லை..! கண்கவர் காட்சிகளை முனைப்புடன் கிராபிக்ஸ் செய்து அளிக்கும் மேல்பூச்சுக்களும் இல்லை.. இருப்பது ஒன்றே ஒன்று.. அது கிராமத்து வாழ்க்கை.. அந்த செம்மண் பூமியின் அத்தனை மூச்சுக் காற்றுகளையும் அலை மோதவிட்டு அனைத்தையும் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன்..!

மூலக் கதையில் இருந்து அதிகம் பிறழாமல் அப்புக்குட்டிக்கு மட்டும் ஒரு துணைக் கதையை கவிதை வடிவில் செதுக்கியிருக்கிறார். எந்தப் பக்கம் திரும்பினாலும் யதார்த்தமான மக்கள்.. கூடவே வரும் வாத்தியாராகவே இருந்தாலும், அவரது மகனை போலீஸில் போட்டுக் கொடுக்கும் ஊர்ப் பெரிசு ஒரு பக்கம்..! ஒரு நாள் கூத்தில் அரசனான கதையாக தான் குறி சொல்லும்போது மட்டும் தன்னை விரட்டும் ஊர்க்காரர்களை டேய்..! என்று அழைத்து தனது கோபத்தைத் தீர்த்துக் கொள்ளும் கோடங்கிக்காரன்..! குதிரையே வாழ்க்கை.. அதைத் தவிர வேறில்லை என்ற நினைப்பில் வெறியோடு வரும் அப்புக்குட்டி.. அவனது உருவத்தை பார்க்காமல் உள்ளத்தைப் பார்த்திருக்கும் அவனது வருங்கால மனைவி.. வரி வசூல் செய்ய வந்தவர்களிடம் காது கேளாதவர்கள்போல் நடித்து அனுப்பி வைக்கும் அந்தக் கிழவி.. மகள் சேமித்து வைத்த சில்லரைகளை வரியாக வாரிக் கொடுக்கும் ஒருவர்.. ஊருக்குள் ஒண்ணுக்குள்ள ஒண்ணாக இருந்தாலும் சமயம் பார்த்து காலை வாரிவிடும் பெரிசுகள் கோஷ்டி.. இவர்களுக்கிடையில் ஒரு காதல் ஜோடி.. ஒவ்வொரு ஊரிலும் தவறாமல் இருந்து தொலையும் ஒரு மைனர்.. என்று இந்தக் கதாபாத்திரத் தேடலில் அத்தனை பேரும் பெரிய ஸ்டார்கள் இல்லை. அனைவருமே மண்ணின் மைந்தர்கள்தான்..!

அப்புக்குட்டி அறிமுகமாகும்போது நடக்கும் அந்த சண்டைக் காட்சி பிரமாதம்.. சண்டையாகவும் இல்லாமல், இயல்பாகவும் இல்லாமல் எடுத்திருக்கும் அக்காட்சியைப் படமாக்கியிருக்கும் விதத்தை பாராட்டியே ஆக வேண்டும். பாடல் காட்சியில் வெயிலில் படுத்திருக்க குதிரை ஓடி வந்து நிழல் கொடுப்பதுபோல் சூரியனை மறைத்து நிற்கும் அந்த ஒரு காட்சியே போதும்.. குதிரைக்கும் அவனுக்குமான உறவைச் சொல்ல..!

பெண் பார்க்கக் கிளம்பும்போது தனது பருத்த வயிற்றை ஒட்டி வைத்துப் பார்த்து திருப்திபடும் அவன் பொண்ணு வந்தவுடன் அதேபோல் தனது வயிற்றை ஒட்டி வைத்து நிமிர்ந்து உட்காரும் கட்சியும் படு யதார்த்தம்.. யார்தான் செய்ய மாட்டார்கள் இதனை.. பாடலின் நடுவே வரும் ? உன்னைத் தொட்டுப் பார்க்கலாமா..?? என்று கேட்டு விட்டு தொடுகின்ற காட்சியும் கவிதை..!

இளையராஜாவின் இசைதானா என்ற சந்தேகம் ஆரம்ப காட்சிகளின்போது தெரிந்தது..! ஆனாலும் படத்தில் சிற்சில இடங்களில் பிரமாதப்படுத்தியிருந்தார். அவருக்கான இடம் பாடல் காட்சிகளில் ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டதால் அதிகமாக அவர் அலட்டிக் கொள்ளவில்லைய என்று தோன்றுகிறது.. குதிக்கிற குதிக்கிற குதிரை பாடல் காட்சியை படமாக்கியவிதம் அருமை..!

நல்ல கதை நல்ல சினிமாவை கொடுக்கும். நல்ல சினிமாவை நல்ல இயக்குநரால் தர முடியும்.. சுசீந்திரன் செய்து காட்டியிருக்கிறார். அதுவும் தனது மூன்றாவது படத்திலேயே இலக்கியத்தைக் கையாளும் தைரியம் அவருக்குக் கிட்டியிருக்கிறதே.. இதுவே ஆச்சரியமானது. பாராட்டுக்குரியது.. இவரைப் போலவே இனி வரும் இயக்குநர்களும் நல்ல கதைகளை நம் மண்ணில் இருந்தே எடுத்துக் கொடுத்தார்களேயானால் தமிழ்ச் சினிமாவுலகம் நிச்சயம் பயன்பெறும். அவசியம் பார்க்க வேண்டிய திரைப் படம் அழகர்சாமியின் குதிரை..!

*- தமிழன் (பதிவிடம் வலைப்பதிவில்)*

# சினித்துளி

## கைவிடப்பட்ட பொன்னியின் செல்வன்!



இராவணன் படத்தை அடுத்து மணிரத்னம் பொன்னியின் செல்வன் கதையை படமாக எடுக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இதனை உறுதிபடுத்தும் விதமாக விஜய், ஆர்யா, மகேஷ் பாபு, என பல்வேறு முன்னணி நட்சத்திரங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிலையில் தற்போது பொன்னியின் செல்வன் படம் கைவிடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை உறுதிப்படுத்தும் விதமாக படத்தில் ஒப்பந்தமானவர்களிடம் கேட்டால் தெரியாதென்கின்றனராம்

பொன்னியின் செல்வன் படமாக எடுக்க நினைத்து கைவிடப்பட்டது இது மூன்றாவது முறையாகும். ஏற்கனவே எம்.ஜி.ஆர் நடிக்க மகேந்திரன் இயக்குவதாக இருந்தது அடுத்து கமல் எடுக்க நினைத்து கைவிடப்பட்டது.

## பாலாவின் அவன் இவன் வருகிறான்!



பாலாவின் இயக்கத்தில் வெளியாக இருக்கும் அவன் இவன் திரைப்படம் மூன்று விதமான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. முதல் எதிர்பார்ப்பு - இயக்குனர் பாலாவின் படம், இரண்டாம் எதிர்பார்ப்பு - முழுநீள நகைச்சுவையால் உருவாக்கப்பட்ட படம்., மூன்றாவது எதிர்பார்ப்பு - விஷால் இப்படத்தில் மாறுகண் உடையவராக நடித்திருப்பது. அத்துடன் பாலாவின் படங்கள் என்றாலே இரண்டு மூன்று வருடங்களாகுமென்பதை பொய்யாக்கி, ஒரு வருட காலத்திற்குள் எடுக்கப்பட்டது.

இவ்வளவு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இப்படம், இம்மாதம் 27-ம் தேதி திரைக்கு வர இருக்கிறது பார்ப்போம் என்ன நடக்கிதென்பதை.!

## சிம்புவின் ஒஸ்தி!!



இந்தியில் சல்மான்கான் நடித்து சக்கைப்போடு போட்ட தபாங் படம் தமிழில் 'ஒஸ்தி' என்ற பெயரில் இயக்குநர் தரணி இயக்கத்தில் சிம்பு நடிக்கவிருக்கிறாராம். படத்தில் சிம்பு, ஜித்தன் ரமேஷ், ரேவதி உள்ளிட்டவர்கள் நடிக்கிறார்கள். தெலுங்கில் சூப்பர் ஹ்ட் பாடல்களைக் கொடுத்துவரும் பாய்ஸ் தமன்.எஸ் இசையமைக்கிறார். தரணி படங்களுக்கு கேமராமேனாக இருக்கும் கோபிநாத்தான் இந்தப் படத்துக்கும் ஒளிப்பதிவாளர் அது சரி ஒஸ்தி என்றால் என்ன ?

## விக்ரமின் வேந்தன் ரெடி!!



தெய்வமகன், பிதா, தெய்வத்திருமகன் என்று மூன்று கட்ட தலைப்புக்கு பின்னர் இறுதியாக 'தெய்வத்திருமகள்' என்று விக்ரம் படத்திற்கு பெயரிட்டுள்ளனர். இயக்குநர் விஜய் இயக்கியிருக்கும் இப்படம் விரைவில் வெளிவர இருக்கிறது. இந்நிலையில் 'தெய்வத் திருமகள்' படத்தை தொடர்ந்து, சீயான் விக்ரம் அடுத்து இயக்குநர் சுசீந்திரன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார் இப்படத்தில் விக்ரம் ஜோடியாக தீக்ஷா செத், மித்ரா, அபிநயா என மூன்று நாயகிகள் நடிக்கின்றனர்.

முழுக்க முழுக்க சண்டைக் காட்சிகள் நிறைந்த அதிரடியுடன் கூடிய படமாக இப்படம் எடுக்கப்பட இருக்கிறது. படத்திற்கு 'வேந்தன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.


பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் ஆனி உத்தரம் தேர்த்திருவிழா

£ 999 மட்டுமே!

## மற்றும் அறுபடை வீடு தரிசனம்

(12 நாள் சுற்றுலா)





**அறுபடை வீடுகள்**

மற்றும்...

- திருத்தணி
- பழநி
- திருப்பரங்குன்றம்
- பழமுதிர்சோலை
- திருச்செந்தூர்
- சுவாமிமலை
- தஞ்சாவூர் பெரிய கோவில்
- திருப்பதி
- ராமேஸ்வரம்
- மதுரை மீனாட்சி
- பிள்ளையார்பட்டி
- கன்னியாகுமரி



நினைக்க முக்தி திருவண்ணாமலை, தரிசிக்க முக்தி சிதம்பரம், பிறக்க முக்தி திருவாரூர், இறக்க முக்தி காசி இடங்களுக்குச் சென்று வர எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவ்வாறானதொரு வாய்ப்பை இச்சுற்றுலா மூலம் ஒழுங்கு செய்துள்ளோம்.

ஆறுபடை வீடும் சிவ ஸ்தலங்களையும் முறையாக தரிசனம் செய்ய 14 நாட்கள் கொண்ட ஒரு ஆன்மீகச் சுற்றுலா.

**June 22ம் திகதி புறப்பட்டு July 09ம் திகதி திரும்பும் சுற்றுலாவில் கலந்து கொள்ளுங்கள்**

ஆலப்புழை செல்பவர்களுக்கு அறுபடைவீடு தரிசனம் இலவசம்.

£ 999 மட்டுமே

## ஆலப்புழை படகு சவாரி

- கன்னியாகுமரி
- திருச்செந்தூர்
- திருவண்ணாமலை
- மதுரை
- திருப்பரங்குன்றம்
- பழனி
- திருச்சி
- Chennai (Shopping)

(7 நாள் சுற்றுலா)

A/C வாகனம், A/C தங்குமிட வசதி, சுத்தமான சைவ உணவு மற்றும் குடிநீர் எல்லா வகையான வசதிகளும் செய்து தரப்படும்.



41 வருட அனுபவம்

# குமரன் TRAVELS

# அழையுங்கள் 020 7043 4319

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org